தேசீய கதா மாலிகா மலர் 2.

தென்னூர்க் கோகிலம்

— அல்லது —

தெருவில் வீழ்ந்த குறிப்புப் புத்தகம்.

ஷண்முகம் புஸ்தகம்

ஆக்கியோன்:

இ. சிவம்.

இதன் விலை] 1933. [அணா 12.

பெண்கள் நிலை.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்.
நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்.
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ.

நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே.

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

முகவுரை.

"ஒரு நாடு விடுதலை யடைய விரும்புமாயின், அது, அந்நாட்டுப் பெண்மணிகட்கு விடுதலையை வழங்க வேண்டும்" என்று கூறினார் இத்தாலிய வீரர் தோழர் மாஜினி. இக்கருத்தை விளக்கியோர் இந்தியப் பெரியாரும் "எந்த நாடு பெண்களை அடிமைப்படுத்துகின்றதோ, அந்த நாடு அடிமைப்படவே செய்யும்" என்ற மொழிகளைப் புகன்றிருக்கின்றார். இவ்வாறு உலகந் தெரிந்த மேதாவிகளெல்லாம் முழங்கியிருக்க, நம் நாட்டில் ஒரு சாரார் வைதீகர்கள் என்ற நாமத்தைப் புனைந்துகொண்டு, "பட்டுப்போன" தருப்பைப் புற்களாலும், குப்பைத் தொட்டிக்கு லாயக்குள்ள புராண சாஸ்திரங்களாலும், பழமைப்பட்டுக் கந்தல் கந்தலாய்க் கிழிந்துபோன வழக்க வொழுக்கங்களாலும் பெண்களை அடிமைப்படுத்தி, பண்டைய நிலைமையென்று அவர்கள் கருதுகின்ற ஒரு இருண்ட காலத்தை நிலைநாட்ட முயற்சிக்கின்றார்கள். மனிதப்புலமை திருவள்ளுவர் கூறியாங்கு "எவ்வ துறைவது உலகம், உலகத்தோ டவ்வ துறைவது அறிவு" என்ற முறைப்படி, உலகம் இன்று எவ்வாறு இயங்கிக்கொண்டிருக்கிறதோ அதற்கொத்த வண்ணமும், மக்கள் மனம் என்னென்ன கொள்கைகளைக் கிளர்த்திக் கொண்டிருக்கின்றதோ அதற்கொத்த வண்ணமும், நேரிய முறைகளைச் சீரிய வழிகளில் கடைப்பிடித்தொழுகி நிற்க அவர்கட்குத் தெரிவதில்லை. அம்மட்டோ! சமதர்மமென்ற பேராறு செவிடுபடவொலித்து உலகையொரு நுனி முதல் மற்ற நுனி வரையிலுமசைத்துப்பேருக்கத்தோடு, தம்மை எதிர்ப்படும் குப்பை கூளங்களையெல்லாம் கிண்டிக்கிளறி அள்ளிக்கொண்டுபோவதும் அவர்கள் கண்களில் புலப்படுவதில்லை. இத்தகைய பேதை மடிசஞ்சிகள் உலகைத் தெரிந்து கொள்ளும் நாள் எந்நாளோ? இவர்கட்கு, நாம் பல்வேறு ஜாதியாரும், பல்வேறு வருக்கத்தாரும், பல்வேறு தேசத்தாரும் ஐக்கியப்பட்டு சகோதரத்துவத்தைப் பெருக்கிக்

கொள்ளும் நாளே உலகின் விடுதலை நாள் என்று அறிவுறுத்த விரும்புகிறோம்.

இந்தத் தேசிய கதாமாலிகாவின் 2-வது மலராகிய இந்நவீனத்தில் இயன்ற அளவு ஷை கொள்கையே வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. காதல் மணம், கலப்பு மணம், விதவா மணம் ஆகியவையும், வைதீகத்தின் அலங்கோலம் பொருளின்மையாகியவையும் ஆங்காங்கு விளக்கப்பட்டிருக்கின்றன. சீர்திருத்தச் சக்கரம் பெரு முழக்குடன் இயங்கிக் கொண்டிருக்கின்ற இதுகாலை இந்நவீனம்போன்ற நூல்கள் தமிழன்னையின் திரு மார்பை நன்றாக அணிசெய்து நிற்குமென்பது நமது மனமார்ந்த நம்பிக்கை.

இந்நவீனத்தினால் கிடைக்கும் பொருள் முழுதும் காரைக்குடி நா. புதூரில் நடைபெற்றுவரும் பாரதிப் பள்ளிக்கூடம் என்ற தேசிய கலாசாலைக்காக வழங்க நிச்சயித்துள்ளோம். பிரஸ்தாபக் கலாசாலை ஓர் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியும் நமது நண்பருமாகிய ராம. அழகப்பா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு செவ்வனே நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கூடத்தை ஆதரிப்பது பொது மக்கள் கடமை யென்பதை நாம் அதிகமாக வற்புறுத்தத் தேவையில்லை. நிற்க,

பற்பல வசதிக் குறைவுகளினால் இப்புத்தகம் இம்மட்டோடு முடிக்கப்பட்டிருக்கின்றது. அன்பர்களின உதவியும் ஆதரவும் கிடைக்குமேல் இரண்டாம் பதிப்பை சற்று அதிக சீர்திருத்தத்துடன் திருப்திகரமாக அச்சிட்டு வெளியிடுவோம் என்று உறுதி கூறுகிறோம்.

காரைக்குடி,
ஸ்ரீமுக
சித்திரை 9.

இ. சிவம்,
உதவி யாசிரியன்,
குமரன்.

தென்னூர்க் கோகிலம்

அல்லது

தெருவில் வீழ்ந்த குறிப்புப் புத்தகம்

அத்தியாயம் 1.

கைவந்த கட்டழகி.

நந்தன் கோடு திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி. அதில் கிராமம், நகரம் ஆகிய இரண்டிற்குமுள்ள அம்சங்கள் பல காணக் கிடக்கின்றன. ஊர் முழுவதும் எண்ணிறந்த மா, பலா, கமுகு, வாழை, சிறுபுன்னை முதலியமரங்களும், பற்பலவித செடிகொடிகளும் தழைத்து, செழித்துப் பின்னிப் பிணைந்து வளர்ந்து நிற்கின்றன. அவ்வூரின் ஓர்பால் நன்கு பரந்து விரிந்து பேர் ஆரவாரம் செய்யும் அராபியன் கடல் இலங்குகின்றது. ஏனைய மூன்று பக்கங்களிலும் பச்சைப் பசிய தாவரங்களென்னும் போர்வை போர்த்து ஓங்கி நிற்கும் குன்றுகள் பல ஆங்காங்கு காணப்படுகின்றன. அக்குன்றுகளிலிருந்து வெளிப் பாய்ந்துகொண்டிருக்கும் மந்தமாருதமும் மேலே சொன்ன கனைகடலின் அமுதனைய துளிகளைச் சுமந்துவரும் தண்ணிய கடற்காற்றும் நந்தன் கோட்டில் கைகோத்துலாவும் காட்சி நினைக்க நினைக்க இன்பம் தருவதாகும். இங்ஙனம் கடல், கான், மலை ஆகிய பலதிறப்பட்ட திணைகள் ஒன்றோடொன்று மயங்கிக்கிடக்கும் நிலை பொருளிலக்கணம் தெரிந்தோர்க்கு ஒரு அரும் பெரும் விருந்தாய் விளங்குமென்பதில் ஐயமில்லை. மொத்தமாக நோக்கின், அவ்வூர் இன்பம் நுகர்ந்தானந்திப்பதற்கும், நண்பர்சூழ வாழ்க்கை நடாத்தற்கும்,

கிள்ளைமொழி பகரும் காதற் கிழத்தியரோடு களியாட் டயர்வதற்கும் ஏற்றவோர் இடமென்று தோற்ரு நிற்கும்.

இத்தகைய அவ்வூரின் வனப்பைக் கண்டுதான் போலும் இரட்சண்ய சேனைக்காரர்கள் (Salvation Army) தங்கள் மலையாள நாட்டுத் தலைமைஸ்தானத்தை ஆண்டு நிறுவியிருக்கின்ரூர்கள். சுதேசிகள் பல்லோர் ஆங்காங்கு சிற்றில்கள் கட்டி வாழத் தொடங்கியிருப்ப தற்கும் இதுதான் காரணமாயிருக்கலாம் போலும். அன் ண்மையில் திருவாங்கூர் அரசர் சித்திரை திருநாள் தமது சிங்கார அரண்மனையொன்றை ஆண்டு கட்டியுள்ளார். அவரைப் பின்பற்றி சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சில ரும், தனவந்தர்கள் பலரும் தங்கள் தங்கள் பல "விலா சங்களை" ஆங்கு நிறுவியிருக்கின்ரூர்கள். ரதிகள் போன்ற ஆயிரமாயிரம் கன்னிகைகளை அணைத்துக் கொண்டும், இயற்கைத் தாயின் அருள்விழிக்கிலக்காகிக் கொண்டும் இருக்கின்ற ஒரு அழகிய திருப்பதியில் யார் தான் வசிக்க விரும்பமாட்டார்கள்!! அவ்விடத்தை ஆனந்தமென்னும் அருள் மடந்தை திருநடனம் புரியும் அரங்கமென்ரூே, இன்ப அணங்கு நடைபயிலும் இன்பச் சாலையென்ரூே, தண்மைத் தெய்வம் தாண்டவமாடும் தனி நிலமென்ரூே கூறினும் அன்றி வேறென்னென்ன வகைகளில் புகழ்ந்தாலும் முற்றிலும் பொருந்தும். வாச கர்கள் கனவிலோ, நினைவிலோ, காவியத்திலோ, ஓவியத் திலோ எந்த மனோகரமான விடத்தையேனும் கண் டிருந்தால் அதுபோன்றதே இந்த நந்தன்கோடு என்று நினைத்துக்கொண்டால் நாம் அதிகம் எழுத வேண்டிய தேவை யிராது.

அன்பர்களே! அப்படிப்பட்ட நந்தன் கோட்டை முதன் முதலில் ஒரு நாள் காலையில் நாம் பார்க்கின்றோம்.

அப்போது மணி ⓾ ஆயிருக்கலாம். குளிர்ச்சியுற்றுப் புகைபோல் ஊர் முழுவதையும் முற்றுகை போட்டிருந்த இருளரசனின் கடைசி அதிகாரியாகிய பனி என்பவனின் பாழ்முகம் சிறிது சிறிதாக நிறம் மாறத் தொடங்கியிருந்தது. அவனுடைய கொடுங்கோல் நாட்டப்பட்டதற் கறிகுறியாக வீட்டுக் கூரைகள் எல்லாம் நனைந்து தோன்றின. ஒரு மகனாவது, விலங்காவது, பறவையாவது அவனுடைய ஆட்சிக்குப் பயந்து வெளியே வரவில்லை. எங்கும் "உம்" என்ற அமைதியைத் தவிர வேறில்லையென்னலாம். சிறு சிறு ரஸ்தாக்களின் இரு மருங்கிலும் இருள் தங்கி நிற்குமாறு கவிந்திருந்த மரங்கள்—அப்பனி யதிகாரியின் பாசத்தால் கட்டுண்டனபோலும்—அசைவின்றி நின்றுகொண்டிருந்தன. வானம் சிறிது சிவந்து ஓர்பால் அவ்வூருக்கு ஓர் புதுமையை அளிக்கத் தொடங்கியிருந்தது. பகலவன் முந்திய நாள் இருட் பகைவனின் கையில் தப்பிதமாய் விட்டுவிட நேர்ந்த பூமியை, மீண்டு மவன் கையிலிருந்து பறித்து, அரசு புரிய ஆர்வம் கொண்டவன்போல, நீர் மூழ்கி, புத்துயிர் பெற்று, தேஜோமயமான கவசமணிந்து, தம் கிரணங்களாகிய அநந்தம் வாட்படைகளை ஜிலு ஜிலுவென்று நாலா பக்கமும் வீசி, அசைத்துக்கொண்டு கீழ் திசையில் தோன்றிக்கொண்டிருந்தான். இதனைக் கண்டு அஞ்சி நடு நடுங்கியே போலும் பனி என்பவன் பாழ் முகம் நிறம் மாறத் தொடங்கியிருந்தது!!

இங்ஙனம் பகலவன் போர் தொடுத் தெழும்புவதில் தனக்கேற்படும் சந்தோஷத்தைப் பிரகடனம் செய்து கொள்வதற்காக அண்மையில் பரந்து விரிந்து அகன்றிருந்த மாபெருங் கடல் முழங்கி, கூத்தாடி, தன் கைகளை கரையில் அடித்து, ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட கடலின் உற்சாகத்தையும் கதிரவனின் போரெழுச்சியையும் உணர்ந்துகொண்ட செடிகொடிகள் எல்லாம் அக் காட்சியைப் பார்க்கும் பொருட்டு தம் உடம்பு முற்றிலும் மூடிக்கிடந்த அரும்பாகிய கண்களை மெல்ல விழிக்கத் தொடங்கின. அத் தருணம் நோக்கி, தம் காதலியிடம் அன்பு முத்தம் பெறுவதற்காக சமயத்தை நாடிக் காத்துக்கொண்டிருக்கும் காதலனை யொத்த வண்டினங்கள், தமது அஞ்சிறை விரித்துச் சிங்காரப் பாட்டுகள் பாடி, ஆலவட்டம் போடத்தொடங்கின. காகங்களும் அவை போன்ற சில பறவைகளும் வெகு தூரத்தில் சத்தமிட்டுக்கொண்டிருந்ததின் எதிரொலி கேட்கப்பட்டது.

இத்தகைய ஒரு காலை வேளையில், நந்தன்கோட்டுப் பெரிய ரஸ்தாவில்—என்ன அத்தியாவசியம் பற்றியோ—ஒரு வாலிப மங்கை விரைந்து தனி வழி நடந்து சென்று கொண்டிருந்தாள். அவள் உடம்பு குளிரிலிருந்து தப்பி நிற்கும்பொருட்டு ஓர் வெள்ளைத் துணியைப் போர்த்துக் கொண்டிருந்தது. ஆதலால் அப் பெண்ணணங்கை நன்ருக நம்மால் பார்க்க முடியவில்லை; என்றாலும் சாயலை நோக்குமிடத்து அவள் ஓர் தமிழ் மங்கை யென்றும் சுமார் இருபத்திரண்டாண்டுகள் நிறையப் பெற்றவள் என்றும் சொல்லலாம். அவளது ஆடை ஒவ்வோரிடங்

களில் சிறிது நழுவியதிலிருந்து உடலழகும், பொன் னிறமும் வெளியே எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன. அவளது மேனியழகை அப்படியே எடுத்தியம்ப அவள் உடலை மூடிக்கொண்டிருந்த தூய வெள்ளை ஆடை இடந் தாவில்லை; எனினும் பொதுவாக நோக்குமிடத்து அவளை ஓர் விதவை யென்றும் ஒத்த சரீரக்கட்டுடையவள் என் றும் துணிந்து கூறிவிடலாம். ஒத்த சரீரமுடையவள் என்றால் சிலர் கூறுமாறு செண்டு போன்ற சரீரமுடைய வள் என்பதோ அல்லது குண்டுபோன்ற சரீரமுடைய வள் என்பதோ கருத்தன்று. போதிய பருமனும், அப் பருமனுக்கேற்ற உயரமும், உயரத்துக்கேற்ற அங்க அமைப்புகளும், அவ் வமைப்புக்குத் தக்க உரு ட்சி திரட்சிகளும் பொருந்தியிருப்பதே ஒத்த சரீரமாம். எனவே அப் பெண்ணின் உடலமைப்பு எப்படியிருந்த தென்பதை யூகித்துக்கொள்ளலாமன்றோ?— அவளது மலர்ந்த முகத்தில் குளிர்கால மென்பதனையும் கவனி யாது வசீகரமும் காந்தியும் நடனம் செய்துகொண்டிருந் தன. அந் நடனத்தைக் கண்டு ஆநந்தம் கொண்டாற் போல பவள அதரங்களில் இயல்பாயுறைந்திருந்த புன் னகை தவழ்ந்துகொண்டிருந்தது. கன்னங்கள் பரிபூர ணத் தன்மை பெற்றே யிருக்க வேண்டும்; ஆனால் பாவிப் புடவை! நமக்குத் தெரியவிடாது மறைத்துக்கொண்டு விட்டது! அவளது அருள் வழியும் கண்கள் ஏதோ பரபரப்பான விஷயத்தில் அவள் மனம் புதையுண்டிருந் தது என்பதைக் காட்டின. இப் பெண் கடுகி வழி நடந்து சென்றாலும் அந் நடைக்கு ஓர் தனி யழகில்லா மலில்லை. அவள் தொங்கப்போட்டிருந்த ஒரு கையில் சில பத்திரிகைகளும், கையெழுத்துக் காகிதங்கள் சில

வும், ஒரு சிறு புத்தகமுமிருந்தன. அவைகள் கையிலிருக்கின்றனவென்பதையே மறந்தவள்போல ஏதோ சிந்தித்துக்கொண்டே வழி நடந்தாள். அப்போது சற்று தூரத்தில் ரோட்டோரத்தில் தம் "பைசிகிலை" வைத்துக் கொண்டு நின்ற ஒரு வாலிபனையும், எதிரே வந்துகொண்டிருந்த ஒரு மோட்டாரையும் தவிர வேறு யாரும் காணப்படவில்லை.

அம்மங்கைநல்லாள்---ஆதியில் நாம் கண்ட விடத்திலிருந்து சுமார் இருபத்தைந்து கஜதூரம் சென்றதும், மேற்கூறிய மோட்டார்வண்டி நெருங்கிவிட்டது. அதிகாலையில் ஜன நடமாட்ட மில்லாத ரஸ்தாவில் வந்துகொண்டிருந்தபடியால் அது பாய்ந்து வந்த விசை ஒரு போலீஸ்காரன் பார்வையில் வீழ்ந்தால் அவன் குறிப்புப் புஸ்தகத்தைத் திறவாமலிராது. அக்கார் ஓடி வந்து நம் பெண்ணை யடைந்ததும், திடீரென்று நிறுத்தப்பட்டது. அது நிறுத்தப்பட்ட விசை மோட்டார் இயந்திரத்துக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது; ஒரு விதமான அழுகொலி அக் காரின் ரோதைகளிலிருந்து வெளிப்பட்டது.

திடீரென்று நின்ற அக் காரில் மோட்டாரோட்டியும் ஒரு யௌவன மங்கையுமே காணப்பட்டனர். மோட்டார் நின்றவுடன் அம் மங்கை ஆர்வத்தோடு வெளியே பாய்ந்தாள். அப் பாய்ச்சல் ஆயுள் தண்டனை யடைந்த ஓர் கைதி இடையில் தண்டனை ரத்தாகி வெளிப்படும்போது எய்தியிருக்கும் சந்தோஷத்தையும், மணியடித்துக் கணக்காசிரியர் தொல்லை யொழிந்து வெளிப் பாயும் மாணவன் எய்தும் விடுதலை சந்தோஷத்

தையும் ஞாபகமூட்டிற்று. இவ்வளவு ஆநந்தத்தோடு வெளிப் பாய்ந்த அப் பெண் நம் கன்னிகையைப் பார்த்து "தமயந்தி நீயா" என்று ஆச்சரியத்துடன் புலம்பினாள். நம் கன்னிகையும் நீண்ட நாள் காண முடியாதிருந்த தன் சிநேகிதி எதிர்பாராதவிதமாகப் பிராப்தமானதைக் கண்டு ஆச்சரியப்பட்டுத் திகைத்து "ஸ்ரீமதியல்லவா" என்றாள்; அதன்மேல் பேச நாவெழவில்லை.

இருவரும் இவ்வாறு சிறிது நேரம் ஸ்தம்பாகாரமாய் நின்றதும், ஸ்ரீமதி "நீ இங்கு எப்படி வந்தாய் தமயந்தி? உன் தாத்தா வெங்கே? என்ன புதுமை" என்றாள். அதற்கு,

தமயந்தி:—எல்லோரும் இங்குதானிருக்கிறோம்.

ஸ்ரீமதி:—அப்படியா! எவ்வளவு நாளாயிற்று?

தமயந்தி:—சுமார் ஒரு வருடமாயிற்றே. நீதான் கவனிப்பதில்லையே.

ஸ்ரீமதி:—என்ன தமயந்தி! கேலி பண்ணுகிறாய். நீ இங்கிருப்பது தெரிந்திருந்தால் நான் வரவாமாட்டேன்? ஐயோ! ஒரு வருடமாகியும் நான் ஒரு நாளாவது பார்க்காதிருந்துவிட்டேனே. நீயாவது எனக்குத் தெரிவித்திருக்கலாகாதா?

தமயந்தி:—நீ இப் பகுதிகளிலிருக்கின்றாயென்பது எனக்கெப்படித் தெரியும்?

ஸ்ரீமதி:—நல்லது, ஜோதி எங்கே? தாத்தா எப்படியிருக்கிறார்?

தமயந்தி:---ஜோதி திருச்சியில் நாலாவது பாரத்தில் படிக்கிறான். தாத்தாவுக்கும் ரங்கம்மாளுக்கும் ஏற்பட்ட சச்சரவால் அவனுடைய சம்பந்தம் ஒழிந்தது. அவன் திருச்சியில்தானிருக்கிறான்.

ஸ்ரீமதி:—நல்லது, மற்ற விஷயங்களை பின்னுடிப் பேசிக்கொள்ளலாம். இப்போது இந்தப் பனியில் எங்கு செல்லுகின்றாய்?

தமயந்தி:—இன்று சாரளாதேவி எங்கள் பெண்கள் சங்கத்தைப் பார்வையிடப் போகிறார். அது சம்பந்தமான தகவல் நேற்று மாலையில்தான் கிடைத்தது. உடனே சங்கக் கட்டிடத்தை அலங்கரிக்க ஆள் விட்டோம். அந்த வேலை எவ்வளவு தூரம் முடிவுற்றிருக்கின்றது என்பது தெரியவில்லை. அதனைப் பார்த்து வரப் போகின்றேன். அன்றி "மினிட் புக்" முதலியவற்றையும் ஒழுங்குபடுத்த வேண்டும்.

ஸ்ரீமதி:—நல்லது. நத்தன்கோட்டுப் பெண்கள் சங்கத்தின் "காரியதரிசி" தமயந்தி நீதானு?

தமந்தி:—ஆம், ஸ்ரீமதி.

ஸ்ரீமதி:—ஆ! நான் ஏமாந்து அல்லவா போனேன்! பத்திரிகைகளிலெல்லாம் தமயந்தி என்ற பெயரைப் பார்க்கின்றேனே; அது நீதான் என்பது தெரியாமல் போய்விட்டது. போகட்டும்; இனி அடிக்கடி சந்திப்போம்.

தமயந்தி:—அன்ணுவுக்கு என்ன வேலை; எங்கிருக்கிறார்?

ஸ்ரீமதி:—இப்போது இங்குதான். இஞ்ஜினீயர் வேலை......நல்லது தமயந்தி, இன்னும் இரண்டு நாட்களுக்குள் உன்னைப் பார்க்கிறேன். நான் 8 மணிக்கெல்லாம் பாலராமபுரத்தில் இருக்கவேண்டும். அங்கு ஒரு கல்யாணம் நடைபெறுகிறது; போய் வருகிறேன்.

தமயந்தி:—எனக்கு விட்டுப்போகவே மனமில்லை. நீயும் உடன் வரலாமென்றால், இன்று பெரிய வேலையிருக்கின்றது என்கின்றாய். நல்லது, ஸ்ரீமதி அவசியம் நந்தன் கோட்டுக்கு வருவாயா? நாம் எத்தனையோ விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொள்ளவேண்டும்.

என்றிவ்வாறு அன்பு கலந்த ஆநந்தச் சொற்றொடர்களை சகிகள் இருவரும் பேசிக்கொண்டிருந்து விட்டுப் பிரிந்தனர்.

இங்கு நாம் எழுதிய வாக்கியங்கள் வெறும் தமிழ்ச் சொற்களாகவே தோற்றியபோதிலும், அவ்வொவ்வொரு பதங்களும் எவ்வளவு அன்பு மல்கியிருந்த தென்பதை நேரில் பார்க்குமளவிலேயே விளங்கும். பற்று மிகுந்த அன்பால் பிணைக்கப்பட்ட காதலர் இருவர் எத்தகைய அன்பைச் சுரப்பார்களோ, அதே போன்ற பேரன்பு இருவர் வாய்களிலுமிருந்து சம்பாஷணையோடு சம்பாஷணையாய் வழிந்தது. சுருக்கமாகக் கூறினால் அன்பாகிய இன்பத்தேன் முகமனாகிய வாய்கால் வழியோடி தமயந்தி ஸ்ரீமதி ஆகிய இரு மடுக்களிலும் மாறி மாறிப் பாய்ந்துகொண்டிருந்தது என்று சொல்லலாம். இவ்வளவு அன்பு நிறைந்திருந்த தமயந்தி தம் தோழி ஸ்ரீமதியை விட்டு நீங்குவதென்றால் அவளுக்கு எப்படியிருந்திருக்கும்!! அவள் உண்மையிலேயே எதோவொரு

உயிருக்குயிரான பொருளைப் பறி கொடுத்து விட்டது போல ஏங்கி நின்றாள். இன்னும் அவளுடைய ஏக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுக் கூறவேண்டுமானால், அவள் கையில் வைத்திருந்த காகிதங்களுக்குள்ளிருந்து ஒரு சிறு புத்தகமும் சில வியாசங்களும் கீழே விழுந்தன; அவற்றைக்கூட அவள் கவனிக்கவில்லை. கொஞ்ச நேரம் அவள் ஸ்ரீமதியின் மோட்டார் போன திசையையே பார்த்துக்கொண்டிருந்தாள். அக் கார் கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்த பின் பெருமூச்சோடு மீண்டும் தம் வழியே செல்லலானாள்.

தமயந்தி தம் கையிலிருந்து நழுவி விழுந்த புத்தகம் முதலியவற்றைக் கவனியாமல் மேலே நடந்து சென்றதும், செடி மறைவில் ஒதுங்கி நின்று கொண்டிருந்த வாலிபன் ஓடி வந்து அவற்றைப் பொருக்கெனக் கையிலெடுத்தான். எடுத்த அவன் அடைந்த மாற்றம் ஈண்டு குறிப்பிட வேண்டுவதாகும். அவன் பன்னெடு நாள் காத்திருந்த ஏதோவொரு உறுபொருளைப் பெற்றுவிட்டது போல சந்தோஷம் கொண்டான். அவன் கண்கள் மலர்ந்தன; உடம்பு முழுதும் மின்சாரமேற்றாற் போல மாற்றமேற்பட்டது. அவன் கை ஆர்வத்துடன் அப்புத்தகத்தைத் திறந்தது. ஆ! அது ஒரு (ஞாபகக்) குறிப்புப் புத்தகம்; மற்றக் காகிதங்கள் தமிழ் வியாசங்கள். அவற்றைக் கண்டதும் "கிடைத்தது ஒரு தருணம்" என்று கூறிக் குதித்தான் அவ்வாலிபன். உடன் அவற்றைக் கவனமாகத் தன் சேபியில் வைத்துக் கொண்டு பைசிக்கிளில் விட்டுத் தன் ஜாகைக்குச் சென்றான். அங்கும் அவனுடைய சந்தோஷம் ஒழிந்ததா?

இல்லை. அவன் தன் அறையின் கதவுகளை யெல்லாம் நன்றாக மூடிக்கொண்டு ! முதலில் வியாசங்களை திருப்பித் திருப்பிப் பார்த்தான். அவைகட்கு பெண்ணுயர்வு, பெண் பலி, வைதவ்யம், சமூகத்தில் பெண்கள், சதி, இளமை மணம், பெற்றோர் கடமை என்கின்ற தலைப்புகள் தனித் தனியே கொடுக்கப்பெற்றிருந்தன. அவற்றில் சிலவற்றைப் படித்தான். அவற்றின் கருத்து தமயந்தியை யோர் அரும் பெரும் சீர்திருத்தவாதி யென்றெண்ணச் செய்தது. "ஆ! இவ்வளவு முற்போக்கான தமயந்திப் பெண்ணமுதா வொரு விதவையாயிருக்க வேண்டும்?" என்ற சொற்றொடர் அவன் வாயினின்றும் வெளிப்பட்டது. அவன் நெடுநேரம் வியாசங்களிலேயே கண் புதைத்து மௌனமுற்றிருந்தான். அப்பால் அவற்றை ஓர் பால் வைத்துவிட்டு, குறிப்புப் புத்தகத்தை யெடுத்தான். அவனது உள்ளம் "ஆனந்த கிருஷ்ணா! பாராதே. ஒருவர் குறிப்புப் புத்தகத்தை இன்னொருவர் பார்ப்பது அழகன்று. அதிலும் நீயோர் சட்ட மாணவன். நிச்சயமாகவும் தவறான வழியில் செல்லாதே" என்றது; ஆனால் ஆசையொருபாலிருந்து "ஆனந்தகிருஷ்ணா, எவ்வளவு நாளாய் நீ காத்துக் காத்து உடல் நலிகின்றாய்! உனக்குக் கிடைத்திருக்கும் தருணம் சிறந்ததாம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். உன் உயிருக்குயிராயிருக்கும் தமயந்தியின் குறிப்புப் புத்தகத்தை நீ பார்ப்பதில் எட்டுணையேனும் பாதகமில்லை. அன்றியும் யார் உன் செய்கையைக் காணப்போகின்றார்கள்" என்றது. இவ்வாறு நியாய உணர்ச்சியும் ஆசையும் ஒன்றோடொன்று போராடி நின்றதும் முடிவில்—ஆசைக் கோரளவில்லையன்றோ?—அவ்வாசை வளர்ந்து

கொடிவீசி நியாய உணர்ச்சியை மூடிப் புதைத்துக் கொண்டு மேலெழும்பியது. எனவே ஆனந்த கிருஷ்ண னால் குறிப்புப் புத்தகம் திருப்பித் திருப்பி ஒவ்வொரு பக்கமாகப் பார்க்கப்பட்டது. அப்போது அவனுக்கிருந்த மனப்பான்மைதான், ஆசைதான் என்னே! அப்புத்தகத் தின் ஒவ்வொரு எழுத்தும் அவனுக்குத் தூக்குத்தண் டனை விதிக்கப்பெற்ற "ஜட்ஜுமெண்டி"ல் காணும் எழுத்துக்கள்போல் தோன்றின. வாய் "ஆ! தமயந்தி உன் கையெழுத்து எவ்வளவு அழகு மலிந்திருக்கின் றது! இவ்வெழுத்து என்னேருக்கு ஒரு நாளாவது "காதலா" என்றெழுதிவிடாதோ? முயற்சி திருவினை யாக்கும் என்பார்களே! நான் ஒரு வருடமாக முயன் றும் என்ன திருவினை வந்தது? உன் மனம் கல்தான் போலிருக்கிறது—இல்லை எனக்குச் சரியாக முயலத் தெரியவில்லை யென்றிருக்கவேண்டும்—எப்படியும் போகட்டும்—இந்நாள் என் வாழ்க்கையில் ஓர் நன்னாளே. உன் குறிப்புப் புத்தகத்தோடுறவாடும் சந்தர்ப்பமாவது கிடைத்ததன்றோ? இதனை வைத்துக்கொண்டு உன் னைப் பார்க்க முயல்கின்றேன். நீ, குறிப்புப் புத்தகம் கைதவறிவிட்டதால், பெரிதும் கலங்கிக் குழம்பியிருப் பாய்! அதோடு திரும்பிக் கிடைத்துவிடாதோவென்று கொதித்துக்கொண்டுமிருப்பாய். அத்தருணம் நோக்கி நான் உன்னை நாடுவேன்! நாடி, புத்தக சம்பந்தமாகப் பேசுவேன். அதன்மூலம் உன்னோடு வார்த்தையாடும் சந்தர்ப்பமொன்றைப் பெற்றவனுவேனன்றோ? அதன் பின் தமயந்தி! என்னுசைக் கொழுந்தே! உன்னிடம் புத் தகத்தைக் கொண்டுவருகின்றதாகிய வேறொரு சந்தர்ப் பத்தையும் பெறுவேன். அதோடு நான் உனக்குச்

செய்யும் நன்றியை நீ மறக்கமாட்டாயன்றோ? அந்த நன்றியை நாளடைவில் உபயோகித்துக்கொள்ள முயல்கின்றேன்" என்றிவ்வாறு தனக்குள் புலம்பிக்கொண்டே ஆனந்த கிருஷ்ணன் பல பக்கங்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். கடைசியில் திடீரென்று மகாத்மா விடுதலையானாரென்ற செய்தி கேட்ட காந்தி பக்தனைப் போல திகைத்து மனமகிழ்ந்து சிறிது திடுக்கிட்டவனாகி, ஒரு பக்கத்தைப் பன்முறை பார்த்தான். பின் கண்ணைத் துடைத்தான். மேலும் வாசித்தான். வாசித்ததும் திகைப்பு அதிகரித்தது. "நிஜமாகவா? என்னைப்பற்றியா! இது என்ன புத்தகம்?.........ஆ! தமயந்தி, என் மணியே! இது உன் குறிப்புப் புத்தகமன்று. எனக்கு விடுத்திருக்கும் தூதோலையே. நான் உனக்காகத் தவம் கிடந்து வாடுவதை தமயந்தி! நீ உணர்ந்துவிட்டாய்போலிருக்கிறது! அதோடு நான் பனியென்பதையும் பாராமல் பாதையில் பாதவத்தினடியில் பதுங்கியிருந்ததையும் பார்த்திருக்கின்றாய்போலிருக்கிறது. ஆகையினாலேயே இத்தூதோலையை வழியில் போட்டுவிட்டுச் சென்றாய்...........தமயந்தி நான் இதற்கு முன் சொன்ன எல்லாவற்றிற்காகவும் தப்பாக நினைத்ததற்காகவும் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்" என்றுகூறி மீண்டும் அப்பக்கத்தை வாசித்தான். அதில்,

15. ஜூன் 1926.

என் அன்பான ஆனந்தகிருஷ்ணனை இன்று தற்செயலாக நகரில் கண்டேன். அவன் என்னைக் காணவில்லை. அவன் அழகு எந்தப் பார்ப்பனர் அழகுக்கும் மேம்பட்டதாகவேயிருக்கின்றது. ஒரு நல்ல கன

வானுக்குள்ள தன்மைகள் அவனிடம் மிகவும் மலிந்து காணப்படுகின்றன. அவன் ஒரு நல்ல வாலிபன்!

என்றிருந்தது. இதனைப் பன்முறை வாசித்து வாசித்து மகிழ்ந்து மெய்மறந்தவனானன். அப்பால் மேலே திருப்பினன். அங்கும் பல காகிதங்களில் அவனைப்பற்றிய குறிப்புகள் நிரப்பப்பெற்றிருந்தன. அவற்றில் காணப்பட்ட சிலவற்றை மட்டிலும் இங்கே எழுதுவோம்:—

22. ஜூன் 1926.

இன்று ஆனந்தகிருஷ்ணனை கடற்கரையில் சந்தித்தேன். அவன் பல நண்பர்களுடன் உற்சாகமாகப் போய்க்கொண்டிருந்தான். என்னை முதலில் அவன் காணவில்லை. ஆனல் எப்படியும் அவன் கண்ணுக்கு இலக்காகிவிடவேண்டுமென்ற ஆசை என்னை கொஞ்ச நேரத்துக்குள் அவன் முன் கொண்டுவிட்டது. அவன் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்த வண்ணமே என்னைக் கண்டுவிட்டான். கண்டதும் ஆ! என்னென்றெழுதுவேன் அவன் தோற்றத்தை! அவன் உள்ளம் இன்னும் மாறியபாடில்லை—மின்சாரம் தாக்கியதுபோல முகம்—என் தோற்றமே—மாறிவிட்டது. உண்மையில் எனக்கேற்படும் ஓர் உணர்ச்சியும் அவனைப்போன்று அடக்கக்கூடுவதாயில்லை. நான் அவனை நினைத்துக் கொண்டே இருந்து எத்தனை மாதங்களாயின !!

25. ஜூன் 1926.

ஆனந்தகிருஷ்ணன் மீதுள்ள ஆசை என்னை இன்றும் கடற்கரைக்கு இட்டுச்சென்றது. பல நிமிஷ நேரம் எங்கும் தேடியதின் பயனக வழியில் அவனை சந்தித்தேன். அவனுள்ளம் என்னைக் காணக் காண வேகின்

றதுபோலும். ஆ! எவ்வளவு பலமான காதல்! இத்தகைய காதலன்றே உண்மையின்பம்; ஆனந்தம்; பாக்கியம்.

30. ஜூன் 1926.

ஆனந்தகிருஷ்ணன் என் வரலாற்றைத் தெரிந்துகொண்டான் போலிருக்கிறது. பெண்கள் சங்கத்தினருகில் காணப்படுவது அதற்கோர் சான்றும். இந்த முயற்சி என்னை சந்திப்பதற்காகவேதான்.............உண்மையைக் கூறினுல் எனக்கு அவன்மீது அளப்பரிய காதல் உண்டு........ஆனுல் சமுதாயமும்—பாமும் கஜபதியும்—வழிமறிக்கின்றுர்கள். எத்தனைநாள் உணர்ச்சியை மறைப்பது ?

20. ஆகஸ்ட்டு 1926.

ஆனந்தகிருஷ்ணன் பெரும்பாலாக எல்லா மாலையிலும் சந்திக்க முயல்கின்றுன். நான் அவனைக் காதலியாததுபோல் நடிக்கின்றேன். என்றுலும் என் உண்மை வெளிப்பட்டுவிடுகின்றது. உளங்கடந்து பாயும் உணர்ச்சியை யாரால் எப்படி மறைக்க முடியும் ?

22. ஆகஸ்ட்டு 1926.

ஆனந்த கிருஷ்ணன் உடல் நிலை முன்போலில்லை. என்னை யெண்ணி வாடுகின்றுன்போலிருக்கிறது. அவன் என்நேருக்கு நடந்துகொள்வது ஒரு எஜமானியின்முன்பு பரம தரித்திரன் ஒருவன் தயவெதிர்பார்த்து நிற்பதை ஞாபகமூட்டுகிறது ....ஆ! அவன் ஜாதியென்ற ஒன்றை நீக்கினுல் எவ்வளவு உயர்ந்தவன் !

25. ஆகஸ்ட்டு 1926.

இன்று என் பார்வை ஆனந்தகிருஷ்ணனுக்குக் கொஞ்சம் உற்சாகத்தை யூட்டியிருக்கவேண்டும். அவன்

சிறிது திருப்தி அடைந்தவன்போல் தோற்றினன். என்றல் அவனை அடைதல் கூடுமா ?

1. செப்டம்பர் 1926.

நான் மனத்தைப் பண்படுத்த முயல்கின்றேன். சமுதாயத் தடையைப் பொருட்படுத்தினல் ஆனந்தகிருஷ்ணனை இழப்பேன் என்பது உறுதி. கஜபதியை எதிர்க்க வேண்டும்; அதுவே வெற்றி தருவதாகும்.

இங்ஙனம் பல பக்கங்களில் காணப்படும் விஷயங்களைப் படித்த ஆனந்த கிருஷ்ணன் சந்தோஷப் பெருவாருதியிலாழ்ந்து தத்தளிக்கும் ஒரு துரும்புபோலானன். அவனுக்கு தம் கண்முன் தோன்றுவது கனவா நினைவாவென்ற சந்தேகம் இன்னும் தீர்ந்தபாடில்லை. நித்ய தரித்திரனுக்கு இந்திரப் பதவி கிடைத்ததென்ற திருமுகம் கிடைத்தால் சிக்கிரத்தில் நம்பிவிடுவான ?

அத்தியாயம் 2.

ஸ்ரீமான் தமயந்தி அல்லது தென்னூர்க் கோகிலம்.

சென்ற அத்தியாயத்தில் வாசகர்கள் ஆனந்தகிருஷ்ணன் என்ற ஒரு வாலிபனைக் கண்டார்கள். அவ்வத்தியாயத்தில் அவன் எப். எல். வகுப்பில் படித்துக்கொண்டிருந்தானென்பதையும், ஒரு கனவானுக்குள்ள குணங்களை யேந்தியிருந்தானென்பதையும், தமயந்தி காதல் கொள்ளுமாறு போதிய அழகைப் பெற்றிருந்தானென்பதையும் தவிர வேறென்றும் கூறப்படவில்லை. ஆத

லால் அவன் வரலாற்றை அறியப் பலர் ஆசை கொள்ள லாம். ஈண்டு சுருக்கமாக அவனைப்பற்றி சில எழுது வோம்.

ஆநந்தகிருஷ்ணன் ஆல்வாய் என்ற ஊரில் பிறந்து வளர்ந்தவன். நம் கதை நடக்கின்ற காலையில் அவனுக்கு 23 வயதாயிற்று. அவன் ஜாதியில் தீயன். தீயர்கள் மலையாள நாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களில் ஒரு அங்கமாகக் கொள்ளப்படுகின்றார்கள் என்பதையும் உல கில் நாகரிக ரஸ்தாவில் விரைந்தோடிக்கொண்டிருக் கின்ற ஜாதியார்களில் எவ்வாற்றானும் முன்னணியில் நிற்கின்றார்களென்பதையும் நேயர்கள் பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருக்கலாம். அவ்வகுப்பார்களில் எவ் வழியிலும் புறம்போகாத ஒரு குடும்பத்தைச் சேர்ந்த வனே ஆநந்தகிருஷ்ணன்.

அவனுடைய தாய் தந்தையர் வட திருவாங்கூரில் முக்கியமான மனிதர்களாவர். ஆஸ்தியாலும், அந்தஸ் தாலும், அறிவாலும், சீர்திருத்த நன்முயற்சியாலும், மேம்பட்டு மிளிர்ந்தார்கள். ஆநந்தகிருஷ்ணனின் தாயார் ஓர் B. A. பட்டதாரி; தந்தை M. A. பரீட்சையில் தேர்ந்தவர். அவர் பட்டம் பெற்றது முதல் பல கல் லூரிகளில் பண்டிதரா்யிருந்துவந்தார். அக்காலங்களில் சீர்திருத்த உணர்ச்சியாகிய பெரு வெள்ளத்தால் அடித் துக்கொண்டு போகப்பட்டாராகையினாலே பலவூர்கட் குச் சென்று வாரம் தவறினாலும் ஆக்க வேலை தவறாது செய்துவந்தார். காலம் சென்ற குரு நாராயணருக்கு பக்க உதவியாயிருந்த் கனவான்களில் ஆனந்தகிருஷ்ண னின் தந்தை ரகுநந்தனும் ஒருவராவர். அவரை தீயர்

களும் ஏனையோரும் நன்கு மதித்துவந்தார்கள். அவருடையவும் மனைவி மஞ்சுளாவினுடையவும் பேரினால் ஆல்வாய்க்கடுத்த இரு கிராமங்களில் மஞ்சுளா பெண் கல்விசாலை, ரகுநந்தனர் கைத்தொழிற்சாலை என்று இரண்டு ஸ்தாபனங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. இவர்கட்கு ஏராளமான ஆஸ்தி இருந்ததென்று மேலே கூறினோம். அவ்வாஸ்தி உலோபித்தனமாக பெட்டிகளுக்குள் புதைந்து கிடக்கவோ, ஆலயத் திருப்பணியில் அழிந்து பாழாகவோ செய்யாது, ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களின் செல்வம் போன்று, பொது ஜனங்களின் இன்ப வாழ்வுக்கும், இன்னும் பிற அளவிடமுடியாத தருமங்கட்கும் செலவிடப்பட்டது. நமது செட்டிநாட்டரசரைப்போன்றே ரகுநந்தனரும் **Strive, Save and Serve** (உழைத்துச் சேமித்து உதவு) என்ற ஓர் உயரிய கொள்கையைக் கடைப்பிடித்திருந்தார்.

இத்தகைய ரகுநந்தனர் நம் கதை தொடங்குவதற்கு நான்கு வருடங்கட்கு முன்பு, திருச்சி செயின்டு ஜோஸப்ஸ் காலேஜில் புரோபஸராயிருந்தார். அதுகாலை அவர் திருச்சியில் ஆற்றிய தொண்டுகள் பல.

அவருடைய செல்வக் குமாரனாகிய ஆநந்தகிருஷ்ணனும் தந்தையைப்போலவே நற்குணங்கள் பல பெற்றிருந்தான். சிறு வயதுமுதல் அவனிடம் மிகுந்திருந்த ஏழைகட்குழைக்கும் குணம் அவனைப் பெற்ற தாய்தந்தையரைக் காட்டுவதாயிருந்தது. நன்கு பேசும் திறமையும் யாரோடும் அன்பாகப் பழகும் பண்பும் அவனை நண்பர்களுக்கிடையில் நன்கு செல்வாக்குப் பெறச்செய்தன.

தோற்றத்தால் ஆனந்தகிருஷ்ணன் பெண்களுள்ளத்தை கொல்பவனுக விருந்தான். நல்ல தங்க நிறமும், காரிருள் போன்ற அழகிய கிராப்பும், மலர்ந்த வதனமும், புன்னகை தவழ்ந்த சிவந்த அதரங்களும், எவரையும் வசீகரிக்கத் தகுந்த நிலையிலிருந்த கண்களும் அவனுக்குத் தனி விளம்பரமாயிலங்கின. அவன் உடற்கட்டைப் பார்த்த நண்பர்கள் பெண்ணுய்ப் பிறக்க வேண்டியவன் தவறி ஆணுய்ப் பிறந்துவிட்டானென்று கூறியதுண்டு. அவயவங்கள் ஒவ்வொன்றும் நன்கு திரண்டுருண்டு செழுமையும் கொழுமையும் பெற்றிருந்தன. எவருடைய மனதையும் கொள்ளை கொள்வது அவனுக்கோர் விசேஷ லட்சணமென்னலாம். சுருங்கக் கூறினல் அவனை எவருக்கும் பெண்ணுருவத்தில் பார்க்க ஆசையேற்படக்கூடும். இத்தகைய நம் குறிப்பு வெறும் ஆதாரமற்றவோர் சொல்லன்று. உண்மையிலேயே அவனுடைய நண்பர்கள் புலர் அவனைப் பெண் வேடம் போட்டுப் பார்த்துவிடவேண்டுமென்று பல தடவை முயற்சித்ததுண்டு. ஆனுல் ஒவ்வொரு தடவையும் ஆனந்தகிருஷ்ணன் இடம் கொடாது புன்னகையுடனும் நாணத்துடனும் மறுத்துவிட்டான். இறுதியில் அவன் மறுக்கமுடியாத சந்தர்ப்பமொன்று ஏற்பட்டது. அதாவது அவன் திருச்சி ஜோஸப்ஸ் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தபோது அக்கல்லூரியின் ஆண்டுவிழா வந்தது. அதுகாலை மாறுவேடப் போட்டியில் கலந்துகொள்வதற்குக் கல்லூரி அதிகாரிகளாலும் ஆண்டுவிழாக் கமிட்டியாராலும் வற்புறுத்தப் பட்டான். அவ்வற்புறுத்தலை அவன் ஆதியில் வழக்கம் போல் ஏற்றுக்கொள்ளவில்லை; என்றாலும் அப்பால்

என்ன மனமாற்றமேற்பட்டதனுலோ ஒத்துக்கொண்டான். அம்மனமாற்றம் பெரும்பாலும் தனக்கும் தன் அழகை யொருநாளாவது சோதித்துப் பார்க்கவேண்டுமென்று தோன்றியதாயிருக்கலாம் போலும். எங்ஙனமாயினும் ஒருவருமறியாது அவ்வாண்டுவிழாவின்போது அவன் பெண்வேடம் புனையலானுன்.

வேடம் புனைந்த ஆனந்தகிருஷ்ணன் விழா நடந்த இடத்திற்கு காலை 8-30 மணிக்கு ஒரு மோட்டாரில் (கல்லூரி வாசலில்) வந்திறங்கினுன். வேஷம் அவனுக்கு எவ்வளவு இணங்கியிருந்ததென்பதைக் கூற முடியாது; மோட்டார் ஓட்டிக்குக் கூடவும் தனது காரில் வந்திறங்கியது ஒரு புருஷன் என்பது தெரியவில்லை. ஆனந்தகிருஷ்ணன் கல்லூரிவாசலில் வந்திறங்கியதும், மோட்டாரோட்டிக்குப் பணத்தைக்கொடுத்துப் போகச்சொல்லிவிட்டு, பெண்களைப்போல பயிர்ப்பும் நாணமும் கலந்த நடையோடு கல்லூரியினுட் சென்றுன். அங்கு வரவேற்புக்காகத் தயாராயிருந்தோர், யாரோவொரு பிராமணப் பெண் வருகின்றுளென்று எண்ணி உபசரித்துக் கல்லூரியில் ஓர் தனி ஆசனம் வழங்கினுர்கள். நமது நாட்டில் கூட்டங்களில் ஓர் பெண் புகுந்துவிட்டால் கூடியிருப்போருக்கு அக் கன்னிகையை பார்ப்பதைத் தவிர வேறு வேலையிராதல்லவா? அவ்வண்ணமே அங்கிருந்தோர் எல்லோரும் வந்த பெண்ணையே மாறி மாறிப் பார்க்கத் தொடங்கினுர்கள். அவர்கள் பார்வையானது பட்டிக்காட்டான் யானை பார்ப்பதையோ, சாமியாடும் இந்துக்களை ஆங்கிலேயர் பார்ப்பதையோ போன்றிருந்தது என்னலாம். அவர்களது உள்ளங்

களில் என்னென்ன மனோராஜ்யங்கள் எழுந்தனவோ, யாம் அறியோம்—அன்பொழுக விழிப்பாரும், புன்னகை புரிவாரும், கொட்டாவி விடுவாரும், கனைத்துக் கடைக்கண்களால் நோக்குவாருமாய் இருந்தார்கள். அவர்களில் சிலர் அவள் ஸ்ரீரங்கம் தாதாச்சாரியாரின் புதல்வி என்றனர். சிலர் நாகபூஷணம் B. A. என்றனர். சிலர் ஏதோ மாணவியாக இருக்கலாமோ என்று ஐயுற்றனர். வேறு சிலர் நேரில் கேட்டுவிடவே தீர்மானித்தனர். இத்தீர்மானம், எதனையும் மானத தந்தியாகப் பெற்றுக்கொள்ளும் இயற்கையுடைய பத்திரிகை நிருபர்களின் மனங்களில் பிரதிபிம்பித்தது. ஆகவே ஒரு நிருபர் மெதுவாக எழுந்து சென்று "அம்மாவின் பெயர் யாதோ" வென்றார். அதற்கு, எழிலணங்காகிய ஆனந்த கிருஷ்ணன், புன்னகை பூப்ப அருள்விழி கொண்டு, நாணத்தோடு கீழே பார்த்தான். இவ்வளவு தான்; கூட்டம் ஏகமாகக் குழம்பிப்போய்விட்டது. பலர் அவள் நாணங்கலந்த பார்வையையும் கண்வீச்சையும் பார்த்துப் பித்தங் கொண்டனர். ஆங்காங்கே "பத்திரிகை நிருபர் என்ன கேட்டார்? அம்மாது என்ன பதிலுரைத்தாள்? இவ்வளவு பெரிய ஓர் கூட்டத்தில் ஒருவர் அழகே உருவாகிய ஒரு இளம் பெண்ணிடத்தில் நீ யாரென்று கேட்கலாமா" வென்று பேசலானார்கள். எனினும் பத்திரிகை நிருபர் விடவில்லை; அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் தம் கேள்வியைக் கேட்கத் தொடங்கினார். கடைசியில் அம்மாது தம் பெயர் பத்திரிகையில் பொறிக்கத்தகுந்த அவ்வளவு உண்மையுள்ளதல்ல என்று நயமாகப் பதில் கூறினாள். இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கூட்டத்தினர் மட்டிலுமல்லாது

மாணவர் பலரும் குழப்பத்தின்மேல் குழப்பமெய்த லானார்கள். கல்லூரி மாணவர்களுக்கு அநேகமாக ஊரி லுள்ள இளம் பெண்களையெல்லாம் விவரமாகத் தெரியு மல்லவா? ஆகவே அவர்கள் ஆங்காங்கே கூடிக் கூடிப் பேசலானார்கள். அவர்களில் பெரும்பாலார் அப்பெண் உறையூரில் வசித்துவரும் கஜபதி சாஸ்திரியாரின் பேத் தியான தமயந்தியோ அல்லது அவளுடைய சகோதரி யோ ஆகத்தானிருக்கவேண்டும் என்று முடிவு கட்டினர். சிறிது நேரத்திற்குள் அம்முடிவை வேறு பலரும் ஏற் றுக்கொண்டார்கள். அவர்களில் ஒரு சிலர் "இவள் ஓர் சுமங்கலிபோல் காணப்படுகின்றாளே. தமயந்தி வித வையல்லவா? எப்படியானாலும் இவளையும் ஓர் தமயந்தி என்று கூறுதல் தகும்" என்று தமக்குள்ளேயே ஆக்ஷேப சமாதானங்கள் கூறி உறுதிப்படுத்தினார்கள்.

இங்ஙனம் பலர் பலவிதமாக சந்தேகப்பட்டுக் கொண்டிருக்க, ஆசிரியர்கள், பல்வேறு மாறுவேடங் களில் கலந்துகொண்ட மாணவர்களின் பெயர்களை வெற்றியடைந்த கிரமத்தில் எழுதலானார்கள். ஆநந்த கிருஷ்ணன் எல்லா போட்டியாளர்களுடையவும் பெயர் கள் எழுதப்பட்டு அக்கடிதம் மடித்து பிரின்சிபாலின் கோட்டுப் பாக்கெட்டினுள் சரண்புகுந்தது வரையிலும் மௌனமாயிருந்துவிட்டு, அப்பால் "ஐயா! என் பெயரை எழுதிக்கொண்டீர்களா?" என்று கேட்டான். தேமாவின் மென்தளிர்களையுண்டுகளிக்கும் கோகிலம் போன்ற ஆநந்தகிருஷ்ணனின் அதரங்களிலிருந்து இந்த எதிர்பாராத மொழி வெளிப்பட்டதும், கூட்டம் முழுதும் ஏகமாகத் தலையைத் திருப்பி அவனைப்பார்த்

தது. அவர்கள் முகம் ஆச்சரியக்குறியாகவும் இருதயம் கேள்விக்குறியாகவும் மாறின. பலர் "ஆ! இவன் போட்டி மாணவனு" வென்றுச்சரியப்பட்டனர். பிரின்சிபலும் திகைத்தார். உதவிக் கமிட்டியாரும் குழம்பினுர்கள். பின்பு பிழைகண்டு பேதித்து நின்ற பிரின்சிபல் மயக்கத்துடனேயே "உன் பெயர் என்ன; நீ யார்" என்ருர். ஆநந்தகிருஷ்ணன் புன்னகை பூத்தவண்ணமே கூந்தலை அகற்றிக் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தான். ஆ! தெரிந்தது அவனது நிஜமான உருவம். எல்லோரும் கொல் என்று நகைத்து வெட்கத்துடனே ஆநந்தகிருஷ்ணனு வென்று ஆரவாரித்தார்கள்.

* * *

இந்த ரசமான சம்பவம் ஆநந்தகிருஷ்ணனை ஊர் பூராவும்—விசேஷமாகவும் கற்றறிவுடைய பலரிடத்தும்—முழக்கிவிட்டது. பலர் சில நாட்கள் வரையிலும் அவனை வந்து பார்த்துப்போகலானுர்கள். ஆனுல் பெண்ணுருவத்தில் பித்துக்கொண்ட ஆடவர் மட்டிலும் அவனை மறக்கவேயில்லை.

இங்ஙனமிருக்க, உடன் மாணவர்கள் அவன் உறையூர்த் தமயந்தியைப்போல் தோற்றியதை மறக்காதிருந்தார்கள்போலும்; அவனை கேலியாகவும் வேடிக்கையாகவும் விநோதமாகவும் "ஸ்ரீமான் தமயந்தி" என்றழைக்கலானுர்கள். வேறு சிலர் அவன் தென்னூரில் தங்கி வந்ததாலும், அவனை, கோகிலம்போலிருக்கின்றுனென்று பலர் புகழ்ந்ததாலும் அவனை தென்னூர்க் கோகிலம் என்று வழங்கலானுர்கள். நாளா வட்டத்தில் இந்த புனைபெயர்கள் கல்லூரி முழுவதிலும் வியாபித்து மதி

லக் கடந்து வெளியேயும் பரந்துவிட்டது. அன்றி சில நாட்களுக்குள் நிஜமான தமயந்தியின் காதிலும் விழத் தொடங்கியது. அவ்வாறு விழுந்ததும் அத்தமயந்தி நாணமும் வெட்கமும் கொண்டு "தன்னைப்போல் தோற்றுகின்ற புருஷன் யார்? அவனைப் பார்க்கவேண்டு" மென்று ஆசைகொண்டாள்.

* * *

ஆநந்தகிருஷ்ணனின் ஜாகை தென்னூரில் இருந்தது. தென்னூர், பட்டணத்தைச் சேர்ந்ததென்றாலும் வசிப்பதற்கு ஒரு கிராமத்திலிருந்து என்னென்ன சௌகரியங்களெல்லாம் எதிர்பார்க்கமுடியுமோ அந்த சௌகரியங்களெல்லாம் பெற்றிருக்கின்றது. அதோடு பட்டணத்தின் நெருக்கடியும் பாபரப்புமங்கில்லை. மாணவருக்கு இதுபோன்ற இடமன்றோ மிகுந்த வசதியளிப்பது? எனவே ஆநந்தகிருஷ்ணன் திருச்சியை நாடியதும் தென்னூரையே ஜாகையாகக்கொள்ளலானான். அவனுக்கு தினசரி கல்லூரி செல்லும்போது தமயந்தியின் வீட்டைக் கடந்தே செல்லவேண்டும். அப்போதெல்லாம் தமயந்தியைப் பார்ப்பது வழக்கம்.

ஒரு நாள் அவன் வழியே போய்க்கொண்டிருந்தபோது இரு இளம் பெண்கள் (அவர்களில் ஒருத்தி தமயந்தி, மற்றவள் ஸ்ரீமதி) வீட்டுவாயிலில் நின்றுகொண்டிருக்க, அவர்களில் ஒரு பெண் "இவர்தான் ஆநந்தகிருஷ்ணன்" என்று கூறுவது கேட்டது. உடன் ஆநந்தகிருஷ்ணன் திரும்பிப் பார்த்தான். தமயந்தியின் அருள்விழிகள் பலவிதமான எண்ணம் ததும்ப அவனைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தன.

அதனை அவனும் தம் நெடுநாளைய ஆசை துலங்க தன் கண்களினால் வாங்கினான். எனவே இருவர் கண்களும் சந்திக்கும் சந்தர்ப்பமொன்றேற்பட்டது. ஆனால் தம யந்தி கண்கள் அதிகம் கூரியனபோலும்; அவன் மன தைக் கிண்டிக்கிளறி மறித்துவிட்டன.

* * *

மாணவர்கள் இளங்காதலர் உள்ளத்தை அறிந்து கொள்ளுமியல்பினரன்றோ! ஜோஸப்ஸ் கல்லூரி இளைஞர் களில் சிலர் ஆநந்தகிருஷ்ணனின் மனப்பான்மையை தெரிந்துகொண்டார்கள். ஆதலால் அவர்கள் தமயந்தி ஆநந்தகிருஷ்ணன் ஆகிய இருவரையும் கண்டபோதெல் லாம் மிஸஸ் தமயந்தி, மிஸ்டர் தமயந்தி என்றும் தென் னூர்க் கோகிலம், உறையூர்க் கோகிலம் என்றும் கூறலா னார்கள். நாளடைவில் பலரால் இவ்வாறு கற்பிக்கப் பட்ட ஒரு கூட்டுறவுணர்ச்சி இருவர் மனதிலும் ஏற் கெனவே யிருந்த காதலோடு சேர்ந்து வளரத் தொடங் கியது.

* * *

ஆநந்தகிருஷ்ணன் ஓர் தீய வகுப்பினன்; தமயந்தி ஓர் ஐயங்காரப் பெண். தீயன் ஓர் தாழ்ந்த ஜாதியான்; அய்யங்கார்கள் உயர்ந்த ஜாதியார்கள். இப்படியிருந் தால் இருவருக்கும் எக்காலத்திலேனும் உறவு ஏற்படக் கூடுமா? மேலும் தமயந்தி ஓர் விதவை; அதிலும் விசேஷமாக கஜபதி என்ற அழுகிப்போகும்படிப்பழுத்த வைதிகப் பிழம்பின் பேத்தி. அன்றி அவர் பாதுகாப் பிலுமிருப்பவள். இந்த நிலைமையில் ஆநந்தகிருஷ்ண னின் ஆசை வெற்றிபெறக்கூடுமா ? எனினும் 'ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு' என்ற பழமொழிப்படி நிஜ

மான காதல் தோன்றிவிட்டதால்—அவன் வெற்றி தோல்வியைக் கவனியாது தமயந்திக்காகப் பாடுபடலா னுன். நாளடைவில் இந்தச் செய்தி அவள் மனதிலும் புகுந்ததுபோலும்; .அவள் ஒன்றிரண்டு தரம் காண்பித்த சில பார்வை மாற்றங்கள் அவனுக்குச் சிறிது நம்பிக்கை யைக் கொடுத்தன.

இங்ஙனம் வருடம் ஒன்று நீங்க, திடீரென ஒருநாள் கஜபதியும் தமயந்தியும் உறையூரைவிட்டகன்று காணுது போயினர். அப்போது ஆநந்தகிருஷ்ணனது மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்று எழுதவும் வேண்டுமோ? எதி ரில்வரும் போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்பு "பாட்ஜை" இழந்துவிட்ட மோட்டாரோட்டி பரதவிப்பதுபோல் பரதவித்தது அவனது உள்ளம். வருஷ முடிவில் வகுப் பில் பல மேற்ஜாதி மாணவர்களிடையே தம் ஜாதியை யும் சொல்லவேண்டிய நிர்ப்பந்தமேற்படும் ஆதிதிராவிட மாணவியின் மனதைப்போல் குழம்பியது அவனது மூளை. "ஸ்டேஜில்" தோன்றி வாயைத் திறந்ததும் நாடகம் பார்ப்போரெல்லாம் "உள்ளே போ" என்று கத்தி எள்ளி நகையாடுவதைக்கண்ட ஒரு நடிகையின் கைகால்களைப்போல் பதறின அவனது அங்கங்கள்.

இவ்வாறு பலபடக் குழம்பிய பின் அவன் தம யந்தியைப் பற்றிய தகவல் ஏதுவேனும் கிடைக்கு மாவென்று விசாரித்தான். ஒருவராலும் உண்மைத் தகவலைக் கொடுக்கமுடியவில்லை. ஆதல்பற்றி அடிக்கடி ராஜி பேசி ஏமாந்துபோகும் ஜெயர், சாப்ரூகளைப்போல் தயங்கி நின்றுன்; ஆனுல் தமயந்தியையன்றி வேறெவ ருக்கும் தம் மனதைக் கொடுப்பதில்லை யென்ற உறுதி மட்டிலும் அவன் மனதைவிட் டகலவில்லை.

மேற்சொன்னவாறு சில மாதங்கள் கழிந்ததும் ஆநந்தகிருஷ்ணனுக்கு B. A. பட்டம் கிடைத்தது. பழுத்த சீர்திருத்தவாதியாகிய அவனுக்கு அதற்குமேல் படிக்க மனமில்லை. மேலும் ஒருவனுடைய உள்ளத்தைத் தோண்டிப் பாழ்படுத்திய மின்னொளி திடீரென்று மறைந்துவிட்டால் உலகில் எதையாவது விரும்புவானோ? அவன் படிப்பே வேண்டாமென்று முடிவு கட்டிய ஒரு சந்நியாசிபோல் ஆல்வாய்க்குப் போனான். அங்கு தாய்தந்தையர்கள், அவனை பாராட்டி சீராட்டி வந்ததோடு கல்யாணத்திற்கு ஏற்பாடுகளும் செய்யலானார்கள். அம்முயற்சிகளையெல்லாம் சின்னாள் விட்டு வைக்குமாறு நயத்தினால் கேட்டுக்கொண்டான் ஆநந்தகிருஷ்ணன். அதற்குக் காரணம் யாதென ரகுநந்தனருக்கும் மஞ்சுளாவுக்கும் தெரியாது. அவர்கள் தனயன் சொல்லின் மர்மம் அறியாது இசைந்தார்கள்; எனினும் ஆநந்தகிருஷ்ணன் தன் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டவன்போல் உதாசீனமாயிருப்பது அவர்கள் கண்களில் படாமலில்லை. ஆகவே அவனை இன்னும் சிறிது மாணவ வாழ்க்கையில் பழக விட்டுவிடவேண்டுமென்று துணிந்து, அவ்வருஷம் ஜூன்மாதத்தில் சட்டக் கல்லூரி திறந்தபோது, அதில் சேர்ந்து படிக்குமாறு தூண்டினார்கள். அவனும் ஒத்துக்கொண்டு திருவனந்தபுரம் சட்டக்கல்லூரியில் சேர இசைந்தான். மாணவர்கள் புதிய வகுப்பில் சேர்ந்தால் எவ்வளவு உற்சாகமும் திமிரும் கொண்டொழுகுவார்களென்பது மாணவர்களோடு பழகுவார்கட்கும், ஆசிரியர்கட்கும் சொல்லவேண்டுவதில்லையன்றோ ? அத்தகைய திமிர் ஒன்றும் நம் ஆனந்தகிருஷ்ணனிடம் காணப்படவில்லை. அவன்

சாதாரணமாகவே நடந்துவந்தான் ; காரணம் அவனுடைய இருதயம் தமயந்திபால் தூதுபோயிருந்தபடியால் உற்சாகம், எழுச்சியாகியவை அவனை விட்டகன்றிருந்தனவென்பதாகும். இது கண்ட உடன் மாணவர்கள் அவனை வேடிக்கையாக விருப்பு வெறுப்பற்ற சந்நியாசியென்று அழைக்கலானுர்கள்.

இவ்வண்ணமிருக்கும் நாளிலேயே யொருநாள் அவன் (நாம் முதலாவது அத்தியாயத்தில் குறித்தது போல) கடற்கரையில் தமயந்தியைக் கண்ணுற்ருன். கண்ணுற்றதும் வியப்படைந்து “என்ன; எனது பழைய காதலி தமயந்தியா உறையூரைவிட்டு திருவனந்தபுரம் வந்துவிட்டாள்?” யென்று எண்ணிப் பன்முறை உற்றுப்பார்த்தான். பார்க்கப் பார்க்க அவள் தமயந்தியாகவே காணப்பட்டாள். அப்போது அவன் மனம் சாலவும் மலர்ந்ததென்று கூறவும் வேண்டுமோ? சிறிது நேரத்தில் அவன் உள்ளம் பண்டைய ஆசை, ஆர்வம், நம்பிக்கை ஆகியவற்ருல் பலாத்காரமாய் குடியிருத்தற்கேற்றவிடமாய்க் கொள்ளப்பட்டது.

அக்கணம் தொட்டு, வேனிலால் உலர்ந்து காய்ந்து சருகாய் வாடிக்கிடக்கும் அறுகின்மீது புது மழை பெய்யத் தொடங்கினல் எவ்வாறு அது கணப்பொழுதில் குருத்துவிட்டு இலைபரப்பித் தழைத்துப் பச்சையாகிப் படரத் தொடங்குமோ அதேபோல, நம் ஆநந்தகிருஷ்ணனும் புத்துயிரும் புத்தெழுச்சியும் புத்துணர்ச்சியும் பெற்று புது ஜீவிதத்தில் புகுந்தான். அவனது அவிந்து கிடந்த காதல் தலைகாட்டி மலரத் தொடங்கியது. அக்காரணத்தால் அவன் சில நாட்களுக்குள் தமயந்தி எங்கு

தங்குகின்றாள், யார் யாருடன் வசிக்கின்றாள், என்ன செய்துகொண்டிருக்கின்றாள் என்பனபோன்ற வரலாறுகளை தெரிந்துகொள்ளலானான். ஆகவே அவன் மாலையில் உலாவப்போவதை கடற்கரையிலிருந்து பெயர்த்துத் தனியாக நந்தன்கோட்டை நோக்கி செலுத்தத் தொடங்கினான். அச்செய்கை அவனுக்குப் பெரும்பாலும் எல்லா நாளும் தமயந்தியை சந்திக்கவும் அவள் மனதில் ஒருவிதமான இரக்கத்தையோ அன்பையோ தோற்றுவிக்கவுமிடம் கொடுத்தது. இங்ஙனமிருக்கும் சமயமே, ஒருநாள் அவன் கையில் குறிப்புப் புத்தகம் கிடைத்தது என்று வாசகர்கள் தெரிதல் வேண்டும்.

குறிப்புப் புத்தகத்தைப்பெற்ற ஆநந்தகிருஷ்ணன் அடைந்த சந்தோஷத்தை முதலாவது அத்தியாயத்தில் விவரித்தோம். அவன் அப்புத்தகத்தின் உதவியால் அவளை இரண்டுதரம் சந்தித்துவிடத் தீர்மானித்தான். அவ்விரு தடவைகளிலும் எப்படியாவது தன் உள்ளக் கருத்தை அவளிடம் கூறிவிடவேண்டுமென்பது அவனது முடிவு.

அத்தியாயம் 3.

இன்ஸ்பெக்டருக்குக் கடிதம்.

" ஆம்—அவளிடம் கொடுக்கவில்லை. அவள் வாங்கியிருந்தாலும் திருப்பித் தந்திருப்பாளே........மேலும் ஸ்ரீமதிபோன்ற அறிவுடைய பெண் இன்னொருவர் குறிப்புப் புத்தகத்தை வைத்திருப்பாளா.............. என்ன வெட்கக்கேடு!........என் குறிப்புப் புத்தகம்

இன்னொருவர் கையில் கிடைத்த பிறகு நான் உயிருடன் வாழவும் வேண்டுமா ?.........இறந்துபோவதே மேல் ....ஐயோ ! அதில் என்னென்னவெல்லாம் எழுதியிருந்தேன்! அத்தனையும் சிறுபிள்ளைத்தனம்......... இல்லை; சிறுபிள்ளைத்தனமென்று கூறிவிடமுடியாது. என் ? குறிப்புப் புத்தகம் தன் அனுபவங்களை குறித்து வைத்துக்கொள்வதற்குத்தானே உபயோகிக்கப்படும் ? உண்மையாக என்னிருதயத்தில் பலப்பல எண்ணங்கள் வந்தன ; பல நிகழ்ச்சிகளும் ஜீவிதத்தில் ஏற்பட்டன ; அவற்றை எழுதிக் குவித்தேன். அவ்வாறு எழுதியதில் பாதகமென்னவிருக்கின்றது ? உண்டெனில் அது புத்தகத்தை இழந்ததிலேயே காணக்கூடும். ஆ ! இழந்தேன்...........இழந்தேன். இழந்த பொருளும் ....என் உயிரை அழித்துக்கொள்வதற்கான ஒரு கருவியை வெளியாருக்குக் கொடுத்துவிட்டேன்........ அதனை எடுத்து வாசிப்பவர்கள் என்னென்ன நினைப்பார்கள்! ஒரு இளம் பெண், ஒரு சங்கத்தின் காரியதரிசி, இதுவரையிலும் நன்னடக்கைக்குப் பாத்திரமாயிருந்தவள் என்று எண்ணப்பட்டு வருபவள், அந்தரங்கமாக ஒரு மாணவன்மீது......ஆம்......ஜாதியில் அவனோ நீசன்........நான் அவன் எவ்வளவு மேலானவனென்று தத்துவம் பேசினும் வெளியார் ஒப்புவார்களா ?........ அவர்கள், தமயந்தி இரகசியமாக ஒருவன்மீது நட்பு—என் காதலே—கொண்டிருந்தாளென்று தெரிந்துகொண்டால்—எப்படி ? என் வாயால், கையெழுத்தினால் தெரிந்துகொண்டால்—என்னைப்பற்றி என்னென்ன அவதூறுகளெல்லாம் பரப்பமாட்டார்கள்; நினைக்கமாட்டார்கள் ? ....ஒரு சங்கத்தின்—பெண்கள் சங்கத்தின்—

காரியதரிசியின் யோக்கியதை இப்படிப்பட்டதென்றால் எந்தப் பெண்ணையேனும் அச்சங்கத்தில் சேரவிடுமா உலகம்?.........அதிலும் நானோர் விதவை. விதவையின் கதியிதுவானால்—பிறருக்கு என்ன வதந்தியைத் தான் பரப்பமுடியாது—சீ! வாழ்க்கையை வெறுப்பதே சாலச்சிறந்தது. வேண்டாம், வேண்டாமிந்த வுயிர்.........இப்போது மணி 5 ஆகிவிட்டது. சுமார் 12 மணியாயிற்று குறிப்புப் புத்தகம் கைவிட்டுச் சென்று. இத்தனை நேரம் அவதூறு சொல்வார் கையில் கிடைத்திருந்தால்—ஐயோ!—நான் வாழவும் வேண்டுமா? உலகம் எவ்வளவு இழிதகைமையுடையது!—ஆண்கள் நான் எழுதியிருந்ததுபோன்று பலபட எழுதி விட்டாலும் அவ்வளவு பிரமாதமாகாது.........ஒரு பெண்ணெழுதிவிட்டாளென்று தெரிந்துகொண்டால் என்ன கொடுமை! என்ன கொடுமை........"

என்றிவ்வாறு பல பல புலம்பிக்கொண்டு தன் வீட்டின் பிற்புறமுள்ள பெரிய தோட்டத்தில் உட்கார்ந்திருந்தாள் தமயந்தி. அப்போது, அவள் கூறியவாறே, மணி 5 இருக்கலாம். தம் நாலாபுறமும் அழகிய பூஞ்செடிகள் மனோகரமாக வளர்ந்து நிற்கின்றன வென்பது அவளுக்குப் புரியவேயில்லை. அழகிய சிறு பறவைகள் துள்ளிக்குதித்து விளையாடிக்கொண்டிருந்ததும், தண்ணிய மந்தமாருதன் அராபியன் கடல் குளித்து ஆங்கு உலாவிக்கொண்டிருந்ததும் அவளுக்குத் தெரியவேயில்லை. கடல் வீழும் செஞ்ஞாயிறு விடுக்கும் பொற்சோதி செடிகொடிகளையும் அவளையும் தழுவுவது, ஒரு தாய்தான் தன் சேயைப் பிரிந்து செல்லுங்காலத்தில்

அதனைக் கட்டித் தழுவி முத்தமிடுவதுபோன்றிருந்தது என்பதனையும் கவனித்தாளல்லள். தன் முன்னல் வெள்ளியைப் பொடி செய்து பரப்பினாறபோல விரிக்கப் பட்டிருந்த வெண் கடல்மணலை என்னவென்று நினைத் தாளோ ; அதின்மீது கண்ணீரைத் துளிதுளியாய்விட் டுக்கொண்டிருந்தாள். அழுகையும் கவலையும் கலந்தி ருந்ததால் அவளது முகம் சிவந்து, அது காலைவானத் தில் காணப்பட்ட சிவப்பு நிறத்தோடு போட்டி போடு வதாயிருந்தது.

நீண்ட நேரம் ஒருவன் தன் கவலை வெளிப்படுமாறு அழுது கண்ணீர் சிந்திவிட்டானென்றால் அவன் மனம் ஆறுதலடைந்துவிடுமென்று கூறப்படுவதுண்டு. அதே போல தமயந்தி நெடுநேரமாக அழுது கண்ணீர் சிந்திய தும் அவளது வருத்தம் சிறிது ஒழிந்தது. ஒழிந்ததும் மேகம் கலைந்த விடத்து சூரிய ஒளி பிரகாசிப்பதுபோல அவளுள்ளத்தில் ஏதோவொரு எண்ணம் உதயமாயிற்று. உடன் கொஞ்சம் நம்பிக்கைகொண்ட தோற்றத்தோடு " ஆம்.........சாரளாதேவி வருவதென்றால் ஊருக்குள் பெரும் பரபரப்பிருக்குமல்லவா? போலீசார் காலை ஆறுக் கெல்லாம்—அதாவது ஜனங்கள் தூக்கம் விழித்து வெளியே வருவதற்குள்—ரோடுகளில் நடமாடத் தொடங்கிவிட்டார்களே. சுமார் 2 மணி வரையிலும் அவர் கள் பல ரஸ்தாக்களையும் விட்டு அகலவில்லையே. இந்த நிலைமையில் நான் காலை ஆறு மணிக்கு சங்கக் கட்டிடத் துக்குப் போகும்போது தான் புத்தகத்தைத் தவற விட்டுவிட்டேனென்றால் நிச்சயமாகவும் அது போலீசார் கையிலேயே கிடைத்திருக்கும். அன்றியும் நான் சங்

கக் கட்டிடத்துக்குச் சென்று வெகுநேரமானது வரையி லும் ஒருவரும் எதிரே வரவில்லையல்லவா ?.........ஆம் போலீசார் கையில் கிடைத்திருந்தால் அது ஸ்டேஷ னுக்கே வந்திருக்கவேண்டும். மேலும் சாரளாவின் வரு கையால் பெண்கள் சங்கத்தின் மீது கண்வைத்திருக்கும் போலீசார் அச்சங்கத்தின் காரியதரிசியின் குறிப்புப் புத் தகத்தைக் கண்டெடுத்தார்களென்ருல் ஸ்டேஷனுக்குக் கொண்டுவராமலிருப்பார்களா ?.........நல்லது. ஸ்டே ஷனுக்கே எழுதுகிறேன்—இன்ஸ்பெக்டர் வெங்கோபா சாரியார் நம் ஜாதியார்; தாத்தாவின் ஆப்த நண்பர். அவ ருக்கு என் காகிதம் கிடைத்தால் டயரியைத் தேடித் தருவதைத் தவிர வேறு வேலையிராது. ஆகவே கடித மெழுதிப் பார்க்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து வீட்டுக்குள் சென்ருள். அங்கு மேஜைமீது காகிதம் பேனு ஆகியவை காத்துக்கொண்டிருந்தன. எனவே ஆங்கிலத்தில் அடியில்வருமாறு ஒரு கடிதத்தை எழுதினுள்.

கடிதம்.

கண்ணியந்தங்கிய ஐயா !

வணக்கம். இன்று காலையில் எனது குறிப்புப் புத் தகமும், சில கையெழுத்து வியாசங்களும் தவறிப்போய் விட்டன. பெரும்பாலும் அவை பெரிய ரஸ்தாவிலே யே விழுந்திருக்கவேண்டும். அப்படியானுல் தங்கள் பார்வைக்கு வந்தாலும் வந்திருக்கலாம். வந்திருந்தால் சிரமம் பாராது உடன் அனுப்பிவைக்கவும். ஒருகால் ஸ்டேஷனை கிட்டவில்லையென்ருல் அதனைப்பெற இயன்ற அளவு முயல்வீர்களென்று நம்புகிறேன். எனக்

குக் குறிப்புப் புத்தகம் எவ்வளவு முக்கியமானது என்பதை கூறவேண்டாமல்லவா ? ஆகவே சிரமம் பாராமல் ஆவன செய்வீர்களென்று நம்புகிறேன். என் டயரியை வேறொருவன் வைத்திருப்பது மன்னிக்கமுடியாத குற்றமல்லவா ?

மல்லிகை நிலயம்,
நந்தன்கோடு.
1 செப். 1926.

இங்ஙனம், பணிவுள்ள
தமயந்தி.

இக்கடிதத்தை எழுதி அதில் திரு. வெங்கோபாசாரி, போலீஸ் இன்ஸ்பெக்டர், நந்தன்கோடு என்ற விலாசத்தையும் பொறித்து ஒரு வேலைக்காரன் மூலம் அனுப்பினுள்.

அனுப்பியவள் கொஞ்சம் ஆறுதல் அடைந்தாள் போலிருக்கிறது ; அவள் கொஞ்சம் தெளிவடைந்த முகத்தோடு மீண்டும் பூந்தோட்டத்துக்கு சென்றுள். அப்போது மாலைக்காலத்தின் செவ்வி யொருவாறு அவளுக்குப் புலப்பட்டது. எனினும் குறிப்புப் புத்தகத்தைப்பற்றிய முழு எண்ணமும் அவள் மனதைவிட்டு மாறிவிட்டதாகத் தோன்றவில்லை. நெடுநேரம் தான் அனுப்பிய கடிதத்தைப்பற்றி யோசித்துக்கொண்டேயிருந்துவிட்டு, "ஆம்—நான் செய்தவேலையில் இன்னும் ஒரு நன்மையிருக்கின்றது. போலீஸ்ஸ்டேஷனுக்கு விஷயமறிவிக்கப்பட்டுவிட்டதால் யாராவது என்னிடம் புத்தகத்தைக் கொடாமல் வைத்திருந்தாலும் அதன் உள்ளுறையை வெளியே பிரசாரம் செய்ய முயலமாட்டார்கள். சிலகால் என்னிடம் அனுப்பிவிட நினைத்தாலும் நினைக்கலாம். எப்படியும் வெங்கோபாசாரிக்குக் கடிதமனுப்பி

யது அனுகூலமே. அவர் என் ஜாதியாதலால் கொஞ்சம் சிரத்தையுடன் வேலை செய்யக்கூடும்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

இப்படி அவள் புலம்பிக்கொண்டிருந்தபோது மணி ஐந்து ஐம்பது. பனிக்காலமாதலால் இருள் பரவ ஆரம்பித்துவிட்டது. அப்போது அவள் மனம் திடுக்கிடும்படியான ஒரு செய்தி நடைபெற்றது. அவளுடைய சமீபத்தில் ஒரு செடி மறைவில் ஆனந்தகிருஷ்ணன் நின்று கொண்டிருந்தான். திடீரென்று அவன் வந்ததைக்கண்டதும் திடுக்கிட்டு தமயந்தி எதிட்டுப் பார்த்தாள். ஆநந்தகிருஷ்ணனின் முகத்தில் கலக்கத்தின் தன்மை நிலவிக்கொண்டிருந்தது. கைகால்கள் நடுக்கமுற்றிருந்தன. நெஞ்சு விம்மி விம்மி அமர்ந்தது. தொண்டை சுத்தமாகப்பேசமுடியாதபடி கம்மியிருந்தது. கண்களில் பயம் சுழன்றுகொண்டு நின்றது.

இத்தகைய தோற்றத்தைக் கண்டதும்—எத்தனையோ நாட்களாக அவனுறவை நாடி ஏங்கியேங்கித் தயங்கியவளல்லவா?—தமயந்திக்கு ஒன்றும் தெரியவில்லை. வியப்பும் திகைப்புமாகிய போர்வைகள் சூழ்ந்துகொண்டன; அவற்றினூடு ஆநந்தகிருஷ்ணனைக் கொஞ்சமே பார்க்க முடிந்தது.

ஆனல் மாலை வேளையில் ஒரு ஆடவனும் பருவ மங்கையொருத்தியும் தனியாக, செடி மறைவில் நின்றுகொண்டிருந்தால் என்ன சொல்லுமுலகம்! ஆகவே தமயந்தி தயங்கி அங்குமிங்கும் பார்த்துவிட்டுப் பூமியை நோக்கி "தாத்தா வீட்டிலிருக்கிறர்; கண்டுகொள்வார்"

என்று அடைத்துத் தடைசெய்துகொண்டிருந்த குரல் வழியாக சிரமப்பட்டுச் சொன்னாள். அவள் கைகள் அவளுடைய சிங்காரப் பூமேனியைப் பொதிந்திருந்த பச்சைப்பட்டாடையின் முன்தானையின் ஒரு மூலையைப் பிடித்து உருட்டிக்கொண்டேயிருந்தது.

இந்தக் காட்சியைக்கண்டான் ஆநந்தகிருஷ்ணன். ஷேக்ஸ்பியர் கூறும் வீனஸின் ஞாபகம் வந்துவிட்டது. தமயந்தியை பாதாதிகேசம் பார்த்தான்—இல்லை அவன் கண் வருடியது—உள்ளம் அழகுப்பிரவாகத்தைப் பருகியது. இதயம் பட்டபாட்டை இப்புத்தகத்தில் எழுதிவிடமுடியாது.

மந்தத்திலும் மந்தமடைந்திருந்த புத்தியால் தமயந்தியின் கூற்றைக் கிண்டிக்கிளறிப் பார்த்தான். "தாத்தா இருக்கிறார்; கண்டுகொள்வார் என்பது பதில். இதன் கருத்து எனக்கு எவ்விதமான தடையுமில்லையென்பதல்லவா? ஆம். குறிப்புப் புத்தகந்தான் எடுத்துக்காட்டாயிருக்கின்றதே. தமயந்தியின் சம்மதத்திற்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமா?" என்று அவனுடைய நியாய அறிவு விளக்கம் கூறியது. இத்தனையும் நாம் கூற சில நிமிஷங்களாயினவெனினும் அவன் மனம் ஒரு நிமிஷத்தில் வியாக்கியானம் செய்து விட்டது. எனவே இடறிய குரல் காரணமாக பேசமுடியாது நகைத்தான்.

இன்னும் சில செகண்டுகள் இருவரும் மௌனமாய் நின்றனர். அப்பால் ஆநந்தகிருஷ்ணன் "தமயந்தி—ஆம்! இன்றுதான் உன் திருநாமத்தை வாயால் நவிலும் பெரும் பேற்றைப்பெற்றேன். இன்றுதான் உன்

திருமேனியை கண்சார்த்தும் பாக்கியத்தை யெய்தினேன். இன்றுதான் சில அடிகளுக்குள் உன்னை அணுகிநிற்கும் மகாத்மியத்தை அடைந்தேன். என் தமயந்தி!நான் எவ்வாறு வந்தேனென்பது தெரியுமல்லவா ?" என்றான்.

தமயந்தியின் முகம் நாணத்தால் விளறியது. அப்பேதம் வேறொருவருக்கென்றால் விகாரமாயிருக்கலாம் போலும். நம் தமயந்திக்கோ, ஆ! ஆநந்தகிருஷ்ணனின் இருதயத்தை வாய்வழி வெளியே இழுப்பதாயிற்று. அதனைக் காணக்காண ஆநந்தகிருஷ்ணன் குழைந்து வெந்து நீருனன்.

அவன்:—தமயந்தி! இன்று காலையில் நீ பெரிய ரஸ்தா வழியாக சங்கக் கட்டிடத்துக்குப் போனுயன்றே? அப்போது நீயொரு பெண்ணை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தாயென்பது ஞாபகமிருக்குமே—அப்போது உன் கையிலிருந்து குறிப்புப் புத்தகமும் சில வியாசங்களும் கீழே விழுந்தன. அவற்றை நீ கவனியாமல் போய்விட்டாய். நான் வேறு யாரேனும் அந்நியர் எடுத்துவிடலாகாதேயென்று எண்ணி யோடிப்போய் கைப்பற்றினேன். உன்னிடம் அப்பொழுதே கொடுத்திருப்பேன்...........ஆனல்—

தமயந்தி:—(முகத்தில் ஓர் மின்னல் தோன்றி மறைந்ததுபோன்ற மாற்றத்தோடு) நல்லது; அதை நாளைக்கொடுத்துவிடுங்கள்.........இப்போது நாழிகையாகிவிட்டது. தாத்தா வரும் நேரமாகிவிட்டது.

ஆனந்த:—நீ உறுதியா யிருக்கும்போது ஒரு தாத்தா...........

தமயந்தி:—நல்லது—நான் போகிறேன்—இல்லை நாத்தா வந்து விட்டால், அல்லது வேறு யாரேனும் கண்டுவிட்டால், தடை செய்ய முடியாத ஆபத்தாகி விடும்.

ஆனந்த:—என் ஆருயிரே! இவ்வாறு பயந்து, அஞ்சி, கலங்கி இன்னும் எத்தனை நாளைக் கழிப்பது— இரண்டு வருடமாக நான் பட்ட பாட்டை நீ அறியமாட்டாயா? என் ஆசைக் கொழுந்தே இன்னும்—

தமயந்தி:—(திரும்பி நடப்பவள் போல ஒரு அடி வைத்துக்கொண்டு) இந்த வார்த்தை யெல்லாம் இங் கல்ல...........

ஆநந்த:—தமயந்தி என்னை நீயும் உன்னை நானும் அறிந்துவிட்ட பிறகும் ஏன் இப்படிக் காயவேண்டும்? நாணமென்றாலும் அதற்குமொரு காலாவதியில்லையா?

தமயந்தி:—நீங்கள் தயவு செய்து குறிப்புப் புத்த கத்தை ஆதாரம் காட்டலாகாது.

என்றதும் அவள் விம்மி விம்மி அழ, கண்களி லிருந்து முத்துப்போல் ஜலம் விழத் தொடங்கியது. மேலும் அவள்:—நான் ஏதோ சிறு பிள்ளைத்தனமாய், பெண் புத்தியாய், பேதமையினால் ஏதோ எழுதிவிட் டேன்............தயவு செய்து நீங்கள் அவற்றை மன் னித்துவிடுங்கள். உண்மையாக என்னைநீங்கள் நேசித் தால் எனக்காக அதனை மறந்துவிடுங்கள்.

ஆநந்தகிருஷ்ணன் தமயந்தி அழுவதைக் கண்டும், அவளை அணுக வொட்டாமல் பேசுவதைக் கண்டும்,

குறிப்புப் புத்தகத்தில் புதையலிருப்பதாக நினைத்திருந்த அண்டாக்கள் திறக்கத் திறக்க வறியனவாய்ப் போவதைக் கண்டும் ஏமாற்றமும் பித்தமும் கொண்டு :—தமயந்தி! நிஜமா! நிஜமாகவா என்னை வெறுக்கிருய்? ஆ! நான் என்ன கனவா காண்கிறேன்! என் அஞ்சுகமே! நீ ஆநந்தகிருஷ்ணனை—மிஸ்டர் தமயந்தியையா ஸ்ரீமதி தமயந்தி வெறுக்கிருள்? இரண்டு வருடத் தவத்தின் பிரயோஜனமாவிது!—குறிப்புப் புத்தகத்தில் கண்ட சொற்றொடர்கள் சிறு பிள்ளையின் கையெழுத்தா? (விழித்தான்.)

தமயந்தி:—எப்படியேனும் ஆகட்டும். தயவு செய்து டயரியைக் கொடுத்தனுப்பிவிட்டு எல்லாவற்றையும் மறந்துவிடுங்கள். என் மீது எவ்விதத் தப்பெண்ணமும் கொள்ளவேண்டாம். என் உயிரைக் குடியாதீர்கள்!

ஆநந்த:—உன் உயிரை நானு குடிக்கின்றேன் தமயந்தி? இல்லை. இல்லை. என் உடம்பில் அவ்வளவு சக்தியில்லை. இரண்டு வருடமாக—அதிலும் ஜூன் மாதத்திற்குப் பிறகு நான் முக்கால், அரை, காலாகக்குறைந்து வந்துவிட்டேன். நேற்று வரையிலும் நான் இறந்துவிடுவதாகவே நினைத்தேன். ஆனல் இன்று காலையில் போன உயிர் மீண்டது. இப்போது இதோ நீ கொல்கின்ருய்—தமயந்தி நானிறக்கின்றேன். இறக்கின்ற நான் உன்னை அணுத்துணையும் வருத்தவில்லை. என் ஆருயிர்ப் பிழம்பாகிய, அருள் வடிவாகிய, தமயந்தியை வருத்திய பிறகு நான் உயிருடன் வாழவா? தமயந்தி நீ சுகமே வாழ்க—நானிறக்கின்றேன்—இரண்டு வருட

மாக நான் இறப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த துண்டு—இன்று முற்றுப்பெறுகின்றது. என் புனித தமயந்தி! நானிறக்கு முன் ஒரு வரம் தா. நீ என் மனம் குளிர நானிறந்துவிட்டேனென்று நினை. நீ எவ்வெப் பொழுது இன்பமாயிருக்கின்றாயோ அவ்வப்பொழுது என் நிஜக் காதலுணர்ச்சியின் சத்தியமாக உன் வாழ்வின் சக்தியாகக் கூறுகின்றேன்: நீ "எனக்காக ஒருவன் உயிர் துறந்தா"னென்று நினை. தமயந்தி இன்று தோன்றிய என் நம்பிக்கை இன்றே அழிந்துவிட்டது.

(அவள் உண்மையாகவே ஆநந்தகிருஷ்ணனின் நீண்ட கவலை நிறைந்த இருதயத்திலிருந்து வரும் சொற்களின் உண்மையை உணர்ந்துவிட்டாள்.) எனவே

தமயந்தி:—வீணாக எதுவேனும் சொல்லாதீர்கள்.

என்று கூறிக்கொண்டு ஆநந்தகிருஷ்ணனை அன்பு கனிய ஊன்றிப் பார்த்தாள்—ஆ! என்ன அழகு! எவ்வளவு கோமளம்! பார்வையின் நேர்த்திதானென்னே! என்னே!!

இந்தத் தருணத்தில் "அடே கீழ் சாதி நாயே! பேயே! என்னடா புலம்புகிறாய், உன்ஜாதி முறையை... ...." என்று 120 டிக்ரி காய்ந்து பழுப்பேறிய அம்பு போல் பாயும் சில வார்த்தைகள் உரத்த குரலில் பக்கத்திலிருந்து எழும்பியது. கடும் தூக்கத்தில் காலை இரண்டுதுண்டாய் வெட்டினாலென்ன பொருக்கென இருவரும் சத்தம் வந்தவிடத்தைப்பார்த்தார்கள். கண்ணிரண்டும் தீப்பொறி பறக்க, உதடு நடுநடுங்க, கோபம்பெருகிப் பிரவகித்து ஆளைப்பிடித்திழுத்து நிற்க, முசோலினியை போல நின்றார் தமயந்தியின் தாத்தாவாகிய கஜபதி.

அத்தியாயம் 4.

கஜபதி சாஸ்திரி.

கஜபதி சாஸ்திரி தமயந்தியின் தாத்தாவென்று மேலே கூறினோம். அவர் நம் கதை நடந்தபொழுது சுமார் இருபத்தைந்து ஆயிரம் ரூபாய் ஆஸ்திமானாயிருந்தார். நந்தன் கோட்டிலுள்ள தனிகர்களில் அவரும் ஒருவராய்க் கணிக்கப்பட்டாரென்று இன்றும் சொல்லப்படுகின்றது. இத்தகைய கஜபதி எவ்வாறு தனிகரானார், எவ்வாறு சாஸ்திரியானார், என் நந்தன் கோட்டுக்குவந்தார் என்பனபோன்ற விஷயங்களை நாம் தெரிந்திருக்க வேண்டுமன்றோ?

கஜபதி உறையூரில் பிறந்து வளர்ந்தவர். அவருடைய தாய்தந்தையர் பரம தரித்திரர்கள். பத்துப் பதினைந்து வருடங்களாகக் கஷ்டப்பட்டு சம்பாத்தியம் செய்ததின் பயனாய் அவர்கள் தேடிக்கொண்ட சொத்து ஒரு அரை எக்கர்நிலமும் சுமார் ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வீடுமேதான். இந்த ஆஸ்தியை வைத்துக் கொண்டு கஜபதியும் பெற்றோர்களும் மிகமிகக் கஷ்டப்பட்டு வாணாளைத் தள்ளிவந்தார்கள். அப்படியானால் கஜபதியை நன்றாக கல்விகற்பிக்க முடியுமா?

கஜபதி நான்காவது வகுப்புவரையிலும் கொஞ்சம் தமிழ் கற்றுவிட்டு, அப்பால் ஆங்கிலபாடசாலை புகுந்தான். புகுந்து இரண்டு வருடங்கள் கல்விபயின்றதும் பெற்றோர்களால் கல்விச்செலவை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்கள் தம்புதல்வனை யொரு வேத

6

பாடசாலைக்கு அனுப்பினர். அங்கும் சற்றேறக்குறைய ஒருவருடம் படிப்பு நடந்தது. கஜபதி படிப்பில் எவ்வளவு கருத்துடையவன் என்பது அவனுக்கும், பாடம் கற்பித்த கனபாடிகட்கும், அவன் உடம்பைத் தினசரி பன்னூறுதடவை தீண்டிநின்ற "பிரம்பு" க்குமே தெரியும். அவன், புஸ்தகம், ஆசிரியர், கம்பு ஆகியவற்றோடு ஒரு வருடம் கடுமையாய்ப் போராடியதன் பயனாய் அக்கினிஹோத்ரத்தில் சில செய்யுட்கள், அமரகோசத்தில் ஒன்றிரண்டு பகுதிகள், சந்தியாவந்தனத்தில் சில சுலோகங்கள் ஆகியவற்றைக் கட்டி அடக்கிப் புத்திக்குள் ஏற்றிக்கொண்டான். அவையும் அடிக்கடி அவனது பிடியை விட்டுவெளிப் போந்துவிட முயன்றதுண்டு. ஆனால் கஜபதியின் புத்திசாமார்த்தியம் எளிதானதாயில்லை. ஏதேனும் சுலோகங்கள் ஞாபகத்தை விட்டுப்போய் விடமுயன்றால், உடன் பழைய சுவடிகளை எடுத்துக் காகிதத்தைத்திருப்பி அந்த சுலோகத்தை எப்படியாவது கண்டுபிடித்து மூளைக்குள் குத்திச் செலுத்திக் கொள்வான். இவ்வாறு போனவற்றைப் பிடித்திழுக்கும்வேலை அடிக்கடி நிகழ்ந்துகொண்டிருந்ததால் கஜபதியால் மேலே பொன்றும் படித்துக்கொள்ள முடியவில்லை. என்றாலும் அவன் படித்திருப்பவை அவனுக்குப் பெரியவையாகையால் தானும் பண்டிதர் கூட்டத்தைச் சேரும் தகுதியுடையவன்தான் என்றஎண்ணம் நாளடைவில் அவனது மேன்மாடியில் உதயமாகத் தொடங்கியது.

இவ்வாறு கஜபதி சில வருடங்களைத் தள்ளிவிட்டதும், அவனுடைய கிழத்தாய்தந்தையர்கள், (தாய் முன்னும் தந்தை பின்னுமாக) இறந்துபட்டார்கள். இறந்தவர்கள் பரம தரித்திரர்களல்லவா? அவர்களைத் தம்

பந்துக்கள் என்று சொல்லிக்கொள்ள யார் முன்வருவார்கள்? பெற்றோரையிழந்த கஜபதி தனியனுயினுன். கையிலும் காசில்லை; கடன்கொடுப்பாரு மெவருமில்லை; காப்பாற்ற எவரேனுமுண்டா வென்ருல் அதுவுமில்லை. இந்த நிலையில் பரிதாபகரமாக விடப்பட்ட கஜபதி பலநாள் யோசித்து யோசித்திருந்தான். இறுதியில்தாம் கற்றுக் கொண்டிருந்த மந்திரங்களைத் தகுந்த "சூத்திரர்" களைப் பார்த்து விற்பதே தகுதி யென்று நினைத்தான். ஆகவே சின்னுட்களுக்கப்பால் கஜபதி மடிசஞ்சியுடனும் தருப்பைப்புல்லுடனும் பட்டைநாமங்களுடனும் இதர வைதீக கோலங்களுடனும் தென்னூர், உறையூர், பீம நகர், திருச்சி, பொன்மலை முதலியவிடங்களில் காணப்பட்டான். அதிசீக்கிரத்தில் அவன் ஓர் பஞ்சாங்கப் பார்ப்பனன் என்றபெயர் எங்கும் பரந்தது. ஆனுல் அத்தொழிலில் போதியவருமானம் கிடைத்ததா? இல்லை—நவநாகரிகம் வளர்ந்து, வைதீக வேட்கை குறைந்துவரும் இந்தநாளையில் கஜபதிபோன்ற ஒருவனுக்கு ஏராளமான பணம் கிடைக்குமா? கிடையாது. அதோடு அவன் ஏற்கெனவே படிப்பில் பிரகஸ்பதிஎன்று சொன்னேமல்லவா? அவன் தவருது எந்தக்கல்யாணவீட்டிலும் துக்கவீட்டு மந்திரங்களையும், சிராத்தவீட்டில் தாலிகட்டு மந்திரங்களையும் சொல்லிவந்தான். இந்தப்பயித்தியக்காரத்தனம் சில நாட்களுக்குள் பலருக்குத் தெரிந்துவிட்டது. ஆகவே பார்ப்பனரும் பல பார்ப்பனரல்லாதாரும் அவனைக்கண்டபடி ஏளனம்செய்யத் தொடங்கினுர்கள்.

•

அப்படியிருக்கும் காலத்தில், ஒருநாள் ஒருஅமாவாசையன்று சில பார்ப்பனரல்லாதார் பக்குவமாக

அவனை அழைத்துத் திருவாம்பூருக்குக் கொண்டு சென்று, அங்கு ஒரு குளக்கரையில் சில ஆதிதிராவிட வாலிபர்கட்குத் தருப்பணம் செய்யச்செய்தார்கள். பாதித் தருப்பணம் நடைபெற்று முடிந்ததும் அதே பார்ப்பனரல்லாத வாலிபர்கள் அவ்வூர் பார்ப்பனர்களில் சிலரை அழைத்துவந்து, கஜபதி பறையர்களோடு ஊடாடுவதைக் காண்பித்தார்கள். வந்தவர்கள் நடக்கும் ஆச்சரிய நிகழ்ச்சிகளைக்கண்டு திகைத்து, "பாவி! பறையனுக்கா மந்திரம் செய்கிறாய்?" என்று கத்தினார்கள். இதனைக்கேட்டதும் எற்கனவே சந்தேகம்கொண்டிருந்த கஜபதி பொருக்கெனவெழுந்து கையிலெடுத்த அங்கவஸ்திரத்தோடு குளத்தைத்தாண்டி தலைபிழைத்தது தம்பிரான் பாக்கியமென்று ஓடத் தொடங்கினான். வாலிபர்களெல்லோரும் பின்னாடி போடி போடி. கோவென்றுகத்திக் கேலிசெய்தார்கள். பொறுக்க முடியாத அவமான மேலீட்டால் வாயுவேக மனோவேகத்தில் உறையூரை யடைந்து விட்டான் கஜபதி.

சிலநாட்களாக கஜபதிக்குக் தான்செய்த பெருந் தவறை மறக்கமுடியவில்லை. எங்கிமபங்கித் தபங்கி வீட்டுக்குள்ளேயே இருக்கலானான். அப்படியேஇருந்திருந்தாலும் சனிபிடித்தாற்போல யாரோபாவிகள்! அவனுடைய வண்டவாளத்தை உறையூர் பிராமணர் களிடம் (ஐயங்கார்களிடம்) கூறிவிட்டார்கள். அதுபற்றி அவர்கள் ஒருநாள் ஊர்க்கூட்டம்போட்டு கஜபதிதம் தீச்செயலுக்கு என்னசெய்வதென்று யோசித்தார்கள். கஜபதி "ஐயோ! வெளிக்கு வாராமற்போக வேண்டிய விஷயம் இவ்வளவு பிரமாதமாகிவிட்டதே" என்று

எண்ணி பரமசங்கடப்பட்டு அவர்களிடையேசென்று கண்ணீர் சுரக்க தான்அறியாமற் செய்துவிட்ட தப்பிதத்திற்கு மன்னிப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டான். ஊரார் மனமிளகி யொத்துக்கொண்டு, ஊருக்கு ஒருசிறு தொகையைக் கொடுத்துவிட்டு சாஸ்திரபூர்வம் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்ப்புச் சொன்னார்கள்.

இந்த அவமானத்தால் கஜபதி மிகுதியாகத்தாக்கப்பட்டுவிட்டான். அதோடு அவனுடைய தருப்பண வேட்டையும் பாதிக்கப்பட்டு விட்டது. ஆதலால் சில நாட்கள் ஏமாந்திருந்த பின்னர், தன் ஜீவிதத்திற்காக வேறு தொழி லெதுவேனும் செய்யலாமா வென்று யோசிக்கலானான். அப்போது நல்லவேளையாகப் புதிதாகச் சென்னையிலிருந்து வந்திருந்த ஒரு நாடகக்கம்பனியார் மடிசஞ்சியாக நடிக்கவோர் பார்ப்பனன் தேவையென்று செய்திருந்தவிளம்பரம் கஜபதியின் கண்ணில் விழுந்தது. விழுந்ததும் அவன் மனதில், இராப்பகல் சிராத்த தருப்பணங்களைநாடி 10 மைலுக்கு மேலாக அலைவதைப் பார்க்கிலும், கல்யாணவீட்டு மந்திரம் தருப்பணவீட்டுக்குப் போய்விட்டது என்று குறைகூறப்படுவதைப் பார்க்கிலும், என்னசெய்தாலும் செலவுக்குப் போதிய பணம் கிடையாதிருப்பதைப் பார்க்கிலும், நாடகம் புகுவதே சிறப்புடையதென்ற எண்ணமுதித்தது. உடனே இரகசியமாக அவன் நாடகக்கம்பெனி சொந்தக்காரரைப் போய்ப்பார்த்தான். அவர், கஜபதியின் கிருஷ்ணவர்ணம், ஹனுமான் முகம், பிள்ளையார்வயிறு, கருடன் மூக்கு, ஆதிசேஷனின் கண், தாடகைக்குடுமி, கவந்தனின் உடற்

கட்டு ஆகியவற்றைக் கண்டதும் நகைத்துவிட்டு "நீதான் நான் வேண்டிய வேடத்துக்கு இசைந்த பாம்பொருள்" என்றார். கஜபதிசந்தோஷமெய்தினான். அன்றுதொட்டு கஜபதி டிராமா நடிகனாயினான்.

நாடகத்தில் அவனது வைதீக வேடம் மிக மிகப் பொருத்தமாக விருந்தது என்று சொல்ல வேண்டியதில்லையன்றோ? அவன் இயற்கையாகச் செய்தவைகளெல்லாம் நாடகம் பார்ப்போர் கண்ணுக்கு வேடிக்கையாகத் தோற்றின. ஆகையால் அதிசீக்கிரத்தில் நாடகப்பிரியர்கள் அவனுக்கு நற்பெயர் பல வழங்கினார்கள்.

இங்ஙனம் நாடகத்தில் கஜபதி சிலவருடங்களிருந்துவரவும் அவனுடைய 29 வது வயது வந்துவிட்டது. அப்போது கையில் சில நூறுகளிருந்தன. உடம்பும் கொஞ்சம் தளதளப்பும் மினு மினுப்பும் கொண்டது. இந்தநிலைமையில் அவன் கல்யாணம் செய்து கொள்வதைப்பற்றி சிந்திக்கலானான். அச்சிந்தனை நாளாவட்டத்தில் பலப்படவே எங்காவது இலேசாக—அதாவது விதவைகள், தரித்திரத்தால் உழன்ற பெண்கள், கெட்டவொழுக்கத்தால் வெளியேறியவர்கள், ருதுவாகிவிட்டதால் கல்யாணம் செய்துகொள்ள லாயக்கற்றவர்கள், மாமி புருஷனாகியவர்களோடு சண்டையிட்டுக் கொண்டோடியவர்கள் ஆகிய—பார்ப்பனப்பெண்கள் இருக்கின்றார்களா வென்று ஆராய்வதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தான்.

அப்படியிருக்க, அவனுடைய நாடகக்கம்பனி பாலக்காட்டுக்குவந்தது. பாலக்காடு சுமாராக தமிழும் மலை

யாளமும் பழகுகின்ற ஒரு பெரிய ஊராகும். அங்கு கம்பனி ஒன்றரை மாதம் வரையிலும் ஆட்டம் நடத்திக்கொண்டிருந்தது. அந்த ஒன்றரைமாதமும் கஜபதி ஊரைசுற்றத் தொடங்கினன். சுற்றிச்சுற்றி வருப்போது ஒரு ஹோட்டல் சொந்தக்காரர் அவனுக்கு சினேகமானர். அந்தஹோட்டல் காரருக்கு 60 வயதிருக்கும். அவர் ஜாதியில் பிராமணர். அவருக்கு 50 வயதான ஒரு மனைவியும் 10ம் 13ம் வயதுடைய இருகுழந்தைகளுமிருந்தனர். இவர்களைத்தவிர அங்கு ஒரு பார்ப்பன விதவையும் காணப்பட்டாள்.

இந்த விதவை மங்கலாபுரம் வாசியாம். அகதியாகி விட்டதனாலே இந்த ஹோட்டல்காரரை யடைந்து அவரிடம் பரிசாரிகை வேலைசெய்து காலந்தள்ளிக்கொண்டிருந்தாள். அவளுக்குவயது முப்பதிருக்கலாம். நன்ருக "மொட்டை" யடித்துத் தலையை சிவலிங்கமாக்கி அதன்மீது புடவையின் ஒரு கடைசியைப் போட்டுமூடிக்கொண்டிருந்தாள். என்ருலும் கஜபதியின் கண்களுக்கு அவளுடம்பில் ஏராளமான அழகு புதைந்துகிடப்பதாகத் தோற்றிற்று. அன்றி அவள் கண்களுக்கும் ஒரு விதமானசக்தி யிருந்ததைக் கண்ணுற்ருன். ஆகவே அவன் ஹோட்டலுக்கு வந்தபோதெல்லாம் அவளையொரு பார்வைபார்க்கும் வழக்கத்தை மேற்கொண்டான். அவளும் அப்பார்வைக்குத் தகுந்த விடையளிக்கலானுள். அதோடு வேறு வழியிலும் தம் கருத்தை வெளிப்படுத்தினுள்; ஆனல் தலையில் நூற்றுக்கு அறுபது பகுதி காலியாயிருந்த கஜபதிக்கு அவளுக்கொத்தபடி நடந்து கொள்ளத் தெரியவில்லை. ஆதலால் முதல்

சில நாட்கள் பார்த்து விட்டு கஜபதிமீது அவள் ஒருவித மான எமாற்றைக் காண்பிக்கும் வெறுப்புக்குறியை காட்டலானுள். இதனுடையவும் உட்பொருள் அம் மேன்மடி காலிக்கு விளங்கவில்லை.

ஆகவே, கூரிய புத்தியுடையவளாகிய அவள்—சாரதா என்பது அவளது பெயர்—ஒரு நாள் தன் எஜமானனிடம் கஜபதி தன்னைக் கெட்ட எண்ணத்துடன் ஓயாது பார்த்துக் கொண்டேயிருப்பதாகவும், அடிக்கடி சைகைகள் காண்பிப்பதாகவும் பிராது கூறினுள். அக்கிழ ஐயர் கஜபதியை நோக்கி "என்ன தம்பி உன்னைப் பற்றி சாரதா பிராது சொல்லுகின்ருளே" என்று சொன்ஞராஞலும் அவளிடம் மிகவும் உறுதியாக "கஜபதி மிகவும் நல்லவன்; கெட்ட காரியம் செய்ய முற்படமாட்டான்" என்று கூறிவிட்டார். இவ்வாறு பதில் கூறப்பட்டவுடனே சாரதா—தன் கருத்து உடன் பயனெய்தாமல் போய்விட்டதே யென்றெண்ணினுளோ என்னமோ—ஒருவிதமான மௌனத்துடன் கஜபதியை பேகவனித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய அக்கவனம் கஜபதி தன்னிடம் ஏதாவது கேட்க வருகின்ருனோ வென்று எதிர்பார்த்திருப்பதை ஞாபக மூட்டிற்று.

கஜபதியிடம் ஹோட்டல் புரோப்ரைட்டர் சாரதாவின் பிராதைக் கூறியதும், அவனுக்கு ஒருவிதமான கோபம் வந்து விட்டது. "முண்டை, அவளும் பார்த்தாள்; நானும் பார்த்தேன்; அப்படியிருக்க, என்னைப்பற்றிக் குற்றம் சொன்ஞளல்லவா? சொன்னதில் என்ன நடந்து விட்டது? ஐயர் நான் யோக்கிய னென்று தானேபதில்சொன்ஞர்?" என்று தனக்குள் கூறிக்கொண்டு

தீவிரமாகயோசித்து அவளுடைய கையைப் பிடித்திழுத்துஅவமானம் செய்து விடுவதென்று முடிவுகட்டினான். இம்முடிவோடு அவன் சிலநாள், இரவு விளக்கு ஏற்றும் போதும் அதற்கு முன்னுடியும் ஹோட்டலுக்கு வரத் தொடங்கினான். அவ் ஒவ்வொரு நாளும் அவன் கைக்கு எட்டுகின்ற மாதிரியில் சாரதாவும் அங்கு இயங்கிக் கொண்டிருந்தாள். அதன் கருத்து கஜபதிப் பேடிக்கு விளங்கவில்லை. அதற்குப் பதிலாக அவனுக்குப் பழி வாங்குமுணர்ச்சி வளரலாயிற்று. அப்படி யிருக்க, ஒரு நாள் மாலையில் விளக்கேற்றும்போது கஜபதி சமயற்கட்டுக்குள் செல்ல, அதே வேளையில் சாரதாவும் வாயில் வழி வெளியே கடக்க முயன்றவள் போல் அங்கு வர அவ்வருகையில் இருவர் உடம்புகளும் ஒன்றின. அதனை யொரு தருணமாகக் கொண்டு கஜபதி அவள் கையைப் பற்றி அவள்முகத்தோடு தன்முகத்தைக்கொண்டுபோனான். அவ்வாறு செய்வதால் அவள் நிச்சயமாகவும் சத்தமிடுவாளென்பது அவனது துணிபு. ஆனால் அதிசயத்திலும் அதிசயம்!! சாரதா சத்தம் போடுவதற்குப் பதிலாக நாணத்தோடு குழைந்துநின்று அவனுக்கு ஓர் உளங் கசிந்துருகிய முத்தத்தைக் கொடுத்தாள். அதனைக் கனவிலேனும் எதிர்பாராத கஜபதி திருகாணசுத்தியோடு யேற்றுக்கொண்டு "என்னருமை சாரதா! என்னோடு இவ்வளவு பற்றுக்கொண்டிருக்கும் நீ ஏன் என்னைப்பற்றிப் புகார் கூறினாய்?" என்று பன்முறை கூறி அவளைக் கட்டித்ததழுவிக் கெஞ்சி வேண்டினான். அதற்கு அவள் "நீங்கள் தினசரி பார்ப்பதோடு நிறுத்திக்கொண்டீர்களே யல்லாமல் நான் எத்தனையோநாள் தங்கட்கு சைகைகாண்பித்தும் பதில் சொல்லவில்லையே;

ஆகவே பிரதுசொன்னேன்; (நகைத்துக்கொண்டே) அப்படி சொன்னதினுல்தானே நீங்கள் என்னை அடைந்து விடக் கட்டாய விரதம் கொண்டீர்கள்?" என்ருள். அப்போதுதான் விளங்கிற்று கஜபதிக்கு சாரதாவின் புத்தி சாலித்தனம். எனவே பன்முறை அவள் முகத்தை முத்தங்களால் நிரப்பினுன்.

அதிகமேன்? இருளில்கிடைத்த சாரதாவை அவனுள்ளம் தன்தர்மபத்தினியாய் ஏற்றது. அவளும் கஜபதியை ஆசைக் காதலனுக ஏற்ருள். அதுமுதல் கஜபதி கம்பனி யுணவு தனக்குப் பிடிக்கவில்லை யென்று பாசாங்குசெய்து அந்தஹோட்டலில் சாப்பிடலானுன். சாப்பாட்டோடு ஒன்றிரண்டு நாட்களுக்கப்பால் தூக்கமும் அங்கு மாற்றப்பட்டது.

இவ்வாறு சிலநாட்களானதும் நாடகக்கம்பனி பாலக்காட்டைவிட்டு மங்கலாபுரத்துக்கு நகரத்தொடங்கியது. அப்போது தான் ஏற்பட்டது அவர்களுக்குக்கவலை. சாரதா கஜபதியை விடமாட்டாள்; கஜபதி சாரதவை விடமாட்டான். இருவரும் சேர்ந்து கம்பனியுடனே சென்றுவிடுவதென்ருல், சாரதா தம் சொந்தவூருக்கு விதவை வடிவம்மாறி மணப்பெண் வேஷத்தில் போகப் பிரியப்படவில்லை. கஜபதியும் ஒரு விதவையை உடனழைத்துச் செல்ல விரும்பினுனில்லை. இந்த நிலைமையில் அவதிப்பட்ட இருவரும் பல தினங்களாகத் தனியிருந்து சிந்தித்தார்கள். அப்பால் சாரதாவின் ஆலோசனைப்படி சில கல்யாணக் காகிதங்கள் அச்சிடப்பட்டன. அவற்றில் சாரதாம்பாள் என்ற பெண்ணை கஜபதி சுபமுகூர்த்தத்தில் பாலக்காட்டில் கல்யாணம்

செய்து கொள்ளப் போவதாகவும் அம்முகூர்த்தத்திற்கு நண்பர்கள் பந்து மித்திரர்கள் சகிதம் போகவேண்டு மென்றும் சொல்லும் வாக்கியங்கள் இருந்தன. அக் காகிதங்களை பாலக்காட்டிலெவருக்கும் கொடாது, திரு ச்சி, உறையூர், ஸ்ரீரங்கம் முதலிய ஊர்கட்கு—அதா வது எந்தெந்த வூர்கட்கு அனுப்பினால் விருந்தினர் வர மாட்டார்களோ அந்த வூர்கட்கும், எந்தெந்த வூர்க்கா ரர்கட்குக் கஜபதியின் திருமணத்தைப் பற்றி அறிவிக்க வேண்டுமோ அவர்கட்கும்—அனுப்பினார்கள். அப்பால் ஹோட்டல் கிழவரோடு இருவரும் தம் காதலைப் பற்றிக் கூறிக் கொண்டு ஒரு நாளிரவு மறைந்து போனார்கள். அவர்கள் எங்கெங்கு சென்றார்கள், என்னென்ன செய் தார்கள் என்பதை விளக்கமாக இச்சிறிய புத்தகத்தில் கூறிவிட முடியாது. சுருங்கச் சொன்னால் சில வருடங் களாக அவர்கள் மைசூர் சமஸ்தானத்திலும், இறுதியில் செங்கல்பட்டிலும் சுற்றினரெனத் தெரிகிறது.

பாலக்காட்டைவிட்டு நீங்கி மூன்று மாதமானதும் சாரதா கூந்தல் வளர்த்து நகைகளணிந்து ஒரு அழகி யாகி விட்டாள். உண்மையில் அவள் ஒரு கட்டழகி யென்பதில் சந்தேக மெட்டுணையுமில்லை.

இந்த அக்ஞாத வாசத்தின்போது கஜபதிக்கு சார தாவைப் பற்றிய பூர்வீகசரித்திர விளக்கம் கிடைத்தது. அவள் கஜபதியைப்போல ஜாதியில் ஐயங்காரல்ல (அதா வது அவள் ஓர் அம்மங்காரல்ல.) ஆனால் பிற்பால் கஜ பதி அவளை அம்மங்கா ராக்கினான்.

சாரதா மங்கலா புரத்தில் பிறந்து வளர்ந்து அங் கேயே வாழ்க்கைப்பட்டிருந்தாள். அங்கு சில வருடங்

கள் வாழ்ந்துவரவும் புருஷன் தேகவியோகமானன். அப்போது அவளுக்கு வயது இருபத்துநான்கு. அந்தப் பருவம்முதல் சிலமாதங்கள்-ஏன் சிலஆடுண்கள்—அவள் விதவையாகவே இருந்து வந்தாள். அப்படி யிருக்க நாளடைவில் அவளைப் பற்றிப் பலர் இரகசியம் இரகசிய மாகப் பேசத் தொடங்கினர்கள். அதன் சாரம் அவள் நெறி தவறிவிட்டா ளென்பதும், யாரோ ஒருவர் அந்த ரங்க நட்புக் கொண்டிருந்தா ரென்பதும், வயிற்றிலே சில மாதங்கள் கருப்பமுண்டென்பதுமாம். இந்த வதந்தி கொஞ்சம் கொஞ்சமாக ஊருக்குள் வியாபிக்கவே, பலர் அவளை வெறுக்கவும் வையவும் செய்யத் தொடங்கினர்கள். பந்துக்களாயுள்ளோர் உடம்பைத் துன்புறுத்தவும் செய்யத்தொடங்கினர்கள். இத்தகைய இன்னல்கள் அவளை யண்மத்தொடங்கியபோது சாரதா கொடுங்கோலுறவினர் வாழும் நாட்டினும் கடும்புலிவாழும் காடு நன்றே யென்று தன் கையில் கிடைத்த நகைபொருள் முதலியவற்றைச் சுருட்டிக்கொண்டு வெளியேறினள். அவ்வாறுசென்ற சாரதாவே பால்க்காட்டில் புகுந்தவள். அவள்கையிலிருந்த தொகை 2000 மிருக்கும். அதனைஅவள் தன் பரிசாரிகைவாழ்க்கைமுழுதும் ஒருபையில்போட்டு,இடையில் கட்டி எவருக்கும் தெரியாமல் மறைத்துக்கொண்டேயிருந்தாள். அப்பால் கஜபதியின் சம்பந்தம் கிடைத்ததும் பணம் முழுவதையும் அவன்கையில் கொடுத்துவிட்டாள். அவன் கையிலும் சுமார் 500 ரூபா யிருந்தனவன்றோ? அத்தனையையும்சேர்த்து கஜபதி தம் புதுக்குடும்ப சொத்துப்போல் பாவித்தான்.

இவ்வாஸ்தி கையில்கிடைத்து சாரதாவென்ற மனைவியும் வாய்க்கப்பெற்றதும், உடனே கஜபதி யாது தொழில் செய்வதென்று யோசிக்கலானான். நீண்டயோசனையின்பின் சாரதாஎன்றபுத்தியுள்ளமனைவி பிராமணர்களிடையேபுடவைவியாபாரம்செய்வது ஒருநல்லவருமானமுடைய தொழிலென்றும், தானும் அவ்வியாபாரத்தில் உதவிசெய்யக் கூடுமென்றும் யோசனை சொன்னாள். இந்தயோசனை கஜபதிக்கு மிகுந்த திருத்தியையளித்தது. ஆதலால் கஜபதி நாடகத்தை விட்டுப் பஞ்சாங்கத் தொழிலையும்விட்டு வியாபாரியானான். புடவை வியாபாரத்தில் கஜபதிக்கு ஏராளமான லாபம் கிடைத்தது. லாபம் கிடைக்கக் கிடைக்க ஆசைபெருகுமன்றோ? கஜபதியின் ஆசை பனையளவு உயரத் தொடங்கியது. அவன் இரவு பகலாய் புடவைவியாபாரத்தில் ஏதேனும் அபிவிருத்தி செய்யமுடியுமாவென்று ஆராய்ந்தான். அப்போது பட்டுப்புடவைக்குப் பேர்போன புதுச்சேரியும் அங்கு நடைபெறும் சில சூழ்ச்சிகளும் அவன் தலையில் மின்னின. மின்னவும் சுமார் இரண்டாயிரம் ரூபாயுடன் புதுச்சேரிக்குப் போனான். அங்கு சில பெண்கள் சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டனர். அவர்கட்குச் சில புத்திமதிகளும் கூறப்பட்டன. அப்புத்திமதிகளின்படி அவர்கள் தினசரி காலையில் அவனது ஜாகைக்குப் போகவேண்டும். அவன் அவர்கட்குத் தலைக்கொன்றுக நல்ல பட்டுப் புடவைகளை வழங்குவான். அவர்கள் அவற்றைக் கட்டிக் கொண்டு, ஏற்கனவே கட்டியிருந்த சொந்தப் புடவைகளைக் கையில் வைத்துக் கொண்டு, அவன் கொடுக்கும் டிக்கட்டுகளோடு சுங்க ஸ்டேஷனைக் கடந்து பிரிட்டிஷ் எல்லைக்குள் புகவேண்டும். அங்கிருக்கும் ஒரு ஏஜெண்டினிடம் பட்டுப் புடவைகளைக்

கொடுத்து விட்டு பழைய புடவைகளைக் கட்டிக்கொண்டு மீண்டும் புதுச்சேரிக்குப் போக வேண்டும். இங்ஙனம் அவர்கள் தினசரி இரண்டு மூன்று தடவை செய்தாலும் செய்யலாம். ஆ! கஜபதியின் மூளைதான் என்னே? இங்ஙனம் சுங்கம் கொடாமல் கஜபதி வியாபாரம் நடத்தி வந்ததினால் அடைந்த லாபம் இவ்வள வவ்வளவல்ல.

இப்படி வியாபாரம் நடத்தி வந்த காலத்தில் ஒரு நாள்கஜபதி ஒரேமுச்சில் ரூபாய் ஆயிரத்தை சம்பாதித்து விட்டான். அது எவ்வாறெனில், கஜபதி புதுவையில் தங்கியிருக்கும்போது கடன்காரருக்குப் பயந்த ஒருவன்-திருச்சியில் பெரிய தனவந்தனாயிருந்து கெட்டுப் போனவன்—பலதடவை கஜபதியோடு பேசிப் பழகி யிருந்தவன்—புதுச்சேரிக்குப் போனான். அங்குள்ள வசதிகளையும் இதர சௌகரியங்களையும் பார்த்து அவனுக்கு அங்கேயே பன்னிரண்டு வருடமும் தங்கிவிட வேண்டுமென்ற எண்ணமுதித்தது. ஆகையால் வீடு முதலிய வசதிகளைத் தேடிக் கொள்வதற்காக தன் வீட்டாரிடம் 1000 ரூபாய் அனுப்பிக் கொடுக்குமாறு தந்தி யனுப்பினான். கடன்காரன் தந்தி மணியார்டர் பெறுவதென்றால் அது பெரும்பாலும் உருப்படாமற் போகக் கூடுமல்லவா? ஆதலால் அவன் தன் விலாசத்தை C. N., c/o கஜபதி, 105, பஜார் தெரு, புதுவை (அதாவது பஜார் தெரு 105ம் நம்பர் கட்டிடத்திலிருக்கும் கஜபதி மேற்பார்த்து ஸி. என். என்பவருக்குக் கொடுக்கவும்) என்று பொறித்தான்.

இத்தகைய தந்தி யொன்று அனுப்பப்பட்டதும் கஜபதிக்கு வந்த பேராச்சரியத்திற்கும் பேராசைக்கும்,

பெருமகிழ்ச்சிக்கும் அளவில்லை.அவன் தந்திவந்தால் எப்படியாவது ஸி. என்னை ஏமாற்றி விடவேண்டுமென்று யோசித்துக் கொண்டே யிருந்தான். அதற்கான வழிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அப்படியிருக்க, நல்லவேளையாக தந்தி மணியார்டர் ரூபாய் ஆயிரம் 5-15-க்கு வந்தது. தந்தி சேவகன் கஜபதியின் 105-வது நம்பர் கட்டிடத்தில் வந்துதோன்றினன். உடனே கஜபதி அவனை யோர் பாக்கியம் கொணர்ந்த பரம்சோதியாகவும் தந்தியாபீசை சங்கநிதி குவிந்துகிடக்கும் தடாகமாகவும் உருவகப்படுத்தி "ஐயா சி. என். வெளியேபோயிருக்கிருர்; வந்ததும் அழைத்து வருகிறேன்" என்று பதில் கூறினன். கூறியதும் மின்வெட்டி மறைந்தாற்போல புதியதொரு எண்ணம் வர "ஆ! சி. என் வீட்டிலில்லை; கடற்கரையி லுலாவுகின்ருர். உலாவட்டும். நான் என் புத்திசாலித்தனத்தைக் காண்பிக்கிறேன்." என்று கூறி அவனோடு கூலிவேலைசெய்யும் ஒருவனை போஸ்டாபீஸுக்குக் கொண்டுசென்று கையெழுத்துப் போடச் சொல்லி, அவனே சி. என். என்று தந்தியாபீசருக்குக் கூறி,ரூபாய் ஆயிரத்தையும் பெற்றுக்கொண்டான். அப்போது மணி 5-30 இருக்கலாம்; ஆனல் நச்சரவாகிய கஜபதி 5-40 ரயிலில் வீடுநோக்கிப் பிரயாணமாகி விட்டான்.

இரவு எழுமணிக்கு சி. என். களைத்த உள்ளத்தினனய், பணத்தைக் காணவில்லையே என்ற கவலைகொண்டவனய் 105ம் நம்பருக்கு வந்தான். கஜபதி யில்லை;தந்தியாபீசில் கேட்க எல்லாம் வெளிச்சமாயிற்று. என்செய்வான்?

கஜபதியின் மனைவி அதுகாலை சிதம்பரத்தில் தங்கி வந்தாள். அங்கு இரவு 12 மணிக்கு வந்துசேர்ந்தான். வந்ததும் தன் கலக்கமும் சந்தோஷமும் கலந்த பற்பல விதவெற்றியை சாரதாவுக்குக் கூறினான். (ஆனால் தன் தந்திக்கொள்ளையை எடுத்துக் கூறவில்லை.) இருவரும் பின் தங்கள் தொழிலின் லாபத்தைக் கணக்கிட்டனர். அந்தோ! என்ன ஆச்சரியம்! இரண்டாயிரத்துஐந்நூறு ரூபாய் மூன்று வருடத்தில் பதினோராயிரத்து எழுநூற்று முப்பதாயிற்று! தித்தியதரித்திரனும் அனுமார் அவதாரமும் உறையூருக்கு ஒரு கறையுமாகவிருந்த கஜபதிக்கு சுமார் பன்னிராயிரம் ரூபாய் ஆஸ்தி யிருந்த தென்றால் எவ்வளவுதான் சந்தோஷமடைய மாட்டான்!

அடுத்தநாள் அவன் சாரதாவென்ற பேரழகியுடன் பலவருடங்களாய்ப் பிரிந்திருந்த உறையூருக்கு வந்தான். அங்கு அவனுடைய சிநேகிதர் பலரும் வரவேற்றனர். ஒரு நிமிஷத்தில் கஜபதி பாலக்காட்டில் மணம்செய்து கொண்ட மனைவியுடன்வந்துவிட்டார் வந்துவிட்டார் என்று விளம்பரமாகிவிட்டது. அதோடு இரகசியமாக அவர்களுடைய தோற்றத்தி லிருந்து கையில் ஏதேனும் பணமிருக்கவேண்டுமென்று தெரிந்து கொண்டதால் பார்க்கவருவோர் பலராயினர்.

என் அதிகம்? கஜபதி சாரதா ஆகியோர் உறையூரில் குடிபுகுந்து கண்ணிய குடும்பஸ்தரானார்கள். ஊருக்குள் பலர் அவர்களைப்போற்றி சிநேகம் பண்ணலானார்கள். பெரிய உத்தியோகஸ்தர்களும் தனவந்தர்களும் வீட்டுக் குவரத் தொடங்கினார்கள். கஜபதிக்கும் சாரதாவுக்கும் உடம்பு மழமழவென்று கொழுத்துப் பூரிக்கத் தொடங்

கியது. வயிறு பெரிதாகி, தசை உப்பத்தொடங்கிக் கன வான் கனவாட்டிகளாயினர். இப்படியிருந்தால் கஜபதி பெரியசாஸ்திரியாக என்னதடை? எல்லோரும் கஜபதி ஐயங்கார் என்பதைவிட்டு கஜபதி சாஸ்திரி என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

அங்ஙனம் மூன்றுவருடங்கள் கடந்ததும் சாரதா 2 குழந்தைகளுக்குத் தாயானாள். அக்குழந்தைகளி லொன்றாகிய அலர்மேலு சென்னை வக்கீலொருவருக்கு வாழ்க்கைப் பட்டாள். இன்னொரு குழந்தையாகிய ரங்க நாதன் திருச்சி ஹீபர் காலேஜில் புரொபசரானார். இவ் விருவர்களுடைய குழந்தைப் பருவத்தையும் பற்றி அறிய வாசகர்கள் ஆசைப்படமாட்டார்களென்று எண்ணுகின்றோம்.

கஜபதியின் புதல்வராகிய ரங்கநாதன் உரியகாலத் தில் ஸ்ரீரங்கம் பத்மலோசனியை மணந்து நம் கதாநாய கியாகிய தமயந்தியைப் பெற்றார். தமயந்தி குழந்தைப் பருவத்திலேயே பொன்னை உருக்கிக் கட்டியாக்கி சிற் பசாஸ்திரப்படிக் கண்டெடுத்த சித்திர, கோமள, சிங் காரப் பதுமைபோல் பொலிவுற்றிருந்தாள். அவளது மழலைசொல்லிலும், பேச்சிலும், நடையிலும், பார்வையி லும் ஓர் தனி நயமிருந்தது. அவளை எழு வயது பிரா யம்வரையிலும் வீட்டுக்குள் காண்பதரிது; யாராவது பக்கத்து வீட்டுக்காரர்கள் அழைத்துப் பேசி விளையாடிக் பேசிக்கொண்டிருப்பார்கள். இவ்வாறு தமயந்தி அழ கால் எவ்வளவு சிறந்திருந்தாளோ அதே போல கல்விப் பயிர்ச்சியிலும் மேம்பட்டிருந்தாள். குழந்தையானலும் காலையில் ஸ்நானம் உணவு ஆகியவற்றின் பின்னர் புத்த

கமும் குடையும் எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குச் செல்வதைப்பார்த்தால் பக்கத்து வீட்டார் கண்களெல்லாம் விழிக்கப் பெருமூச்சே விடுவார்கள்.

தமயந்திக்கு எழுவயதானதும் வைதீகத்தில் தலைசிறந்து நின்றவராகிய கஜபதியின் அபிப்பிராயப்படி திருமணம் செய்விக்கப்பட்டது. மணமகனாக வந்தவன் சடகோபன் என்ற ஒரு வாலிபனும். அவனுக்குத் திருமணத்தின் போது எட்டே வயதிருக்கும். அவன் ஹீபர் காலேஜில் இரண்டாவது பாரத்தில் படித்துக்கொண்டிருந்தான். ரங்கநாதனின் பார்வையில் சடகோபன் புத்தியுள்ள மாணவனென்று தோன்றியது; அதோடு நல்ல அழகும் பெற்றிருந்தான். ஆகவே கோலாகலமாக மணம் செய்விக்கப்பட்டு உறையூரில் கஜபதியின் வீட்டிலேயே வளர்க்கப்பட்டான். அவனும் தமயந்தியும் இணைந்து நின்றால் பார்ப்போர் கண்ணுக்கு ஆநந்தமாகவே இருக்கும். ஆதல்பற்றி கஜபதி இருவரையும் ஒன்றாக வைத்து உணவூட்டியும், உறக்காட்டியும், பாடம் கற்பித்தும் வந்தார். நாளடைவில் இருவரும் சகோதரன் சகோதரி போல் வளரலாயினர். சாரதாவும் இருவரையும் ஒன்றாக நிறுத்தியும், ஒன்றாக சாப்பிட வைத்தும், ஒன்றாக படிக்க வைத்தும், ஒன்றாக விளையாட வைத்தும், அழகு பார்த்தாள். ஸ்ரீரங்கத்துக்குக்கடவுள் தரிசனத்துக்குப் போனாளானால் இருசிறு தம்பதிகளையும் தவறாது உடன் அழைத்துச் செல்வாள்.

இங்ஙனம் கஜபதிக் குடும்பம் அன்புற்று இன்புற்று வளர்ந்து வரவே ஒரு பரிதாபகரமான செய்தி

நிகழ்ந்துவிட்டது. கஜபதி பெரிய "சாஸ்திரி"யாகு விட்டதால் பெரும் பெரும் வைதிக காரியங்கட்கு அழைக்கப்படுவாராயினர். ஒருநாள் திருச்சி நாகசுந்தி ரம் பிள்ளை தன் தந்தை காலகதி அடைந்துவிட் டதை முன்னிட்டு, இறந்தவர் வழியில் தவறிவிடாது ஒரேயடியாய் வைகுண்டம் போய்ச் சேர்ந்து விடுவதற் காக ஒரு பசுவை தானம் செய்ய நினைத்தார்! அப்பசு கஜபதியின் பாக்கியமோ துர்ப்பாக்கியமோ அவருக்குக் கிடைத்தது. நிற்க, தானம் செய்வதற்காக வாங்கப் படும் பசுக்கள் எப்போதும் நோய்பிடித்ததாகவும் பிர யோசனமற்றதாகவுந்தானே யிருப்பது வழக்கம்? எந்த வைதிகரும் இதனைக்கண்டித்து நல்ல பசுவே வேண்டுமென்று சொல்வதில்லை. இறந்துபோன ஒருவ ரின் ஆன்மா அக்கினியாற்றைப் பசுவின் வாலைப்பிடித் துக்கொண்டு, பசுத்தாவ தானும் தாவிப்போகவேண்டு வது அவசியமானல், பசு கிழமாயிருந்தால் எப்படி உத் தேசம் நிறைவேறும்? பசு ஒருகால் காலிடறி ஆற்றுக் குள் விழுந்துவிட்டால் ஆன்மாவும் வீழ்ந்து இறந்துபோகாதோ? எங்ஙனமாயினும் பஞ்சாங்கக்காரர் கள் தானமாய்ப் பெறும் பசு நல்லதா கெட்டதா வென்று கவனிப்பதில்லை. இத்தகைய பேதமையே நம் கஜபதியையும் பீடித்தது. அவர் நாகசுந்திரம்பிள்ளை கொடுத்த பசுவை அப்படியே வாங்கிக் கொண்டார். அப்பசு தொண்ணூற்றொன்பது வயது நிறையப்பெற்ற தும் குட்டி போட்டு அலுத்துப்போனதுமாகும். அது தூங்கிக்கொண்டே நிற்பதைப்பார்த்தால் பெரிய ராஜாக் கள் தம் ஆட்சியைத் துறந்து விட்டு உலகை மறந்து மெஞ்ஞானத்தை நாடிக்கண் மூடித்தவமிருக்கும் காட் சியை நினைப்பூட்டும். அது கண்ணைத்திறந்து உலகைப்

பார்த்துப் பல நாட்களிருக்கும். புல் தின்னவோ, தண்ணீர் குடிக்கவோ, பூமியில் சாயவோ செய்வதில்லை. ஓயாது அதன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்துகொண்டே யிருக்கும். அது காணும் சடகோபன் பசுவுக்குத் தாத்தாவை அடைந்ததில் பெருத்த கவலையென்பான். தமயந்தி "தாத்தா பாவம்! பசு எப்போதும் அழுதுகொண்டே யிருக்கிறது. எனக்கு அதைப்பார்க்கும்போது பரிதாபமாயிருக்கிறது தாத்தா. அதை போய்விடச்சொல்" என்பாள். ரங்கனுதனுக்கு அப்பசுவும் தந்தையார் தானம் வாங்கும் வழக்கமும் பிடிக்கவில்லை. ஆனல் கஜபதி வீணில் வந்த பொருளை இழக்கலாகாதென்று பசுவைப் பராமரிப்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்தார். ஒரு நாள் ஒரு மனித வைத்தியரோடு பசுவுக்கு என்ன சிகிச்சை செய்யலாமென்ற யோசனை கேட்கப்பெற்றது. வைத்தியர் உஷ்ணத்தால் கண்ணீர் வரக்கூடுமென்றும், உஷ்ணம் தணிய தண்ணீரிலடிக்க வேண்டுமென்றும் கூறினர். கஜபதிக்கு இவ்யோசனை மிகுதியும் தகுதியென்று தோற்றியது. உடனே பசுவைத் தண்ணீரிலடிக்கும் சிகிச்சையைக் கொஞ்சம் நாகரிக முறையில் நடத்தி விடுவதென்று முடிவு கட்டினர். அந்த முறையென்ன?

பசுவுக்கு நல்ல எண்ணெயை தலைநிறையத் தேய்த்து சியக்காய்த்தூளைப்போட்டுக் கழுவி வெந்நீரினல் ஸ்நாநம் செய்வித்து விடுவதே அம் முறையாம். ஆதலால் வெந்நீரும் எண்ணெயும் தயார் செய்யப்பட்டன. பசு வீட்டுக் கொல்லைக்குக் கொண்டுவரப்பட்டது. அதனைத்தொடர்ந்து வெந்நீரில் ஸ்நானம் செய்

யும் பசுவைப் பார்ப்பதற்காகத் தமயந்தியும் சடகோப னும் வந்தார்கள். அப்போது மாலை 5 மணியிருக்கும். ஆதலால் ரங்கநாதன் வெளியே போயிருந்தார்.

கஜபதி சடகோபனைக்கொண்டு பசுவின் பின்புறத் தைபிடித்துக்கொள்ள சொல்லிவிட்டு அவர் பசுவின்தலை யில் எண்ணெயைத்தேய்த்து வெந்நீரை முகந்துவிட லானார். இரண்டு குவளைவிடப்பட்டதும் பசு சூடுபொறு க்க முடியாமல் திமிறிக்கொண்டு குதிக்க ஆரம்பித்தது. அதோடு காலையும் வாலையும் உதறவும் தொடங்கியது. அப்போது ஆ! என்னபேதமை சாஸ்திரிப்பட்டம்பெற்ற ஐயங்காருக்கு. உஷ்ணத்தைத் தாங்காமல் காலை உதைத்த பசுவின் குளம்பு நிர்பாக்கியவசமாக சடோப னின் மூக்கை தாக்கிவிட்டது. ஐயோ! அழகான சிறிய வாலிபன்! உதைபட்டதுதான்; ஓவென்றலறிப் பூமியில் வீழ்ந்தான். "தாத்தா தாத்தா" வென்று ஒன்றிரண்டு தரம் கத்தினன். முகமாசகலம், உடம்பு முழுதும் அவன் விழுந்தவிடம் எல்லாம் இரத்தம்; நிணம், குருதி! சடகோபன் உடம்பு முழுதும் இரத்தத்தில் தோய்ந் தது. இரண்டு நிமிஷத்திற்குள் பிணமானன். தமய ந்தி "அண்ணு அண்ணு" வென்று தவித்தாள். சாரதா "தம்பி தம்பி" என்று சாற்றினள். பத்மலோசனி "பாவி போய்விட்டாயா" என்று பரதவித்தாள். கஜபதி கண்ணீர்பெருகக் கலங்கிக்கற்போல் நின்றார். பசு சீயக் காயும் எண்ணெயும் தோய்ந்த தலையோடு பறந்துவிட் டது..............................இரவு 9-மணிக்கு ரங்க நாதன் வந்தார். வந்தால் எப்படியிருக்கும்?........... பொழுது புலர்வதற்குள் பல அசட்டுக்காரணங்களைக் கூறி சடகோபன் உடம்பை நீறுக்கிவிட்டனர். ஆனல்

உண்மையில் நீறுனது அவன் உடம்பா அல்லது மற்ற வர்களுடைய மனமா? வாசகர்கள் தீர்மானிக்க.

* * *

நாளடைவில் சடகோபனின் மரணம் கஜபதிக்குடும் பமாகிய மரத்தை அடியுடன் அசைத்துவிட்டது. அவ் வசைப்பைச்சேர்ந்து தமயந்தி விதவையானுளென்ற கவலையாகிய கொடுங்காற்றும் வீசியதால் ஒவ்வொரு கிளையாக முறிந்து விழத்தொடங்கியது. முதன் முத லில் சாரதா சாய்ந்தாள். அப்பால் பத்மலோசனி பாழ் பட்டாள்.

* * *

சிலவருடங்கள் கடந்தன. தமயந்தி மாகாத்மா வின் செல்வாக்கைப்போல நாளொருவண்ணமும் பொழு தொரு மேனியுமாக வளர்ந்துவரலானுள். அவள் வளரவளர அவளோடு போட்டிபோடுகின்ற முறை யில் காந்தி, அழகு, வசீகரம், அறிவு, ஆற்றல் ஆகிய வையும் வளர்ந்தன. 15-வது வயதில் எஸ். எஸ். எல். ஸி. தேர்ச்சியடைந்தாள். அப்பால் உடன் மாணவிகள் இண் டர்மீடியட்டிற்குச் சென்றுர்கள், தமயந்தி மட்டிலும் அனுப்பப்படவில்லை. அப்போதுதான் அவள் கள்ளத் தகுந்த, எள்ளத்தகுந்த விதவையென்ற உணர்ச்சி ஏற் பட்டது. ஆதலால் அதுமுதல் அவள்தான் வகித்து வந்த சுமங்கிலிவேஷம் வெறும் பகட்டென்றும் என் றைக்காவது ஒருநாள் தொலைத்துவிடவேண்டியதென் றும் எண்ணியெண்ணி உருகலானுள். இதனை மூன்று வருடமிருந்துபார்த்தார், மனைவியையும் தாயையும் மாப் பிள்ளையையுமிழந்த ரங்கநாதன். அவரால் தாங்கமுடிய வில்லை. எனவே தமயந்தியின் 18-வது வயதில் உயிர்

துறந்தார். உயிர் துறந்தபோது அவர் ஒரு காரியம் மட்டிலும் தங்கையிடம் கேட்டுக்கொண்டார். அதாவது என்ன? தமயந்தியைப் படிப்பிலிருந்தும் நாகரிக வாழ்க்கையிலிருந்தும் அன்றி மனச்சோர்வடைகின்ற எந்த முயற்சியிலிருந்தும் பின்னிழுக்கலாகாதென்றும், அமங்கலி வேடம் புனையலாகாதென்றும் கஜபதியிடம் கேட்டுக்கொண்டார். இறப்பவராகிய ஒருவர் வேண்டிக் கொள்வதால் அரை ஸ்மார்த்தனும் அரை ஐயங்காருமாயிருந்த கஜபதி அதனை மறுக்கவில்லை.

சுருங்கச்சொன்னால் தமயந்தியின் 18-வது வயது அவளை கஜபதியின் ஏகபராமரிப்பில் கொண்டுவிட்டது. ஆ! ஒரு மனைவியற்ற "காடு வா வா, வீடு போ போ, கட்டை யுனக்கு எனக்கு" என்று சொல்லத்தகுந்த கிழமும் யௌவனம் நடனமிட்டுக் கூத்தாடும் ஒரு அழகுப்பேடகமும் தனிவாழ்க்கை! அக்கிழம் என்று அழிந்தொழியுமோ! அழிந்துவிட்டால் தமயந்தியின் கதியென்ன! ஐயோ! நடுநிலைமையோடு சிந்தித்துப்பார்க்க. கஜபதி இறந்துவிட்டால் தமயந்தியின் கதி யென்னாகும்? அரைக்கணம் அவள் உறையூரில் நிம்மதியாய் வாழமுடியுமா? என்ன பயங்கரம்! என்ன கொடுமை!! இவளை மறுமணம் செய்துவைத்துவிட்டால் என்ன மூழ்கிவிடப்போகிறது? வைதிகம் தடைசெய்யுமாம்! என்ன வைதிகம் வேண்டியிருக்கிறது? இந்தப் பாழாய்ப்போன வைதிகம் நாளை தமயந்தி—என் ஓர் தேவாமிர்தக் கூட்டுணவு, வனரோஜா அல்லது நடுக்கடலில் பெய்ததேன் மாரி அல்லது நெருப்பிலிடப்பட்ட பாரதிகீதம் — அவமானப்பட்டு, கதியின்றி, தொல்லைக்காளாகித் தெருவில் நின்று

கத்தினுல் அல்லது உருண்டால் உதவிசெய்ய முன்வருமா? வைதிக காற்றத்தை வீசிய எந்த முனிக்கூட்டமாவது பார்ப்பன சிரேஷ்டனுவது கைகொடுப்பானு? வெட்கம், வெட்கம், இந்தியாவின் தலைவிதி! இதனை ஆழ்ந்து சிந்திக்கும்போது "இந்தியர்களில் பெரும்பாலோர் காட்டுமிராண்டிகள்; அந்த ஜாதிக்கு ஜனநாயக அரசியலைத்தருவது பைத்தியக்காரத்தனம்" என்று சர்ச்சில் வாயாலெடுத்தது பைத்தியக்காரத்தனமல்ல; அவருக்குப் புத்தியிருக்கிறது என்பதைத்தான் காட்டுகின்றது

ரங்கநாதனின் மரணமேற்பட்டுச் சில வருடங்கள் வரையிலும் தமயந்தி, கஜபதி ஆகியோர் உறையூரிலேயே வசித்துவந்தார்கள். அப்போதுதான் நாமிரண்டாவது அத்தியாயத்தில் கூறிய நிகழ்ச்சிகள்ஏற்பட்டு ஆநந்தகிருஷ்ணனினுள்ளமும் தமயந்தியினிருதயமும் ஒன்ருகியது. அந்த சமயத்தில் ஒருநாள் மாலையில் கஜபதி ஸ்ரீ ரங்கம் சென்றுவிட்டு உறையூருக்குத் திரும்பிவருகையில் வழியில் மூன்று பேர்கள் — மறம் நிறைந்த தோற்றத்தினர் —கையில் கத்திகளோடும் தடிகளோடும் அவர்மீது பாய்ந்தனர். பராமுகமாய் வந்த கஜபதி கல்லவேளையாகப்பார்த்துவிட்டதால் வாயுவேக மனோவேகமாய்ப் பறக்கலானுர். இரண்டு நிமிஷமாயிருக்குமோ என்னமோ! அவருடைய கால்கள் அவரை அரைமைல் பறத்திவிட்டன. அவர் ஓடும்போது தற்செயலாய் ஒரு செடி மறைவில்கண்ணெறிய அங்கு திரு. சி. என் (புதுச்சேரியில் கொள்ளையடிக்கப்பட்டவர்) மீசையில் கைபோட்டு கஜபதியை உருத்துவிழிப்பது தெரிந்தது. உடன் தெரிந்துகொண்டார் கஜபதி திருடர் படையெடுப்பின்

கருத்தை. அவர் "ஐயோ! சி. என். (சி. நாதன் என்பது முழுப்பெயர்) புதுச்சேரிக்குப்பிறகு சென்னை சென்று விட்டார் என்றல்லவோ நினைத்தேன். இப்போது இங்கு வந்துவிட்டாரே! இனி என்கதியென்ன?" என்று நினைத் தார்; அவ்வளவுதான்; ஒன்றிரண்டு நாட்களுக்குள் திருவா ங்கூருக்கு மூட்டைகட்டினார். அங்கு சென்றதின் நோக் கம் திருவனந்தபுரத்தில் கோவில் கொண்டிருக்கும் பதும நாபனைத் தரிசிக்கலாமென்பதும் தமயந்தியின் தோழியா கிய ஸ்ரீமதியின் புருஷனின் துணையைப்பெறலாமென்ப தும், அங்கு போலீஸ் உத்தியோகம் பார்த்துவந்த வெங் கோபாசாரியின் நட்பைப்பெறலாமென்பதுமாம். இந்தப் பிரயாணம் இரகசியமாய் ஏற்பட்டுவிட்டதால் உறையூர் கஜபதியின் செலவறியாமல் தவித்தது. இத் தகைய தவிப்பேதான் ஆநந்த கிருஷ்ணனின் அகத்தை யும் சித்திரவதை செய்து நின்றது.

அத்தியாயம் 5
விஸ்வாமித்திர மகரிஷி.

நாம் முன்னொரு அத்தியாயத்தில் ஆநந்த கிருஷ் ணனும் தமயந்தியும் ஒருநாள் சாயங்காலம் கஜபதியின் வீட்டைச்சேர்ந்த பூந்தோட்டத்தில் பேசிக்கொண்டி ருந்தார்களென்றும், அதனை கஜபதி பொறுக்கமாட்டா மல் கூப்பாடு போட்டார் என்றும் கூறினோம்.

அன்று மாலையில் வெளியே உலாவப் போயிருந்த கஜபதி "கிட்டத்தட்ட" 6-45 மணிக்கு வீடுதிரும்பினார்.

திரும்பியவருக்கு ஓயாது தமயந்தியைப்பற்றிய கவலே யே இருந்துகொண்டிருந்ததினுல் வீட்டுக்குள் அவளைத் தேடினுர். அவள் எங்கும் காணப்படவில்லே. உடனே வேலேக்காரியிடம் வினவினுர். அவள் "அம்மா தோட்டத்திலிருக்கிறுர்கள்" என்ருள். உடன் அங்கு சென்று பார்ப்பது என்று நினைத்த கஜபதி "தடதட"வென்று தோட்டத்துக்குப் போனுர். போனதும் ஆ! என்னென் போம் அவரது வியப்பை! அவரது உடம்பெல்லாம் மரத்துப்போக, கண்ணில் ஆச்சரியமும் புதுமையும் உள் நுழைய, நா பல்லாயிரம் கேள்விகளால் குழம்பிப் போக, மனம் வெட்கம், நாணம், அச்சம் ஆகியவை குவிந்து அடங்கிநிற்க, சுருங்கச் சொன்னுல் ஸ்தம்ப மாய் நின்றுவிட்டார் கஜபதி. என்? அங்கு அநுகாறும் நெறி தவருதவளென்றும்—நல்லொழுக்கத் தலேநின் ருள் என்றும்—நினைத்து வந்த தமயந்தி உறையூரில் சின்னுளாய்த் தொல்லே செய்து வந்ததாய்க்கூறப்பட்ட ஆநந்தகிருஷ்ணனேடு காதல் வார்த்தையாடிக்கொண்டு நின்ருள். அவள் அவனை ஏற்றுக்கொள்ள மாட்டேனென்று கூறுவதும், அவன் குறிப்புப் புத்தகத்தைப் பற்றிக்கூறுவதும், இவை போன்ற பிறவும் அவர் செவியையும் கண்ணேயும் அடைந்தன. அவற்றைக்கேட்கக் கேட்க அவர் மனே நிலைமை யெப்படி யிருந்ததென்று, இந்தியாவுக்கு விடுதலே கொடுக்க முயல்பவர்மீது சர்ச்சில் சிறி விழும் மாதிரியையும், ஆலயப்பிரவேசம் வேண்டுவார் மீது எம். கே. ஆச்சாரியார் சிறிவிழும்மாதிரியை யும் அறிபவருக்கு சொல்ல வேண்டிய தேவையில்லே. நிமிஷத்துக்கு நிமிஷம் கஜபதியின் கண்கள் வெறிபிடித்ததற்கறிகுறியாக சிவப்பு நிறத்தை யெய்தி வந்தன.

உதடு தாளம் போட கைகால்கள் சிறிது நருத்தனம் செய்ய ஒரு செடிமறைவில் நின்ருர் அசையாது.

அதனை காதலபினியால் தலைகறங்கி நின்ற ஆசைக் காதலர் கண்டாரல்லர். அவர்களது பேச்சு நெடுக நிகழ்ந்துகொண்டேயிருந்தது. அப்பேச்சில் அரைப்பகுதிக்கு மேல் கஜபதியின் செவிகளில் நுழைந்தது. கடைசியாக தமயந்தி ஆநந்த கிருஷ்ணனின் வெறுப்பு வார்த்தைகளைக்கேட்டு மனமிளகி அவனை அணையப்போவதைப் பார்த்ததும் அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே சட்டென்று முன்பாய்ந்து "அடே பாதகா" என்ற வார்த்தைகளை வெளியே கொட்டினுர்.

காதற் புகை மூடியதால் வெளியுலகம் தெரியாது மயங்கிநின்ற நெடுநாட் காதலாகிய இருவர்மீதும் கஜபதியின் கூரிய வாக்கம்புகள் தைத்ததும்,தூக்கத்தில் நின்று எழுந்தவர்போல திடுக்கிட்டு அம்புவந்த திசையை நோக்கினர். ஆச்சரியம்! அங்கு — சுமார் இருபது அடிக் கப்பால் ஒரு செடி மறைவில் கோபமே உருவெடுத்து வந்தாற்போல் துடிதுடித்து படபடத்துக் கடுகடுத்த முகத்தோடு நிற்கும் கஜபதியின் வெவ்விய உருவம் தென்பட்டது. உடன் கழியுடன் தம்மை நோக்கிவரும் தலைமையாசிரியரைக்கண்ட மாணவனைபோல் பஞ்சாய்ப் பறந்துபோனுன் ஆநந்த கிருஷ்ணன். தமயந்தியும் ஒரு நாகப்பாம்பு சட்டென்று கொத்தித் தன்னுயிரைப் பற்றிவிட்டாற்போல அடக்கொணு வருத்தமும், நாணமும், வெட்கமும் கொண்டு வீட்டுக்குள் ஓடிப்போனுள். போனபின் எங்கிருந்தாள் என்று கண்டுபிடிப்பது

சிரமமாயிற்று. அவள் தம் படுக்கையறைக்குள் சென்று தாறுமாருகக்கிடந்த தலையணையில் முகம் புதைத்துக் கிடந்தாள். நண்பர்களே! அப்போது அவள் மனம் எப்படியிருந்திருக்கும்? தாலி பறிக்கப்பட்ட ஸ்ரீ மதி பிரபுவின் உணர்ச்சியாவது, உயிர்போம்வரைப் பட்டினி கிடப்பேனென்ற காந்திஜி வார்த்தையைக்கேட்ட கஸ்தூரி அன்னையின் உணர்ச்சியாவது அவள் வருத்தத்திற்கீடாகுமா? தமயந்தி கோடிக்கணக்கான விஷஜந்துக்கள் தன்னைக்கடிப்பதாகவோ, கூரிய கத்தியால் ஒருவன் பக்கத்திலிருந்து சிறிது சிறிதாக வெட்டிச் சித்திரவதை செய்வதாகவோ நினைத்தாள். அவளுடைய மூளை முழுதும் ஏகக்குழப்பமாயிற்று. இருதயம் படீர் படீரென்றடித்தது. கை கால்கள் நடுநடுங்கிக் கண்கள் உலகையே பார்க்கவேண்டாமென்று மூடின.

தன்னைக்கண்டு காதலரிருவரும் பறந்துவிட்டார்களென்று தெரிந்த கஜபதி உலகை அழித்துவிடத் துணிந்தவோர் நச்சரவுபோல் சீறி தமயந்தியைத் தொடர்ந்து வீட்டுக்குள் போனர். அவள் படுக்கையறையில் விழுந்துக்கிடப்பதைக் கண்டார். கண்டதும் "அடீ மனிதத்தோல் போர்த்த பிசாசே! முடிந்ததா உந்தன் வாழ்க்கை? ஆ! என் குடும்பத்தைத் தொலைத்தனையே? என் மானம், ஆசாரம், அந்தஸ்து எல்லாவற்றையும் ஒரு நொடியில் கெடுத்துவிட்டாயே! பேயே, பதரே,...... பிணமே! போனவர்களெல்லாம் போகக் கடைசியாக இதற்காகவா உயிர்வாழ்ந்திருந்தாய்! என் கோத்திரமுண்டான நாள் தொட்டு இதுவரையிலும் ஒரு ; பழிபாவம் செய்தறியாதிருந்ததே. இதுவரையி

லும் ஒரு நாய்கூட விரல்மடக்காத குடும்பத்துக்கு ஆ! எவ்வளவு அவமானம்! எவ்வளவு இழுக்கு எவ்வளவு ஈனம்! சண்டாளி! நீ தலையெடுத்து இந்தக் கதிக்காளாக்கி விட்டாயே! கடைசியாக உன் காரணத்தால் என் மனம் நொந்தா நான் சாகவேண்டும்? உனக்கு என்னென்னவெல்லாம் செய்திருக்கிறேன்?

"பாவி இப்படியா—நீ போகவேண்டும்? உறையூர் உன்னைத்தொலைத்துவிடுமென்றல்லவா இங்கு அழைத்துவந்தேன்; வந்தவிடத்திலும் இப்படியா கெட்டழிய வேண்டும்? அதுதான் சொன்னான் அந்தக்காலத்தில் பெண்களைக் கால்விலங்கு, கைவிலங்கு மாட்டி வீட்டில் கட்டிப்போடவேண்டுமென்று. வெளியே கழுதைமாதிரி அவிழ்த்துவிட்டு விட்டால் இப்படித்தான் எவனையாவது இழுத்துக்கொண்டு வருவாள். எந்தத் தர்ம நியாயமும் பாராது அவனவனை அப்படியப்படியே வைப்பதுதான் சரி......தாசி மாதிரி உன்னை சங்கத்துக்கு விட்டேனல்லவா? அதற்குத் தண்டனை.........உம்...... மொட்டையடித்து வெள்ளைச்சீலையும் கட்டுவித்துக் கழுத்தில் ஜபமாலையும் சாத்தித்தகுந்தபடியுன்னை நடத்தியிருந்தால் இப்படி வந்திருக்குமா?......ஆம்-வேண்டும் எனக்கு இந்தப்பட்டம்.........அட பதரே! எப்படியாவது தொலை. விஷயம் தலைக்குமேல் போய்விட்டது—இனி எனக்குக் கட்டுப்பட்டு நடக்கமாட்டாய்! உன் மனம் போல் செய்......என்னை எதிர் பாராதே......... ....காலம் கலிகாலமல்லவா? இப்படித்தான் நடைபெறும். இதனைத் தெரிந்துதானே பூர்விகாள் சொன்னாள். அவாள் சொல் மாறுமா?...எல்லாம் தலை

கிற்... ஒருவித ஒழுங்குமில்லை. ஜாதியில்லை; சமயமில்லை; ஒழுக்கமில்லை; ஆசாரமில்லை; மேலில்லை; கீழில்லை. பறையன் முதல் பார்ப்பான் வரையிலும் ஒன்றென்கின்றார்கள்—இப்படித்தான் வரும். என் மழை பெய்கிறதில்லை? ரூபாய்க்கு 30 படி. என் விற்கிறது? காலம் கெட்டுப் போயிற்று. பண்டைக்காலத்து முனிவர்கள்தெரியாமலா சாஸ்திரங்களை எழுதினார்கள்...........(மௌனம்-பிறகு) நீ பத்திரிகைகட்குக் கட்டுரைகள் எழுதுவதிலிருந்தே இதையெல்லாம் எதிர்பார்த்தேன்—பாழாய்ப்போன ரங்கநாதன்—முட்டாள்.........இறக்கும்போது சொல்கின்றானே யென்று நானும் இசைந்தேன். நீ எனக்குப்பாடம் கற்பித்துவிட்டாய்................" என்று கூறி அங்கு மிங்கும் ஸ்டேஜில் நடிக்கும் விசுவாமித்திரனைப்போல நடந்து கொண்டிருந்தார்; அந்நடையில் சிலபோழ்து அடிக்கப் போவது போலவும் சிலபோது சபிக்கப்போவது போலவும் பாவனை செய்தார்; சில போது தன்னையே வெறுத்துக்கொள்வதாகவும் அபிநயித்தார்.

இங்ஙனம் அவர் கடுகடுத்துப் பக்கத்து வீட்டாரெல்லாம் கேட்டுக்கொள்ளுமாறு முழங்கிக்கொண்டிருந்ததும், "என்ன சாஸ்திரிகளே! என்ன ஒருநாளுமில்லாதவாறு கோபங்கொள்கின்றீர்களே! என்ன விசேஷமின்று நேர்ந்துவிட்டது? ஜாதியில்லை, மதமில்லை என்றெல்லாம் சொல்கிறீர்களே என்ன சங்கதி" என்று சொல்லிக்கொண்டே அசல் வைதிக வேஷம் தரித்திருந்த, சுமார் 40 வயதான ஒரு ஐயங்கார் வீட்டுக்குள் நுழைந்தார். அவரது முகத்தோற்றமும் உடலின் கன

மும் அவர் கஷ்டப்படாமல் சம்பாதித்துச் சாப்பிடுபவர் என்பதைக் காட்டின. இவர் உள்ளே வந்ததும் கஜபதி கோபத்தினாலே எரிந்து கொண்டிருந்தாராயினும், சற்றுக் குரல் மாறுபாட்டோடு "இன்ஸ்பெக்டரவாளா? வாருங்கள்; உட்காருங்கள்" என்று கூறிக்கொண்டு ஒரு நாற்காலியைக் காண்பித்தார். அதில் இன்ஸ்பெக்டர் உட்காரத் தானுமொரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

இந்த இன்ஸ்பெக்டர்தான் நாம் மேலே குறிப்பிட்ட வெங்கோபாசாரியார். இவர் நம் கதை நடக்கின்ற போழ்து நந்தன் கோட்டில் இன்ஸ்பெக்டராயிருந்து கொண்டிருந்தார். இவர் வேலையில் போலீசைச் சேர்ந்திருந்தாராயினும் இதர விஷயங்களில் பெரும் வைதிகப் பழமாம். சாஸ்திரங்கள் சொல்கிறபடி தாம் நடவாவிட்டாலும் பிறர் சாஸ்திரப்படி யொழுகவேண்டுமென்பது இவருடைய ஆசை. இவர் கருத்துப்படி இவருட்பட எல்லாப் பார்ப்பனரும் பிரமாவின் முகத்திலிருந்து உற்பத்தியானவர்கள்; எல்லா ஜாதியிலும் மேலானவர்கள். எல்லோரும் உழைத்துக்கொடுக்க அவர்கள் ஓரிடத்திலிருந்து வயிறு நிரம்ப உண்டு மகிழ வேண்டியவர்கள். இத்தக்கருத்துக்கு அவர் பராசரர், வேதவியாசர், வான்மீகி போன்ற பெரிய ரிஷிகளெழுதிய சாஸ்திரங்களை எடுத்துக்கூறுவார். அவருக்கு எத்தனை சமஸ்கிருதப் பதங்கள் தெரியுமென்பது சந்தேகமான விஷயம்; என்றாலும் எல்லாம் சாஸ்திரத்திலிருக்கின்றனவென்று கூறுவதில் நிபுணர். மொத்தம் அவருக்குத் தெரிந்திருந்த வடமொழி சுலோகங்கள் எழுபத்து மூன்று. இவற்றை எங்காயினும் தவறாது எடுத்துக்கூறிவிடுவார்.

கீழ்... ஒருவித ஒழுங்குமில்லை. ஜாதியில்லை; சமயமில்லை; ஒழுக்கமில்லை; ஆசாரமில்லை; மேலில்லை; கீழில்லை. பறை யன் முதல் பார்ப்பான் வரையிலும் ஒன்றென்கின்றார் கள்—இப்படித்தான் வரும். என் மழை பெய்கிறதில்லை? ரூபாய்க்கு 30 படி என் விற்கிறது? காலம் கெட்டுப் போயிற்று. பண்டைக்காலத்து முனிவர்கள் தெரியாமலா சாஸ்திரங்களை எழுதினார்கள்..........(மௌனம்-பிறகு) நீ பத்திரிகைகட்குக் கட்டுரைகள் எழுதுவதிலிருந்தே இதையெல்லாம் எதிர்பார்த்தேன்—பாழாய்ப்போன ரங்கநாதன்—முட்டாள்........இறக்கும்போது சொல் கின்றானே யென்று நானும் இசைந்தேன். நீ எனக்கு ப்பாடம் கற்பித்துவிட்டாய்................" என்று கூறி அங்கு மிங்கும் ஸ்டேஜில் நடிக்கும் விசுவாமித்தி ரனைப்போல நடந்து கொண்டிருந்தார்; அந்நடையில் சிலபோழ்து அடிக்கப் போவது போலவும் சிலபோது சபிக்கப்போவது போலவும் பாவனை செய்தார்; சில போது தன்னையே வெறுத்துக்கொள்வதாகவும் அபி நயித்தார்.

இங்ஙனம் அவர் கடுகடுத்துப் பக்கத்து வீட்டா ரெல்லாம் கேட்டுக்கொள்ளுமாறு முழங்கிக்கொண்டி ருந்ததும், "என்ன சாஸ்திரிகளே! என்ன ஒருநாளுமில் லாதவாறு கோபங்கொள்கின்றீர்களே! என்ன விசேஷ மின்று நேர்ந்துவிட்டது? ஜாதியில்லை, மதமில்லை என் றெல்லாம் சொல்கிறீர்களே என்ன சங்கதி" என்று சொல்லிக்கொண்டே அசல் வைதிக வேஷம் தரித்திரு ந்த, சுமார் 40 வயதான ஒரு ஐயங்கார் வீட்டுக்குள் நுழைந்தார். அவரது முகத்தோற்றமும் உடலின் கன

மும் அவர் கஷ்டப்படாமல் சம்பாதித்துச் சாப்பிடுபவர் என்பதைக் காட்டின. இவர் உள்ளே வந்ததும் கஜபதி கோபத்தினுலே எரிந்து கொண்டிருந்தாராணுலும், சற்றுக் குரல் மாறுபாட்டோடு "இன்ஸ்பெக்டரவாளா? வாருங்கள்; உட்காருங்கள்" என்று கூறிக்கொண்டு ஒரு நாற்காலியைக் காண்பித்தார். அதில் இன்ஸ்பெக்டர் உட்காரத் தானுமொரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

இந்த இன்ஸ்பெக்டர்தான் நாம் மேலே குறிப்பிட்ட வெங்கோபாசாரியார். இவர் நம் கதை நடக்கின்ற போழ்து நந்தன் கோட்டில் இன்ஸ்பெக்டராயிருந்து கொண்டிருந்தார். இவர் வேலையில் போலீசைச் சேர்ந்திருந்தாராணுலும் இதர விஷயங்களில் பெரும் வைதிகப் பழமாம். சாஸ்திரங்கள் சொல்கிறபடி தாம் நடவாவிட்டாலும் பிறர் சாஸ்திரப்படி யொழுகவேண்டு மென்பது இவருடைய ஆசை. இவர் கருத்துப்படி இவருட்பட எல்லாப் பார்ப்பனரும் பிரமாவின் முகத்திலிருந்து உற்பத்தியானவர்கள்; எல்லா ஜாதியிலும் மேலானவர்கள். எல்லோரும் உழைத்துக்கொடுக்க அவர்கள் ஓரிடத்திலிருந்து வயிறு நிரம்ப உண்டு மகிழ வேண்டியவர்கள். இந்தக்கருத்துக்கு அவர் பாராசரர், வேதவியாசர், வான்மீகி போன்ற பெரிய ரிஷிகளெழுதிய சாஸ்திரங்களை எடுத்துக்கூறுவார். அவருக்கு எத்தனை சமஸ்கிருதப் பதங்கள் தெரியுமென்பது சந்தேகமான விஷயம்; என்ருலும் எல்லாம் சாஸ்திரத்திலிருக்கின்றனவென்று கூறுவதில் நிபுணர். மொத்தம் அவருக்குத் தெரிந்திருந்த வடமொழி சுலோகங்கள் எழுபத்து மூன்று. இவற்றை எங்காணுலும் தவருது எடுத்துக்கூறிவிடுவார்.

ஓயாது சொன்ன சுலோகங்களையே திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டிருந்ததால் அவருடைய மனைவி முத லியோர் அவற்றைக் கண்ணை மூடிக்கொண்டு கூறிவிடும் ஆற்றல்பெற்றிருந்தார்கள்.

வெங்கோபாச்சாரிக்குப் பண்டைய வழக்க வொ ழுக்கங்களிலிருந்து உலகம் எட்டுணையாவது விலகினால் மானிட சமுகம் பாழ்பட்டு விடுமென்பது அபிப்பிராயம். ஆகவே சீர்திருத்தமென்றோ, விடுதலை சுயராஜ்யம் சம தருமமென்றோ, கலப்புமணம் ஆலயப்பிரவேசம் சமூக சமத்துவமென்றோ கூறிவிட்டால் வரும் கோபம், தான் வழக்கமாய் வியாபாரம் செய்துவரும் சிற்றூரில் புதி தாய் இன்னொருவன் வந்து தாழ்ந்த விலைக்குப் பண்டங் களை விற்பனைசெய்து வருவதைக்கண்ட ஒரு வியாபா ரிக்கு எவ்வளவு ஆத்திரம் பொங்குமோ அவ் ஆத்தி ரத்தை யொத்திருக்கும். அவர் தம் கொள்கையை நிலை நாட்டுவதற்காக எத்தனையோ சீர்திருத்த வாதிகளைத் துன்புறுத்தியிருக்கிறார். இவர் கையில் அதிகாரத்தைக் கொடுத்திருப்பது குரங்கின் கையில் பூமாலையைக்கொ டுத்திருப்பது போலாம்.

இந்த வெங்கோபாசாரியார் எவ்வூரினர், எத்தகை யர், எவ்வாறு திருவாங்கூருக்கு வந்தார் என்று கூறுவது பெரிதும் ரசமான செய்தியாகும். திரு. ஐயங்கார் பிறந்தவிடம் உறையூர். அங்கு ஒரு வறிய குடும்பத் தில் பிறந்த இவர் இளமையில் பெற்றோரால் மிகவும் கஷ்டப்பட்டுக் கல்வி போதிக்கப்பட்டார். நான்காவது பாரத்தில் வாசித்துக்கொண்டிருந்தபோது தமிழ்ப் பண் டிதரின் முதுகில் சட்டையின்மீது அவர் தூங்கும் சமயம்

பார்த்து "கழுதை" என்றெழுதி விட்டானென்ற குற்றத்திற்காகப் பள்ளிக்கூடத்தை விட்டு விலக்கப்பட்டான். வறுமையால் வாடிக்கொண்டிருந்த பெற்றோர் தம்புதல்வனின் அடாத செயலைக் கண்டு அடங்காத கோபங்கொண்டு அகத்துக்கு வெளியே துரத்தி விட்டார்கள். இங்ஙனம் வீட்டையும் பள்ளிக் கூடத்தையும் இழந்த வெங்கோபன் யாது செய்வதென்று தவித்துக்கொண்டே எஸ். ஐ. ஆர். துணை கொண்டு சென்னைக்குச் சென்றான். அங்கு அவன் எவ்வாறு காலந் தள்ளினனென்றால் கனகரஞ்ஜினி காபி ஹோட்டல் பாத்திரங்கட்கே தெரியும். அங்கு சில வருடங்கள் வேலை பார்த்து வந்ததும், ஒரு நாள் மாலையில் அவன் ஒரு ஐரோப்பியர் பங்களா பக்கமாய்ப் போய்க்கொண்டிருந்தபோது அவ்வைரோப்பியரின் புதல்வனாகிய ஒரு சிறுவன் பொழுது போக்காகத் தன் கையில் வைத்து விளையாடிக் கொண்டிருந்த கைத் துப்பாக்கி வெடித்துவிட ஒரு சிறு குண்டு வெங்கோபனின் கையில் பாய்ந்து விட்டது. வெங்கோபன் "அட! பாவி!! நிரபராதியான என்னை சுட்டுக் கொன்று விட்டாயே!" என்றலறிக் கொண்டு கீழே விழுந்தான். அச்சத்தம் பங்களாவிலிருந்த எல்லோர் செவிகளிலும் விழுந்தது. உடனே பெரிய "துரை" வெளியே ஓடி வந்து பார்த்தான். வெங்கோபன் மூர்ச்சித்து இரத்தத்தில் புரண்டு தோன்றினன். "துரையை" பயமும் அனுதாபமும் பெருகி யசைக்க வெங்கோபனை மெதுவாக தன் கட்டிடத்துக்குள் கொண்டு சென்று சிகிச்சித்தான். சுமார் 15 நாட்களுக்குள் காயமும் உடம்பும் சரிப்பட்டு விட்டன. ஆகவே துரை கடைசி நாளையில் வெங்கோபனை நோக்கி அனுதாபத்துடன் "நீ என்னவிரும்பு

இன்றாய்" என்றான். வெங்கோபன் தனது எதிர்கால பாக்கியம் தன் வாயிலிருக்கின்றதென்று தெரிந்து, "எனக்கு சாஸ்வதமாக ஒரு வருமானம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்" என்றான். உடனே துரை சிறிது யோசித்து விட்டு "நல்லது உன்னைப் போலீசில் சேர்க்கிறேன்" என்று கூறி, ஒரு சிறிய வெகுமதியோடு வெங்கோபனை திருவாங்கூருக்கு ஒரு சிபார்சுக் கடிதத்துடன் அனுப்பினான். திருவாங்கூரில் அத்துரையின் சிநேகிதனொருவன் போலீஸ் உத்தியோகம் பார்த்து வந்தான். ஆதலால் வெங்கோபனுக்கு அந்த இலாகாவில் இடம் கிடைத்தது. நாளடைவில் அவன் பல படிகளைக் கடந்து (நம் கதை நடக்கின்றபோது) இன்ஸ்பெக்டர் பதவிக்கு வந்திருந்தான்!

இந்த இன்ஸ்பெக்டர் ஐயங்கார் ஒரு நாள் புதிதாக நந்தன் கோட்டில் குடிபுகுந்திருக்கும் தமது பழைய நண்பர் கஜபதியை சந்தித்தபோது பேரானந்தம் கொண்டு பழைய சிநேகத்தைப் புதுப்பித்தார். நாளடைவில் இரண்டு பேரும் அடிக்கடி சந்திப்பதும் க்ஷேமலாபங்களை விசாரித்துக்கொள்வதும் ஒருவர் வீட்டுக்கு இன்னொருவர் போவதுமாகப் பழகிக் கொண்டார்கள். கொள்கை வழக்கம் முதலியவைகளில் கஜபதி வெங்கோபரை யொத்திருந்தமையால் ஒருவருக் கொருவர் உறைப்போட்டாற் போல ஆயினர். இப்படி அதிகப் பழக்கமாயிருக்கும் சமயத்தில்தான் நம் கதை நிகழ்ந்தது.

கஜபதியும் வெங்கோபாசாரியாரும் உட்கார்ந்ததும் வெங்கோபர்:—என்ன சாஸ்திரிகளே! ஜாதியில்லை மதமில்லை என்கிறீர்களே; என்ன?

கஜபதி:— இல்லை; காலத்தின் கோலத்தைப் பற்றிச் சொன்னேன். என்னென்னமோ சீர்திருத்தம், முன்னேற்றம், கடமையென்று கூறிக்கொண்டு சிலர் சிலர் செய்கிற வேலைகளைப் பார்த்தால் எங்காவது காடு மலை குகைகளுக்குள் சென்று ஒதுங்கிக் கொண்டாலும் கூட பாதகமில்லை என்று தோன்றுகிறது. பறையன் முதல் பார்ப்பான் வரையிலும் ஒன்றாம். அவனவன் அவனவனுடைய தொழிலை செய்ய வேண்டு வதில்லையாம். பார்ப்பானுக்கு சகோதரனும் பஞ்சமன். இருவரும் தோளோடு தோள் போட்டு உலாவுவதுதான் கடமையாம்; அதுவே மனிதர்கடமையாம். அம்மம்மா! என்னென்ன புதுமைக்கள்; என்னென்ன நவீனஙகள்!! என்ன ஆச்சரியங்கள்!!!

இன்ஸ்பெக்டர்:—காலம் கலிகால மல்லவா? அழிந்து போகிற காலம் இப்படியெல்லாம் சொல்லச்செய்கிறது! கலி இலேசானவனா?

கஜபதி:— காந்தியொருவனாலே இப்படி யாச்சு. (யோசித்து விட்டு) போகட்டும்; அவன்தான் சூத்திரன்; சூத்திரனுக்காகப் பேசுகிறான்; என்றால் நம்முடைய பார்ப்பனர்களும் எத்தனை பேர் அவனைப்போல் சொல்லுகிறார்கள்! நேற்று ஒரு புத்தகத்தைப் பார்த்தேன். அதில் இந்தியாவிலுள்ள எத்தனையோ பிராமணர் ஜாதி பேதத்தை யொழிக்க வேண்டுமென்று கூறியிருப்பதாக அவரவர்கள் எழுதிய பகுதிகள் மேற்கோளாகக் காட்டப் பட்டிருந்தன. சில வெள்ளைக்காரர்களும் கூட் ஜாதி பேத மழிந்து இந்தியர் ஒன்றாய் வாழ வேண்டுமென்று சொல்லியிருப்பதாக அப்புத்தகம் சொல்கிறது.

இன்ஸ்பெக்டர்:— வெள்ளைக்கார ஆட்சிதானே இத்தனையும் செய்தது? பறையன் முதல் எல்லோரையும் ஒன்றாய்ப்பாலித்தது; எல்லோருக்கும் உத்தியோகமும் கல்வியுமளித்தது?

கஜபதி:— இதனை மற்றவர்கள் காலத்தின் இயற்கையென்றும் ஆங்கில ஆட்சியால் வந்ததல்லவென்று மல்லவா கூறுகிறார்கள்?

இன்ஸ்பெக்டர்:— எப்படியானாலும் சரி: இந்த ஜாதி பேதத்தை எவனாலும் போக்கிவிட முடியாது. கர்மத்தினாலேயே ஒருவன் உயர்ந்தவனாகவோ தாழ்ந்தவனாகவோ பிறக்கிறான். பகவானே கீதையில் அப்படிக் கூறியிருக்கிறார். (அப்போது மணி எட்டடித்தது) போகட்டும் சாஸ்திரிகளே! இப்போது நீங்கள் திடீரென்று இப்படிப் பேச ஆரம்பித்ததற்கு என்ன காரணம்? என்ன சங்கதி நடந்தது? மிகவும் கோபம் கொண்டீர்களே!

கஜபதி:— என்னசார்; நீங்களெல்லாமிருந்தும் ஊருக்குள் தீண்டாமை யொழித்தல் பிரசாரமும், ஜாதிபேத, மதத்துவும் கிளர்ச்சியும், பாழாய்ப் போன கலப்பு மண சண்டாளத்தனமும் நடைபெறுகிறதே—(இந்த விடத்தில் கஜபதியின் முகத்தில் கோபம் ஜொலித்தது) இன்ஸ்பெக்டர்!— ஆம் நான் கவனித்துக்கொண்டு தானிருக்கிறேன் தாமோதரனின் கிளர்ச்சிதான் அத்தனையும். பலவூர்களிலிருந்து பிரசங்கிகளை வரவழைக்கின்றான். கூட்டங்களை நடத்துகின்றான். துணையாக சட்டமாணவர்களாகிய ஆநந்த கிருஷ்ணன் முதலியோரை வைத்துக் கொள்கிறான். சமீபத்தில் ரகுநந்தனென்ற ஒருவரை ஆல்வாயிலிருந்து வர வழைத்து நகரில் பல பகுதிகளில்

பல பிரசங்கங்கள் நடத்தினன். பல சங்கங்களும் நிறுவப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. தினசரி அக்கிளர்ச்சிக்காரர் களுடையவலி பலத்துக்கொண்டு மிருக்கிறது. இதனை யெல்லாம் நான் பார்த்துக்கொண்டுதா னிருக்கிறேன். ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை; ஏனென்றால் தீண்டாமை யாழித்தல் முதலியன மத சம்பந்தமான விஷயங்கள்; அதில் அரசாங்கம் தலையிடுவதற்கில்லை. ஆகவே நான் தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அதுபோகட்டும்—நான் கேட்ட கேள்விக்குப் பதில் கூறவில்லையே நீங்கள்?

கஜபதி:— ஆம்; உங்களிடத்தில் கூறுவதற்கு கென்ன? அந்தக் கிளர்ச்சி மெதுவாக நம்மைத் தாக்குவ தோடு வீட்டிலும் புகத்தொடங்கி விட்டது.

இன்ஸ்பெக்டர்:— என்ன சாஸ்திரிகளே எனக்கு அர்த்தமாக வில்லையே. நன்ருக விளக்கமாகக் கூறுங்கள்.

கஜபதி:—உடனே கவலையும் வருத்தமும் கொண்ட முகத்தோடு இன்ஸ்பெக்டரின் செவியில் ஏதோதோ கூறினர். கூறவும் இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்தோடு:— என்ன ஆநந்த கிருஷ்ணனு? இவ்வளவுக்கு வந்து விட் டதா? ஆ! ஆ! நன்று, நன்று. (முகம் கோபத்தால் எரிய) நம்மிடத்திலா அவனது கைவரிசை? சபாஷ். சபாஷ். சபாஷ். நீண்டநேரம் யோசித்துக் கொண்டேயிருந்தார். பிறகு)—அவனை உயிருடன் விட்டு விட்டு வெங்கோபா சாரி இருந்து விடவா? மிகத்திறம். ஆ! பூனையாய்க் குறி த்த மாதவனை இரண்டு துண்டாய் வெட்டியவன் வெங் கோபன். அவன் கையிலிருந்து தப்பிக்கொள்ளவா ஆந ந்த கிருஷ்ணன்? நன்று நன்று........................சாஸ்திரி

களே! அஞ்சவேண்டாம், இது பிரமாதமில்லை. இவ்வளவுக்கு வந்த பின்னர் நான் சும்மா விருப்பேனென்று நினைக்கவேண்டாம். போகட்டும். நீங்கள் என்னென்ன கேள்விப்பட்டீர்கள்?

மீண்டும் கஜபதி அவர் காதில் சுமார் 15 நிமிஷநேரம் ஏதேதோ கூறினர்.

இன்ஸ்பெக்டர்:—தமயந்தியைப் பற்றி யொன்றும் பேச வேண்டாம்—(யோசித்து விட்டு) நல்லது. நாளைக் காலையில் அவனைத் தொலைத்து விடுகிறேன். அவனே அவன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டான் இன்று மாலையில் நடந்த சங்கதி தெரியுமா உங்கட்கு?

கஜபதி:— தெரியாதே!

இன்ஸ்பெக்டர்:— நான் இப்போது இங்கு என் வந்தேனென்பதும் தெரியாது போலிருக்கிறது?

கஜபதி:— தெரியாது.

இன்ஸ்பெக்டர்:— மாலை 5-45க்கு எனக்கு தமயந்தியின் கடிதமொன்று கிடைத்தது. அதில் அவள் தன் குறிப்புப் புத்தகம் தவறிப் போனதாகவும் அதனைத் தேடியெடுத்துத் தர வேண்டுமென்றும் கூறியிருந்தாள். நான் பகல் முழுதும் விசாரித்தேன்; துப்புக் கிடைக்கவில்லை. அதனை விசாரித்துப் போகலா மென்றுதான் இப்போது இங்கு வந்தேன். நல்ல வேளையாக நீங்கள் ……………வெகு அழகு; இப்படிப்பட்ட ஒரு கேஸ் கிடைப்பதே அரிது.

கஜபதி:— அதென்ன;; அப்படி சொல்லுகிறீர்கள்?

இன்ஸ்பெக்டர்:—நாளைப் பாருங்கள்; தமயந்தியின் கடிதத்தை அடிஸ்தானமாகக்கொண்டு அந்த கிருஷ்ணன் குறிப்பை திருடியதாகக் குற்றம் சாட்டி அவனைத் திருட்டுக்குற்றத்தில் பிடித்து விடுகிறேன். நீங்கள் தமயந்தியை சரிப்படுத்த முயலுங்கள்.

கஜபதி:—(வாய்பிளந்து) ஆ! எவ்வளவு அபார மூளை! எனக்கு இது தெரியவில்லையே. அவனைப் பிடித்து விட்டால் நம் பகையும்தீரும், அவனுக்குப்பாடம் கற்பித்தும் விடலாம். அதோடு வெளியார் திட்டவும் செய்யார்கள். நல்ல மூளை?

இன்ஸ்பெக்டர்:— வெங்கோபரை என்ன நினைத்தீர்கள்!...........சாஸ்திரிகளே! பயப்பட வேண்டாம். எல்லாம் ஒழுங்காய் நடக்கும்—நாளை மாலைக்குள் பார்த்துகொள்ளுங்கள்.

என்று கூறிக் கொண்டு வெங்கோபாசாரியார் வெற்றிக் குறி முகத்தில் விளங்க கைவீசி நிமிர்ந்து நடந்து போனுர் வெளியே.

அத்தியாயம் 6.

பெண்ணே இனி நான் பிழைத்திடேன்.

ஒரு ஆங்கில ஆசிரியர். "சுற்றுச் சார்பே ஒரு மனிதனைப் பெரியவனுக்குகின்றது" என்ருர். இதன் கருத்து தகுந்த காலத்தில், தகுந்த சந்தர்ப்பத்தில், தகுந்த முறையில் ஒருவன் முயற்சி செய்யாமற் போனுல் அம் முயற்சி திருவினையாவதில்லை என்பதாம். இந்தத் தத்துவ

த்தை நாம் ஆநந்தகிருஷ்ணனின் சரித்திரத்தில் நன்ருகக் காண்கின்ரும். அவன் உறையூரிலிருந்து கஜபதியும் தமயந்தியும் மறைந்து போனதன் பின் தன் வாழ்வின் லக்ஷியமும் மறைந்து போய் விட்டதாக நினைக்கின்ருன். ஆதலால் அவன் ஊனழிந்து, உணர்ச்சிகெட்டு, ஊக்கம் குன்றி, உற்காசமற்று சந்நியாசிபோல் காலந் தள்ளி வருகின்ருன். அவன் சட்டக் கல்லூரிப் படிப்பு முழுதும் இப்படியே கழிகின்றது. அந்தத் தருணத்தில் தான் அவன் ஓர்நாள் தன்மனதில் குடிகொண்ட மங்கையர் மாணிக்கத்தை திருவனந்தபுரம் கடற்கரையில் காண்கின்ருன். கண்டதும் "என்னரிய இருங்கோதை ஏனே இங்கு எகின்ருன்" என்று எண்ணுகின்ருன். அதோடு பற்பலவித சந்தேகம், ஆச்சரியம், வினு வாகியவை ஒருங்கு சேர்ந்து மேகம் போல் அவன் மூளையை மூடு கின்றன. உடன் அவன் அம்மங்கையையே கூர்ந்து நோக்குகின்ருன். நோக்க நோக்க அம்மங்கையின் பேர முகு காந்திக்கிரணங்களை வாரி வீசுகின்றது. அக் கிரண ங்கள் கூரம்புபோல் நேத்திரங்கள் வழியாக மூளையை எட்டி மேக படலங்களைத் துரத்துகின்றன. என்வே தான் கண்ட மங்கை தமயந்தியே என்று தேர்கின்ருன். அவளும் அவன் மீது பார்வை அம்பை எய்கின்ருள். ஆதலால் சினிமாக் காட்சியைப்போல அதுகாறும் அவிந்து கிடந்த ஊக்கம், உணர்ச்சி. உற்சாகம், நம்பி க்கை, சந்தோஷம், பூரிப்பு, இளமை, இன்பவேட்கை யெல்லாம் அவனை வந்து சூழ்கின்றன. சூழவும் அவற் றின் துணையால் தமயந்தியின் இருக்கை நாடிச் சென்று நந்தன் கோட்டையடைகின்ருன். அங்கு சில நாட்கள் போய் வரவும் உறையூரில் விட்டு வந்த காதல் தொடர் புத்துருவடைகின்றது. ஆதலால் "இன்னும் சில நாட்

களுக்குள் தமயந்தியை அடையலாம்" என்ற எண்ணம் முதிர்ச்சியுறுகின்றது. அந்த நிலைமையில் ஒரு நாள் காலையில் குறிப்புப் புத்தகத்தைப் பெறும் பாக்கியத்தை அடைகின்றான். ஆ! அப்பாகியம் எவ்வளவு பெரிது! எடுப்பு மிணையுமற்றதும், ஒப்பு முயர்வு மற்றதுமன்றோ? கண் தெரியாது விழித்த பிறவிக்குருடனுக்கு மூன்று கண்கள் திறக்கப்பட்டு விட்டது போலானந்த மடைகின்றான். இந்த ஆநந்தமே மாலையிலேயே அவனைப் பூந்தோட்டத்திற் கிழுத்துச் செல்கின்றது. இனி நாம் கதையைத் தொடர்வோம்.

பூந்தோட்டத்தில் தமயந்தியும் ஆநந்தக் கிருஷ்ணனும் பேசிக்கொண்டிருந்த தென்னவென்பதை நேயர்கள் அறிவார்கள். தமயந்தி ஆதியில் ஆநந்த கிருஷ்ணன் வேண்டுகோளை மறுத்தபோது அவன் அதனை யேற்றுக் கொள்ளவில்லை. ஏதோகாரணத்தால் கூறுகின்றாளென்றே யெண்ணியிருந்தான். ஆனால் நிமிஷமாக ஆக அவள் உச்சரித்த ஒவ்வொரு பதமும் அவன் மனதைக் கலக்கியதோடு, கடைசியாக அவள் குறிப்புப் புத்தகத்தில் யாவும் அறியாமையினாலும் சிறுபிள்ளைத் தனத்தினாலும் எழுதப்பட்டு விட்டதென்றபோது ஆநந்த கிருஷ்ணன் உண்மையிலேயே தான் தள்ளப்பட்டு எள்ளப்பட்டு கொள்ளப் படாதொழிவதாக நினைத்தான். அந் நினைப்பு அவனை என்னென்ன மொழிகளை உச்சரிக்கச் செய்ததென்பதை அவ்வத்தியாயத்தில் கண்டோம். உண்மையிலேயே அவன் உயிர்போகப் போவதாக நினைத்து விட்டான். அவன் விழப்போவதைக் கண்டு தமயந்தி தாங்க முயன்றது அவனுக்குத் தெரியவே தெரியாது. ஆனால் கஜபதியின் எச்சரிக்கையும் ஆர்ப்பாட்டமும் மட்டிலும் எப்படி

யோ அவன் செவில் நுழைந்து விட்டன. நுழைந்ததும் ஒன்றும் புரியாமல் தான் பலவழிகளிலும் ஏமாந்து போனதாக எண்ணி வீடு சேர்ந்தான்.

அன்றிரவு அவன் உணவருந்தவேயில்லை. உடம்பு சோர்வுற்று, தளர்ச்சி யெய்தி, களைத்திருந்தது. இரத்தம் முழுதும் கொதித்துக் கொண்டிருந்தது. மூளையில் பல்லாயிரம் விஷயங்கள் கிளர்ந்து யோசிக்க முடியாமலாயிற்று. அதோடு தலைக்குள் ஒரு மஹா மேரு உட்கார்ந்ததாகவு மெண்ணினன். ஆதலால், ஒவ்வொரு கணமும் தனக்குப் பைத்தியம் பிடித்து விடுமோ வென்று சந்தேகித்துத் தன் சோர்ந்த மனதைத் தேற்றிக்கொள்ள சில வழிகளில் முயன்றுபார்த்தான். ஒன்றும் பயனெய்த வில்லை. பின் தாயைத் தந்தையை சுற்றத்தை நினைத்தான். உடன் உறையூரில் தான் தென்னூர்க்கோகிலமாய் விளங்கிய பாகம் கண்ணுக்குப் புலப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல கதைகளும் வரலாயின. உடனே "இதென்ன சனியன்; ஓயாத் தொல்லையாயிருக்கின்றதே" என்று புலம்பிக் கொண்டு படுக்கையறைக்குச் சென்று தூங்க முயன்றான். உம்-தூக்கம் அவனோடு ஒத்துழையாமையைக் கையாடியது. அவ்வொத்துழையாமை மனதுக்குள் பெரும்பாரமாகக் கிடந்து கொண்டிருந்த கவலைக்கு வலிமையூட்டியது. எனவே வேறுவழி யில்லாது போன ஆநந்தகிருஷ்ணன் தமயந்தியின் எழில்தரும் மேனியை தியானித்துத் தியானித்து, அவள் திரு நாமத்தை யுச்சரித்து உச்சரித்து, அவள் காதலைப் பாடிப்பாடிப் பொழுதைப் போக்கினன். இவ்வாறு இரவில் பெரும் பகுதிபோக ஒன்றிரண்டு தடவை—தூக்கமோ என்னமோ—ஆநந்த

கிருஷ்ணன் கண்ணயடைந்தான். அந்த வேளைகளில் ஆ! தமயந்தியின் எழுதரும் வனப்புமிக்க எழில் வழியும் பொன்மேனி மணக்கோலத்தில் தோன்றி, குழைந்து நாணி நின்று —ஆனால் புன்னகை தவழ்ந்த முகத்தோடு —"என்ன ஆநந்த கிருஷ்ணா! நீ எவ்வளவு பதட்டம் கொள்கின்றாய்! நான் ஏதேனும் கூறிவிட்டால் உடன் இறந்துபோவதா?—ஊடல் தானே கூடலின்பம்!........ சீ!........தளராதே" என்று கூறிற்று. ஆநந்த கிருஷ்ணன் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்து "ஆ! பாவாய்! வருவாய்!" என்று வாய் விட்டுக் கூறி நாவாய் குழற நடுக்குற்றுநின்றான். இன்னொருசமயம் ஒருகணப்போது கண்ணை மூட, அதே தமயந்தி கடுகடுத்த முகத்தோடு கையில் கத்தியுமெடுத்து சினந்து வந்து நின்று "பார்ப்பனப் பெண்ணாகிய என்னை நீ யொரு தியன் அணுகலாமா?" என்று கேட்பதாகக் கண்டான். இந்த உருவெளித்தோற்றம்—அல்லது கனவென்றே வைத்துக்கொள்ளுங்கள்—அவனை என்ன பாடு படுத்திற்றென்று எழுத முடியாது. சுருங்கச்சொன்னால் அவன் முக்கால் பித்தனும் முழு சக்தியற்றவனுமாயினான்.

இந்த நிலைமையில் பொழுது புலர்ந்தது. ஆநந்த கிருஷ்ணன் ஒன்றும் புரியாது பிணம்போல் படுக்கையில் கிடந்தான். அப்போது வெளியே ஜனங்கள் நடமாடுவதும் பேசுவதும் அவன் செவிகளைத் தாக்கின. தாக்கவும் "ஆ! இதற்குள் கஜபதிப் பேதை என் செயல்களை ஊர் முழுதும் கூறியிருப்பானே...........ஐயோ! ஜனங்கள் என்ன நினைப்பார்கள்! நான் உயிருடன் வாழவும் வேண்டுமோ!" என்றெண்ணி யுழன்றான்.

ஒரு மனிதனுல் எவ்வளவு நேரந்தான் துன்புற்றுக் கொண்டேயிருக்க முடியும்? சுமார் 6-30 மணியான போது ஆநந்த கிருஷ்ணன் வெளியே செல்ல நாணம் கொண்டு தன் மேஜையண்டை சென்று தமயந்தியின் குறிப்புப் புத்தகத்தை விரித்து அதிலெழுதியிருப்ப வற்றை மீண்டும் பார்க்கத் தொடங்கினன். பார்க்கப் பார்க்க அவன் புத்தி பித்தம் கொண்டதோடு, வாய் "ஆ! இவ்வளவும் எழுதி விட்டு ஏன் தமயந்தி மறுக்கின்ருள்" என்றது.

இங்ஙனம் அவன் வாய் புலம்பி நிற்க, கை ஒவ்வொரு காகிதமாகத் திருப்பித் திருப்பிக் காண்பிக்க, கண்பார்த்துக்கொண்டே சென்றது. முடிவில் குறிப்புப் புத்தகத்தை எடுத்து மார்போடு அணைத்தான்—கண்களில் ஒத்தினன். சிரமேல் வைத்தான்..........அப்பால் முத்தமிட்டான். பன்முறை "என்னை காதிய தூதோலையே! நளன் தமயந்தி பால் அன்னத்தைத் தூதுவிட்டானென்றுசொல்லுவார்கள்—இங்கு தமயந்தி ஆநந்த கிருஷ்ணனிடத்தில் தூது விட்டிருக்கின்ருள்...........நளன் விட்ட தூது மெய்த்தூது; ஆனல் இங்கு தமயந்தி விட்ட தூது பொய்த்தூது;.....ஆம் காலம் கலிகாலமல்லவா? ....எனினும் என்னருமைத் தூதே—என்னழிவு வரும் வரையிலும் நீயே என் பக்கத் துணையாய் இரு. தமயந்தி என் மெய்க் காதல் மலையை எதிர் பறியாதவள்—நீ உடனிருந்து நன்கு அறியக்கடவாய்—நானிறப்பதற்கு அதிக நாளில்லை—அதுவரையிலும் என்னுடனேயே இரு—உன்னை எக்காரணம் பற்றியும் தமயந்தியிடம் கொடுத்து விடமாட்டேன்" என்று கூறினன்.

இங்ஙனம் புலம்பிக் கொண்டிருந்தபோது—அதாவது சுமார் 6-45க்கு வெங்கோபாசாரியாரும் மூன்று போலீஸ் ஜவான்களும் திடீரென்று உள் நுழைந்தார்கள். நுழைந்ததும் ஒரு கான்ஸ்டெபிள் வாயிலண்டையில் நின்று கொள்ளப் பிறர் அவனைப்பிடிக்க ஆயத்தம் செய்வதுபோல் நின்றார்கள். இன்ஸ்பெக்டர் (வெங்கோபாசாரியார்) தடதடவென்று ஆநந்த கிருஷ்ணன் பக்கத்தில் சென்று "ஐயா ஆநந்த கிருஷ்ணன்!" என்று ஓர் நாற்காலியிலுட்கார்ந்தார்.

இப்போலீஸ் ஜதா அறைக்குள் நுழைந்ததும் இயல்பாகவே கலங்கியிருந்த ஆநந்தகிருஷ்ணன் யாதும் புரியாது பரக்கப் பரக்க விழித்தான். அவன் புத்திசாலவும் குழம்பியது. அவனுக்குத் தன் முன்னால் என்ன நடக்கின்றதென்பது கூடவும் புரியவில்லை. அவன் கண் முன்னால் அசைவுபடக்காட்சி நடப்பதுபோலவும் அதில் போலீசாரும் பிறரும் வந்துவந்து போவது போலவும் தம் சாமான்களெல்லாம் எங்கேயோ ஓடிக்கொண்டிருப்பது போலவும் தோற்றிற்று.

ஆநந்தகிருஷ்ணன் நிலைமையிதுவாயிருக்க போலீஸ் அதிகாரி என்ன செய்தாரென்று பார்ப்போம். அவர் ஆலசியமின்றி அவ் அறைக்குள் அங்கு மிங்கு மலைந்து திரிந்து அங்கிருக்கும் பொருட்களையெல்லாம் பரிசோதித்தார். மேசை மீது கிடந்த குறிப்புப் புத்தகம் தமயந்தி எழுதிய சில வியாசங்கள் ஆகியவை கிடைத்தன. அப்பால் அங்கிருந்த, தாகூர் கவியரசனால் எழுதப்பட்ட சித்ரா வென்னும் நாடகத்தைத் திறந்து அதற்குள்ளிருந்து தமயந்தியின் புகைப்படமொன்றை எடுத்தார். அப்

படத்தைக்கானவும் அவருக்கு எல்லையில்லாத கோபம் கொதித்தெழுந்தது. "ஒரு நீயன் ஒரு ஐயங்கார் பெண்ணைக்காதலிக்கவா" என்ற ஆவேசச்சொல் அவர் மனதில் எழ, அவர் கோபம் கண்வழியாக நெருப்பைக் கக்கத் தொடங்கியது. பன்முறை "காலம் மாறிவிட்டது—அந்தந்த ஜாதியார் தாம்தாம் இருக்குமிடங்களில் இருப்பதில்லை. பார்ப்பனர் என்ற சொல்லே பாதவிக்கத் தொடங்குகிறது. அதற்காக இயக்கங்கள், கிளர்ச்சிகள், போராட்டங்கள்—எல்லாம் முற்றிப் போய்விட்டன—பார்ப்போம்" என்று முணுமுணுத்தார். பின் ஒரு காகிதத்தில் ஏதேதோ எழுதி விட்டு ஆநந்த கிருஷ்ணனிடம் கையெழுததிடுமாறு நீட்டினர். அவன் ஒன்றும் தெரியாது விழித்தான். இன்ஸ்பெக்டர் தம்சொந்த பாஷையில் "போடு; என்ன விழிக்கிறாய்? "என்றார். அவர் அடிக்கப் போனாலும் கடிக்கப்போனாலும் அவனுக்கு விளங்குமா? அவன் ஒன்றும் புரியாது "தமயந்தி என் எதிரி" என்றெழுதினான். இன்ஸ்பெக்டருக்கு அதனைக் கான என்ன வாயிருந்ததென்பதை அவர் மீசை விளக்கிற்று. உடனே சற்று நிதானித்து விட்டு "அடே! உன் பெயர் ஆநந்த கிருஷ்ணனென்றெழுது" என்றார். அவன் கை அவ்வண்ணம் எழுதியது. பின்பு இன்ஸ்பெக்டர் "நான்கு மணிக்கு ஸ்டேஷனுக்கு வரவேண்டும்; ஜாக்கிரதை; பாசாங்கு காட்டாதே" என்று கூறி விட்டு வெற்றிக் குறிமுகக் குறியாக வெளியே போனார். அவரது மனம் "வெங்கோபமே உமது நிறமேநிறம். நீர் தமயந்தி கையிலிருந்து ஒரு மனுவை மட்டிலும் வாங்கி விட்டீரானால்—இல்லை கஜபதியிடத்திலிருந்தாவது ஒரு மனுவைப் பெற்றுக்கொள்ளும்—இந்த வழக்கைப் போல் இரசமான

ருண்டா? ஆநந்த கிருஷ்ணனைத் திருடனென்று எவ்வளவு அழகாக நிரூபித்து விடலாம்; தண்டித்து விடலாம்! அவன் இனிமேல் தலையெடுப்பானு! நன்று, நன்று, உமது அருந்திறம். அவன் தன் வெற்றியென்று தோட்டத்தில் பேசிக்கொண்ட குறிப்புப் புத்தகம் அவன் கழுத்தை யறுக்கும் கோடரியாயிற்றே சபாஷ்! இனி உம்மைக்கண்டால் எந்த சீர்திருத்த வாதி சுயராஜ்யக்காரன் தான் அஞ்சாமாட்டான்?" என்றது.

அத்தியாயம் 7.

ஆநந்தகிருஷ்ணன் பிண ஊர்வலம்.

ஒரு மாணவனின் ஜாகையில் போலீசார் புகுந்து பரிசோதிப்பதென்பது சாதாரணமான சம்பவமல்ல. மேலும் சட்டக்கல்லூரியில் பயின்று கவுரவமான ஜீவிதம் நடாத்தி வரும் ஆநந்தகிருஷ்ணன் போன்ற ஒரு கெட்டிக்கார மாணவன் ஜாகையில் வெங்கோபாசாரியாரும் நான்கு கான்ஸ்டெபில்களும் புகுந்து புறம்போவதென்றால் நிச்சயமாகவும் பிரமாதமே. இக்காரணம்பற்றி கொஞ்ச நேரத்துக்குள் நந்தன்கோடு பூராவும்—என் திருவனந்தபுரம் முழுவதுமே—பரிசோதனை விஷயம் பரந்துவிட்டது. பல மாணவர்கள் பரபரப்புக்கொண்டனர். பலவிடங்களில் கூட்டங்கூட்டமாகக் கூடிக்கூடிப் பேசவும் செய்தனர். சிலருக்கு இன்ஸ்பெக்டர் மீது ஆத்திரம் பொங்கியது. இத்தகையநிலை யொருபாலிருக்க, எல்லோரும் ஆநந்தகிருஷ்ணன் தமயந்தி ஆகிய இருவர்க்குமுள்ள காதலை அறிந்தனர். ஊருக்குள் அவர்கள் தமயந்தி

ஆநந்தகிருஷ்ணனை மனமாரக் காதலித்தாளென்றும் அக்காதல் குறிப்புப் புத்தகத்தால் விளங்குகின்றதென்றும், தற்போது குறிப்புப் புத்தகம் ஆநந்தகிருஷ்ணனிடம் கிடைத்துவிட்டதென்றும், கஜபதியும் இன்ஸ்பெக்டரும் அக்காதலுக்கு ஊறு செய்கின்றார்களென்றும், அவர்களுடைய சூழ்ச்சியால் ஆநந்தகிருஷ்ணன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறதென்றும் பேசிக்கொண்டார்கள். இப்பேச்சு செவிக்குச்செவி பிரயாணம் செய்யவே நகரவாசிகளிடத்தில் அது மிகுந்த கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று.

இந்த வேளையில் நடந்தது வேறொரு சம்பவம். அதென்ன? இருந்தாற்போல ஆநந்தகிருஷ்ணன் காணப்படவில்லை ஒருவருக்காவது அவன் எங்கு சென்றான்? யாரோடு சென்றான்? எவ்வழி சென்றானென்பது தெரியவில்லை. போலீசார் உட்படப் பலர் அவனைத் தேட ஆரம்பித்தார்கள்.

தேடத்தொடங்கி மூன்று நாட்களாயின. பட்டணவாசிகள் ஆநந்தகிருஷ்ணனின் கதையை எங்கும் சொல்லலானார்கள். யாரோ இக்கதையை நொண்டிச்சிந்தாக எழுதிவிட, வண்டிக்காரர்களெல்லோரும் பாடத் தொடங்கினார்கள். ஆசிரியர்களும் பிறரும் ஆநந்தகிருஷ்ணனுக்காக மிகுந்த வருத்தம் கொண்டார்கள். அப்படியிருக்க மூன்றாம்நாள் மாலையில் திருவனந்தபுரம் "கடற்கரையில் ஓர் பிணம் கிடப்பதாகச் செய்தி பரந்தது. பலர் ஆச்சரியத்தோடு ஓடிப்போய் பார்த்தனர். பிணத்தின் அடையாளங்கள் நன்கு தெரியவில்லை. மீன் கடித்ததினாலோ அன்றி வேறு எக்காரணம்பற்றியோ அப்பிணத்

தின் சில அங்கங்கள் பழுதுபட்டுத் தோன்றின. வைத்திய நிபுணர்கள் பிணத்தைப் பரிசோதித்துவிட்டு இறந்தவன் ஓர் இளைஞனென்றும், நல்ல அழகான மேனியுடையவனென்றும், வயது 25க்குள்ளாகவே மதிக்கக் கூடுமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள் எனவே இறந்தவன் யார் என்பதற்குச் சந்தேகமும் வேண்டுமா?

லா காலேஜ் மாணவர்கள் ஆசிரியர்களோடு கடற்கரைக்குச் சென்றார்கள். அங்கு போஸ்ட்மார்ட்டத்திற்குப் பிறகு பிணம் கிடத்தப்பட்டிருந்தது. அதனைப் பார்த்தார்கள் மாணவர்களும் ஆசிரியர்களும். அவர்கள் உள்ளம் ஆ! எவ்வளவு எரிந்தது. அன்பான உணர்ச்சியோடு அவர்கள் ஒரு பல்லக்குப்போன்ற வாகனத்தைத் தயாரித்து, அப்பிணத்தை அதில் ஏற்றி அலங்கரித்து, ஊர்வலமாகக் கொணர்ந்தனர். ஊர்வலம் முக்கியமான எல்லா தெருக்கள் வழியாகவும் சுற்றிப் பெரிய மனிதர்களை அடக்கம் செய்வதற்கான இடுகாட்டை நாடிற்று வழி நெடுகலும் ஏராளமான அனுதாபிகள் வந்து ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். சில பாடசாலை மாணவர்களும் அதில் சேர்ந்து கூட்டத்தைப் பெருக்கினர். ஆதலால் ஊர்வலம் சுமார் 5000 பேரைக்கொண்டிருந்தது திருவனந்தபுரம் பட்டணம் அதுவரையிலும் அத்தகைய ஒரு ஊர்வலத்தைக் கண்டதேயில்லை யென்னலாம்.

இந்த மௌன ஊர்வலம் ஸ்மசானத்தை அடைந்ததும் சட்டக்கல்லூரி ஆசிரியர் ஒருவர் மிக மிக உருக்கமாக ஆநந்தகிருஷ்ணனைப்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதுகேட்ட எல்லோரும் கண்ணீர் சொட்

டவிட்டார்கள். ஆசிரியர் பிரசங்கத்தில் இறந்தவனுடைய நற்குணங்களை பலவாறு புகழ்ந்துவிட்டு, அவன் எந்த உத்தமமான காதலுக்காக உயிர்விட்டானோ அக்காதலின் திறத்தை விளக்கி, காதல் விஷயத்தில் ஒவ்வொருவரும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதனை விவரித்தார். அன்றி கஜபதி பருவம்வந்து உண்மையாக ஒரு உத்தமனைக் காதலித்துவரும் ஒரு அழகு நங்கையை அடக்கி யொடுக்கித் தொல்லைப்படுத்துவதையும் வன்மையாகக் கண்டித்தார்.

இப்பிரசங்கத்தைக் கேட்ட பலர் "ஆம் நமது நாடு ஜாதிமதம் என்கின்ற இரு சொற்களால் மக்களைக் கொலை செய்வது உண்மைதான் ஒரு பெண்ணுக்காக உத்தம குணமுள்ள ஒரு மாணவர் உயிரைத் திறப்பதானால் அவருடைய காதல் எத்தன்மைத்தாயிருக்க வேண்டும்? தெய்விகக் காதல் என்றோ, புண்ணியக்காதல் அல்லது புனிதக்காதல் என்றோ எது கூறினும் தகுமன்றோ! இத்தகைய ஒரு காதலனை, அவனை விரும்புகிற ஒரு மங்கையோடு ஒன்றிவாழவிடாத சமுதாயம் உலகிலேன் உயிருடனிருக்க வேண்டும்?" என்று திட்டினர் இரவு 10 மணிக்கு ஈமச்சடங்கு முடிந்தது.

மறுநாள் காலையில் ரகுநந்தனருக்கு அனுதாபத் தந்திகள் பறந்தன. கஜபதி சந்தோஷப் பெருக்கில் ஆழ்ந்தான். சங்கராசாரியார்கள், எம். கே. ஆசாரியார், ராமசந்திர ஐயராகியோர் தாழ்த்தப்பட்டாரை இன்னு மாழத்தில் தாழ்த்திவிட வேண்டுமென்று நினைக்கவில்லையா? இத்தகைய பூச்சுவாலாக்களின் கோத்திரமல்லவா கஜபதி? ஆகவே அவருக்கு நகைப்பும் ஆறு

தனும் வாமலென்ன செய்யும்? சாஸ்திரியும் ஆசாரியாரும் எழுதிய பெட்டிஷனையும், தயார் செய்த சாட்சிகளையும் நிறுத்தி விட்டு மனமார இன்புற்றிருந்தனர்.

உலகில் கஜபதியைப் போன்ற பேதைகள் பலர். அவர்கள் யாரோ சிலரை எதிர்க்கப்போவது போல தங்களையே அவமானத்தி லாழ்த்திக் கொள்வ துண்டு. ஆநந்த கிருஷ்ணனுக்கும் தமயந்திக்கும் ஏற்பட்டிருந்த காதல் சுமார் மூன்று வருடப் பழக்க முடையது! எனினும் வெளியார் எவரேனும் அறிந்தாரல்லர்; அதனை கஜபதி ஒரு நாளையில் ஊர் முழுதும்—ஒரு தலை நகர் முழுதும்—அறிந்து கதையாகவும் பாட்டாகவும் பாடும் படியாகச் செய்து விட்டார். அதற்கு ஒரு இன்ஸ்பெக்டரும் துணை. இந்த முழுமோசச் செயலால் அவமானம் யாருக்கு? இனி இந்தக் கதையை எப்படியாவது மறைத்து விட முடியுமா?

அத்தியாயம். 8.

கடல் பாய்ந்த மின்.

திருவனந்தபுரம் கடற்கரை. இரவு சுமார் 11 மணி இருக்கும். குளிர்மதி ஆகாயத்தில் தாநிலவெறித்துக் கொண்டிருந்தான். பட்டணமும் சுற்றுப்புறங்களும் பாற்கடலில் மூழ்கினாற்போல வெண்மைபெற்றிருந்தன. எல்லா ஜீவராசிகளும்—அயர்ந்து தூங்கிவிட்டன. அதனைக் கண்டால் சந்திரனின் மாயப்புன்சிரிப்பில் உலகம் முழுதும் மயங்கிவிட்டதோவென்று தோன்றும். ஒன்றிரண்டு பர்லாங்குகளுக் கப்பால், எட்டாத தூரத்திலிருக்கும்

பூரணைசந்திரனின் மெய்க்காந்தியைக்கண்டு பொறாமை யுற்று வயிறெரியும் நாய்களின் ஊளையை நீக்கிப்பார்த் தால் அன்று வேறு எவ்வித அரவமும் கேட்கப்பட வில்லையென்று கூறலாம். எக்காரணம் பற்றியோ பேரிரைச்சல் தரும் விரிகடலும் அன்று அதிக மாக முழங்கவில்லை. எனினும் நின்மலமான வெண்ணிற அலைகள் அங்கு மிங்கு மறிந்து உயர்ந்து ஆடிக்கொண் டிருந்தன. அத்தகைய அலையின் கொண்டாட்டம் அன்றிரவு கூடிக் குலாவி நயந்து இன்பம் நுகர்ந்தானந் திக்கும் இளங்காதலரின் உள்ளெழுச்சியை நினைப்பூட்டி க்கொண்டிருந்தது. உண்மையில் நின்மலமான ஆகாயத் தில், பரிசுத்தமான பூரணைசந்திரன், களங்க மற்ற காந் தியை நிழற்றிக்கொண்டிருப்பதையே காதலர் யாண்டும் அவாவி நிற்கின்றனர். ஆனால் ஒற்றையாட்களாய்வாழும் எண்ணிறந்த நம் நாட்டு விதவையர் கதியென்னாகும்! அந்தோ அவர்கட்கு முழுமதி ஓர் முழு இயமனாகத் தோற்றுவானன்றோ!

மேற் குறித்த வாறு இயற்கை யழகு திருவனந்த புரத்தின் கண்ணே பொலிந்து நிற்க, ஓரிளம் பெண் மணி அனலிடை விழுந்த மெழுகென வாடி, மனம் வெந்து—ஆனால் துணிச்சல் மேற் கொண்டு—கடற் கரையிலுள்ள ஒரு பாறை மீது நின்று கொண்டிருந் தாள். அராபியன் கடல், அவள் அவ்வாறு நள்ளிரவில் தனியாய் நிற்பதை விரும்பவில்லை போலும்; தன் கைகளாகிய திரைமாலைகளை அப்பாறைகளில் அறைந்து "ஏ! நங்காய் செல்லுதி, செல்லுதி" என்று முழங்கிற்று. அதனை அவள் எட்டுணையேனும் பொருட்படுத்தவில்லை

கண்கள் கடலேயே நாடியிருந்தன. பேடிகளும் பேரா சைப்பட்டணைய நினைக்கும் அவளது பொன்மேனியைத் தழுவி நிற்கும் வெண்பட்டாடை கண்ணீரால் நனைந்திருந்தது. கண் மடைகள் திறந்து விட்டன போலும்; தண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. நெஞ்சு அக் கண்ணீருக் கொத்தவண்ணம் விம்மி விம்மி எழ, வாய் திக்கித் திக்கி "வேண்டாமிந்த உயிர், வாழேன் ஒரு கணமும்........ வயது இருபத்திரண்டாகியும், சொல்லொணுத எழிலைச் சுமந்திருந்தும் நான் வாழ்க்கையின்பத்தை ஒரு நிமிஷமாவது.........நுகரவில்லை யென்றால்..........கடலே உன்னை தஞ்சமடைவதில் என்ன குறையிருக்கின்றது" என்ற மொழிகளை அரை குறையாக சொல்லிக்கொண்டிருந்தது.

அந்தோ! இவ்வளவு கவலைகொண்டு ஏங்கி நிற்கும் அவ்விளம்பெண் யார்? ஏனங்கு நிற்கின்றாள்? அங்கு என்ன செய்யப் போகின்றாள்?—ஆம்—அங்கு நிற்பவளே நம் தமயந்தி—ஆநந்த கிருஷ்ணனை அழித்தொழித்த ஆரணங்கு—அவனது உளத்திலெழுந்து நின்ற பொற்பதுமை—தமயந்தி அங்கு ஏன் நின்று கொண்டிருந்தாள்?

வெங்கோபாசாரியார் இரவில் தோன்றி கஜபதியிடம் பேசிப்போன அன்று ஒரு கணமாவது தமயந்தியின் மனம் சமாதானமாயிருக்க வில்லை. சாஸ்திரியும் ஆசாரியாரும் பேசிக்கொண்டிருந்த விஷயம் அவளுக்குத் தெரியவே தெரியாது. இருவரும் இரகசியம் பேசி ஆநந்த கிருஷ்ணனைத் தொலைத்து விட நினைத்தார்களெ ன்பதும் கூட அவள் அறிந்தபாடில்லை. அவள் மனதில்

ஆயுள் முழுதும் ஆநந்த கிருஷ்ணனை அடையுங்கால மெது என்றெண்ணி யெண்ணி வாடியிருந்து விட்டு, இறுதியில் அவன் தானாகவே வந்த ஒரு காலத்தில் அவனை நிராகரித்து ஒழித்து விட்டோமே என்ற ஏக்கமே குடியிருக்கலாயிற்று. ஆதலால் அவள் பன்முறை தன் பேதமையையும், தன் மனப்பக்குவ மின்மையையும், தன் பாழாய்ப் போன நாணத்தையும் கடிந்தாள். அன்றி தன் நம்பிக்கை முழுதும் அழிந்து பாழாய்ப் போய் விட்டதையும் உன்னி சோர்ந்தாள்; அத்தகைய எண்ணங்கள் ஒரு பாலிருக்க, இன்னொரு பால் கஜபதி "என்னிரகசியத்தைக் கண்டு விட்டாரே! காட்டுமாடு மாதிரி அவர் பிறர் செவிக்கேட்குமென்பதனையும் பொருட்படுத்தாது கத்திக் கொண்டிருக்கத் தொடங்கி விட்டாரே! ஊரார் என்னென்ன பழி சொல்வார்கள்? சங்க அங்கத்திவர் என்னென்ன நினைப்பார்கள்" வென்கின்ற பல வெண்ணங்கள் இன்னொருபால் தொக்கிக் கொலை செய்ய வாரம்பித்தன. இவ்விரு பக்கத்துத் தொல்லைகளையும் ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாமென்றாலும் ஆநந்த கிருஷ்ணன் "என்னை நீ இன்பமாயிருக்கும் வேளைகளில் நினைத்துக்கொண்டால் போதும்; நான் உயிர் துறக்கின்றேன்" என்று மொழிந்தானே; அக்கடுமொழிகள் என்னுமோ என்ற ஐயத்தை சமாளித்துக் கொள்ள முடியவில்லை.

இங்ஙனம் ஒன்றிரண்டு நாட்களானதும் கஜபதி கோபாக்கிராந்தனாகத் தோன்றி "தமயந்தி— இல்லை—நீ அன்று முதல் தமயந்தியல்ல—என் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம் பாவாய். உன்னை

உன் மனப்படியே விட்டு வைத்ததினாலன்றோ எல்லை கடந்து போகத் தொடங்கி விட்டாய்? இனி உன் மனம் போல் நடக்க விடேன். விதவைகட்குள்ள எல்லா மரியாதைகளும் உனக்கு செய்யப் போகிறேன். உன் பட்டாடை, புஸ்தகம் நகைகள், பத்திரிகைகள், கூந்தல் எல்லாம் குப்பைத் தொட்டிக்குள் புகுந்து விடப்போகின்றன. உன் தலைவிதி அவ்வளவுதான். உஷார். நாளைப் பகலில் உன் கூந்தல் இராது. அதற்கு இப்பொழுதே மனதைத் தயார் செய்து கொள்" என்று கூறி மறைந்தார்.

இந்த அம்பு வார்த்தைகளைக் கேட்டால் எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தாற் போன்றிராதோ. தமயந்தி கண்ணீர் மடையை இன்னும் கொஞ்சம் திறந்து விட்டாள். நெடு நேரத்திற்குப் பின் "என் தலைமயிர் என்ன குற்றம் புரிந்தது" என்று தேம்பினாள்..

இந்த சம்பவம் நிகழ்ந்து அரைமணி நேரமானதும் பக்கத்து வீட்டு பார்வதி யென்ற பன்னிரண்டு வயதான பார்ப்பனப்பெண் ஓடி வந்து "அக்கா அக்கா பார்த்தாயா வெளியே என்ன ஆர்ப்பாட்டம்! என்ன கிளர்ச்சி! என்ன பரபரப்பு" என்று கூறினாள்!

தமயந்தி அழுகையால் சிவந்த முகத்தோடு:-- என்னடி என்ன நடக்கின்றது?

பார்வதி:—யாரோ ஒருவன்—சட்டக் கல்லூரியில் படிக்கின்றானும்—மிகவும் நல்லவனும்—கடலில் வீழ்ந்து இறந்து போனானும். அவனுடைய உடம்பை நகர் முழு

தும் ஊர்வலமாகக் கொண்டு வந்து பாளயத்தில் புதைத்தார்கள் அவன் தந்தைக்குத் தந்தி மேல் தந்தியாகப் பறந்து கொண்டிருக்கிறது. கல்லூரிமாணவர்கள் ஆசிரியர்களெல்லோரும் வருத்தப்படுகிறுர்கள்.

தமயந்தி (வெகு நேரம் யோசித்துவிட்டு):–பார்வதி! அவர் பெயரென்ன? அவரிறந்ததில் என்ன அதிசயம்? எத்தனையோ பேர் தினசரி இறக்கின்றுர்களே.

பார்வதி:—(அடக்கொண்ணுத சிரிப்போடு) என்னமோ அக்கா, நீ கோபித்துக் கொள்ளக் கூடாது. வெளியே என்ன சொல்லப்படுகிறதோ அதைக் கூறுகிறேன். பிறருடைய சொல்லுக்கு நான் பாத்தியப்பட்டவளல்ல.

தமயந்தி:— (அதிகம் கவலை யோடும் கலக்கத்தோடும்) நல்லது பார்வதி—சொல் பார்ப்போம்; நீ சொல்வதெல்லாம் விளங்க வில்லையே.

பார்வதி:—(சிரிப்பை அடக்கிக்கொண்டும் விழுங்கிக்கொண்டும்) அந்த ஆநந்த கிருஷ்ணன் அக்கா உன்னேடு சிநேகமாயிருந்தானும். நீயும் அவனேடு சிநேகமாயிருந்தாயாம். தாத்தா அதைத் தடை செய்து போலீசாரிடம் சொல்லி தொந்தரவு செய்தாராம். ஆதலால் அவன் தன்னை வெறுத்து கடலில் குதித்து விட்டானும். இதை ஊர் முழுதும் சொல்லிக் கொள்கிறுர்கள். வெளியே ரோட்டில் போவோரெல்லாம் அதுதான் தமயந்தியின் வீடு என்று கூறிச் செல்கிறுர்கள்.

இதனை செவி மடுத்தால் தமயந்திக்கு எப்படியிருக்குமென்று சொல்வது தேவையில்லை என்று நினைக்கிறேன். அவள் பைத்தியம் பிடித்தவளானாள்; அவள் மனம் பலவுலகங்களை சுற்றியது. "இரகசியமாயிருக்க வேண்டிய ஒரு விஷயம் உலக மறியும்படி. கஜபதியொருவனாலே வந்து விட்டது. அதோடு ஒப்பற்ற காதலன் ஒருவன் கடலுக்கிரையானான். இப்படியாயின் நானிருக்க வேண்டிய அவசிய மென்ன?" என்றெண்ணித் தயங்கியது. இந்தத் தயக்கமே நாம் இவ்வத்தியாயத் தொடக்கத்தில் கண்டதுபோல தமயந்தியைக் கடற் கரைக்குக் கொணர்ந்தது.

பாறை மீது துணிச்சலோடு நின்று கொண்டிருந்த தமயந்தியின் வாயினின்றும் அடியில் வரும் வாக்கியங்கள் வெளி வந்தன "ஆ! சாகரமே! வார்கடலே! பண்டைக் காலத்தில் நீ சகரரின் சரீரத்தைச் சுத்தம செய்தாயென்று இந்துக்கள் கதை சொல்கின்றார்களே. இதுகாலை நீ இந்தியரின் மடமையை யாவது கழுவி சுத்தம் செய்யலாகாதோ? நீ உன் தர்மத்தை மறந்து விட்டாய் போலிருக்கிறது. ஏ! வாரிதி! நேர்மையைக் கை விட்டு நிற்பது உனக்கு அழகாமா..........ஒருகால் இந்தியரின் பேதமையை ஒழிக்க மனமில்லை யென்றால், எலபேரியாவைப் போல் விழுங்கி விடலாகாதா? நாடு முழுதும் கடலுக்குள் ஆழ்ந்தாலல்லது தம் வைதிகத்தையும் பழமைபுணர்ச்சியையும் கைவிட மாட்டோமென்கின்ற வைதிகர்கள் பலரிருக்கின்றனர்! அவர்கள் ஒரு கமால்பாஷாவை எதிர்த்து நிற்பதைப் பார்க்கினும் இன்ப வெள்ளமே! நீ எழுந்து விடுவதே மேலன்றோ?

"ஐயோ! இந்தப்பொல்லாத இந்தியாவில் எவ்வளவு வைதீகம், அவ்வளவு அசையாத்தன்மை, எவ்வளவு மாமூல்! இதுபோல் வைதீகர்கள் தருப்பை பிடித்துத் தாண்டாவ மாடும் நாடும் எங்கேனுமுண்டோ? எத்தனை ஆகம சபைகள்! எத்தனை சனாதன தர்ம மகாசபைகள்! சனாதன சுயராஜ்ய ஸ்தாபனங்கள்! அவைகள் பண்டைய பழக்கவழக்கங்களை விடாவாம்; எனினும் தேசியவிடுதலை களும் வேண்டுமாம். ஒன்றுக்கொன்று எவ்வளவு சம் பந்தம்!—தம் வீட்டிலுள்ள பெண்கட்கு—தம் கழனி களில் உழைத்து மெய்வருந்தித் தமக்கு உணவளிக்கும் ஹரி ஜனங்கட்கு—விடுதலையில்லை; தங்கட்கு பரிபூரண விடுதலையில் இச்சையாம். அதற்காகக் கூட்டங்கள், போராட்டங்கள், சத்தியாக்கிரகங்கள்—எவ்வளவு ஒழு ங்கு, நேர்மை—கணைகடலே! இவ்வளவு ஒழுங்கையும் பார்த்து விட்டும் நீ வாளாவிருப்பாயெனில் உன்னைக் குறை கூறு தொழிவனோ? பருவமங்கையரை நாயினும் கடையாய்ப் பேசினும் கீழாய் மதித்துச் சுதந்திரத்தின் கிரணங்களின் அணுவேனும் அவர் மீது விழாதபடி ஆக மம் முதலிய சாஸ்திரங்களைக் காண்பித்துத் தடைசெய் யும் வைதிகர்கள் விழையும் விடுதலையின் பொருள் தானென்னையோ?

"ஆ பாரதமே! நின் கொடுமை யென்றுதான் ஒழி யும்? நின் கண் என்றுதான் திறக்கும்? நின்மருள் தீரும் காலமும் வருமோ? எத்தனை நாரி மணிகளை வைதவ்ய மென்னும் காய்ந்த எண்ணெயிலிட்டுப் பொரிக்கின்றாய்? ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி காண்பிக்கும் நீ வாழவும் கூடுமோ? ஆண் பெண்ணிருபாலாரும் நீ பெற்ற குழந்தைகள் அன்றோ? அப்படியிருக்க, ஒரு

குழந்தை நல் வாழ்வு வாழவும் இன்னொரு குழந்தை தீமையுறுவது மென்றால், தாயின் கடமையென்ன வென்பதனை நீ யுணராய் போலிருக்கிறது! பெண்ணென்றால் பேயுமிரங்குமென்று நீதானே நீதி போதித்தாய்? பிறகும் பெண்களை வருத்துவதென்றால் நீ பேயினும் கடையா? அன்றி லஜபதியின் கூற்றுப்படி தென்னாட்டுப் பார்ப்பனனா?

"ஆ! அறிவற்ற பாரதமே—பெண்களை எழுதும் போது எவ்வளவு போற்றுகின்றாய்! உன் சாஸ்திரங்களெல்லாம் பெண் மயமாகத்தானே மிளிர்கின்றன? அப்படியிருக்க நீ பெண்ணை அடிமைப்படுத்துவதென்றால் நீ செய்வதின் பொருளையே உணர்ந்து கொள்ளும் ஆற்றல் படையாத பேதையோ! பெண்குலத்தை அடிப்படுத்துவதென்றால் தாய்க் குலம் முழுவதையும் அடிமைப்படுத்துவதென்பதன்றோ பொருள்? தாய் அடிமை செய்யப்பட்டால் வீரக் குழந்தைகளையும், விவேகமுள்ள குழந்தைகளையும், அழகுக் குழந்தைகளையும் அடைவதெப்படி? சீ! சீ! நின் மதிதான், புத்திதான். செயல்தான் என்னே!

"வெளியுலகம் போவதையும் அடையும் முன்னேற்றத்தையும் கண்டிருந்தும் நீ தருப்பைப் புல், வேதம், ஆகமங்களையே தலை வைத்தாடுவாயானால் நீ உருப்படுவதெங்ஙனம்! யார் யாருக்குத்தான் அடிமைப்படமாட்டாய்? சீ! உன்னுறவு ஒழிவதே தகுதி.

"நான் என் அதிகமாகக் கூறுகின்றேன்—என் வாணாள் கழிந்தது. என்னை கஜபதி யென்கின்ற மூடம்

வருத்தியது, வருத்துகின்றது, வருத்தும்—யாவரும் பழித்தனர், பழிக்கின்றனர், பழிப்பர். நான் வாழ்க்கை முழுதும் விதவையாய் வாழ்ந்து என்னையே காத்துக் கொள்வதில் மனோ வாக்குக் காயங்களெல்லாம் செல விட்டு அகதியாக நின்று உழல்வதைப்பார்க்கிலும்— ஆ! என் அருமை அன்பு, அருள் ஆநந்த கிருஷ்ணன் போனபின்பு வாழ்க்கை எதுக்கு? போகட்டும். நானிறக்கு முன்பு ஒன்று கூறுகின்றேன். பெண்களை விதவையாய் வைத்து கொல்லாதொழிக. எந்தப் பெண்ணும் விதவை யாயிருக்க விரும்புவதில்லை. இருப்பதாய்ச் சொல்லின் அது யாவர் உற்றாருக்குப் பயந்து சொல்வதேயாகும்— எனவே இன்று முதல விதவை மணம் புரிக—தீண் டாமை ஜாதி பேதத்தை அழித்தொழிக்க.

"இக்கடைசி வார்த்தைகளுடன் பாரதமே! நான் செல்கின்றேன்! நீ செய்யும் கொடுமைகட்கு நான் கடை சிப் பலியாக இருக்கட்டும்! இதோ என் உளத்தில் பொலிந்த பொற்பினர், புத்தகத்தில் மிளிர்ந்த புனிதர் சென்றவழியே செல்கின்றேன்! அவரைப் பிரிந்த நான் அரைக்கணமும் வாழலாகாது. அவர் புரிந்த தியாகத்தை நானும் புரிகின்றேன். என் அருமைக் கடலே! விளையாடும் அலைத்தொகையே! நீ என் அன்பருக்கு எவ்வாறு இடம் கொடுத்தாயோ அதே போன்று எனக்கும் இடமளித்தி. குளிர் மதியே! பரந்தவானே! குளிர் காற்றே! நீங்களே, என் காதல் வலிக்கு சாட்சிகள். ஜகபதி அறிந்தாரல்லர்— அவரிடம் பெண் பழி பாவமென்பதனைப் புகல்க....."

எனக் கன்னெஞ்சமும் கலங்குமாறு கதறிய அக்காரிகை கடலிடை துள்ளிக் குதிக்க ஆயத்தமானாள்.

—பின்னும் அநந்தகிருஷ்ணனின் அருமைத் திருமேனி மனதில் தோன்றிற்று. ஆதலில் "அநியாயமாய், என் மடமையால் கொல்லப்பட்ட அன்பிர்! குணக் குன்றே! அறியாது யான் செய்த பிழையைப் பொறுத்தருள்க. நான் செய்த தவற்றிற்கு இதோ பிராயச்சித்தம் செய்கின்றேன்—கடலே! என்னையும் அவர் உடம்புபோல் எற்றுக்கொள்க" என்று கூறி கடலுக்குள் பாய்ந்தாள் நம் தமயந்தி.

ஐயோ! என்ன அநீதம்! என்னே கொடுமை! பொற்குடம் போன்ற தமயந்தி அலைகடலில் ஆழ்ந்துவிட்டாள். வாழ்க்கையாகிய பகல் முழுதும், பெண்மையாகிய பரந்தவானின் நடுவில் மங்கா ஒளி பெற்று விளங்கிய சூரியனன்றோ தமயந்தி? மதாசாரியார்கள் என்னும் செம்படவர்கள் வேத புராண இதிகாசங்களென்னும் வலைகளை வீசிப்பிடித்து மரபு, வழக்கு, மாமூல் என்னும் கூடைகளிலடைக்கும் மச்சங்கட்கொப்பாகிய பெண்களைக் கரையேற்றும் புனிதையாக விருந்த தமயந்தியை என்று காணப் போகின்றோம்?

ஆ! அந் நல்லார் நாயகத்தை உள்ளளவும் சித்திரவதை செய்த கஜபதி எனும் மாமிச பிண்டம் இப்பொழுது என் செய்யும்? அவருக்கு மனைவியில்லை; மகனில்லை; மருமகளில்லை; பேரனில்லை; பேத்தியில்லை. எல்லோரும் ஒழிந்து விட்டார்கள். திரண்ட ஆஸ்தியும் வைதிக முட்டையும் எட்டுணையேனும் துணைபுரியுமோ? கஜபதி என்னதான் செய்த போதிலும் தமயந்தி போன்ற ஒரு பெண்ணைப் பெறக் கூடுமோ? பாவி! அவளை மனமொத்த காதலனொருவனோடு ஒன்றி வாழ்ந்து இன்

பம் நுகா விடாது தடைசெய்து விட்டான்! ஜாதியின் தலையெனப்படுகின்ற ஒரு வகுப்பைச் சேர்ந்த கஜபதியின் தலைதானென்னே!

அத்தியாயம் 9.

சூத்திர வீட்டுப் பார்ப்பனி.

"திருவாங்கூருக்கு இரட்டைக் கடற்கரையுண்டு" என்று ஒரு பூமி சாஸ்திர ஆசிரியர் சொன்னார். ஆம். அது முற்றிலும் உண்மையே. அராபியன் கடலும் கரையும் சேர்கின்ற இடத்திலிருந்து நான்கு ஐந்து மைல் தூரத்தில் உள் நாட்டில் கடலுக்கு சமாந்தரமாக ஏராளமான "காயல்க"ளென்னும் ஏரிகளும் அவற்றையொன்றுக்கொன்று சேர்க்கின்ற "தோடு"களென்னும் கால்வாய்களும் காணப்படுகின்றன. இவற்றை ஒரு பறவைக் கப்பலிலிருந்து பார்ப்பதானால் திருவாங்கூரை கடல் ஆக்கிரமித்து விடாமலிருப்பதற்காக கடலுக்குள்ளேயே ஒரு அணை போடப்பட்டிருக்கிறதோ வென்று தோற்றும். இதனைப் பார்த்தேதான் மேற்படி பூமி சாஸ்திர ஆசிரியர் இரட்டைக் கரையென்று சொன்னார். இவ்விரட்டைக் கரைக்குக் காரணமாயிருக்கும் காயல்களும் தோடுகளும் திருவாங்கூருக்குப் பல நன்மைகளை வழங்குவதோடு பார்ப்பதற்கு ஓர் ரமணீயமான காட்சியையும் பிரதானம் செய்கிறது. ஒருவரிருவர் உட்காரக்கூடிய ஒரு சிறிய தோணியிலேறி ஒரு முறை அந்நீர் நிலைகளில் பிரயாணம் செய்து பார்த்தால் தெரியும் நம் கூற்றின் உண்மை. ஆ! என்ன அழகு! இருகரைகளும் கண்ணுக்குப் புலப்படாதவாறு படர்ந்து பரந்து தோன்

றும் தென்னஞ்சோலைகள், மாஞ்சோலைகள், ஒதியன் மாச்சோலைகள்! அவற்றின் கிளைகளும் தழைகளும் இலைகளும் காற்றுக்குத் தகுந்த வண்ணம் ஆடியசைந்து தண்ணீருக்கு முத்தம் கொடுத்துநிற்கும். அதைப்பார்த்தால் காயல்களெல்லாம் வெறும் தழைகளைப் பிளந்து அவற்றின் நடுவே அமைக்கப்பட்டிருக்கின்றதோவென்ற சந்தேகம் பிறக்கும். நல்ல நீல நிறமான பரிசுத்த ஆகாயம் தலைக்கு மேலும், இருபக்கங்களிலும் பச்சைப்பசிய தழைவேலிகளும், கீழே படிகம்போல் பிரகாசிக்கும் தண்ணீரும் திகழ ஒரு தோணியில் பிரயாணம் செய்தால் யார் மனந்தான் மகிழாது? அவ்வாறு செல்கின்றவர் ஆங்காங்கே பாட்டாடையில் புள்ளிகள் போடப்பட்டாற்போல பற்பல தோணிகள் ஒருவரிருவரைச் சுமந்துகொண்டு அங்கு மிங்கும் அந் நீர் நிலைகளில் போவதைக் காண்ப என்றால் அவர் தம்முள்ளக் கிளர்ச்சியை ஓதவும் வேண்டுமோ?

அக்காயலோரங்களில் காணப்படும் சோலைகளுக்குள் புகுந்து பார்த்தால் தென்னங் "கீத்தினால்" வேயப்பட்ட பல சிறு சிறு குடிசைகளைக் காணலாம். அவை தனியாகவோ பல சேர்ந்தோ அமைத்திருக்கும். அக்குடியிருப்புகளைச் சுற்றி மணலே தென்படுவதால் எந்த வீடுகட்கும் சுவரிருப்பதில்லை. அவற்றில் வசிப்பவர்கள் எல்லோரும் தொழிலாளிகளும் ஆகவே ஏழைகளுமாவர். அவர்கள் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டுக்குச் செல்வதற்கு உபயோகிக்கும் வாகனம் பெரும்பாலும் தோணிகளே; ஆதல் பற்றியே காயல் நெடுக ஏராளமான சிறு சிறு தோணிகளைக் காணலாமென்று மேலே கூறினோம்.

இந்தகைய திருவாக்கூர்க் காயலில் ஒருநாள் பகல் பதினொருமணிப் போதில் ஒரு பெரிய தோணி கரைப் புறம் என்ற விடத்திற்கு சமீபம் வந்து கொண்டிருந் தது. அதன் நடுவில் ஒரு அழகிய மங்கை நல்ல ஆடை அணிகளணிந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளு க்கு சற்றுத் தூரத்தில் ஒரு சர்க்கார் வேலைக்காரன்—சிப்பாய் - அடங்கி யொடுங்கி யுட்கார்ந்து கொண்டிருந் தான். அவனைத் தவிர தோணியை உகைக்கும் இருசெம் படவர்கள் தோணியின் இரு கடைசிகளிலு முட்கார்ந்து கொண்டிருந்தனர்.

அத் தோணி விரைவாகக் கரைப்புறத்தை நாடிய தும் கரையோரமாக நிறுத்தப்பட்டது. அதிலிருந்து எல்லோரு மிறங்கி "வாருங்கள் வாருங்கள்" என்று தம் கிளைகளால் வரவேற்புக் கொடுத்துக் கொண்டிருக்கும் மரங்கள் அடர்ந்த சோலை வழியாக உள்ளே போனார்கள். சற்று நேரத்துக்குள் மூன்று குடிசைகள் நெருங்கின. அவற்றினண்டை போனதும் அப் பெண்மணி "வேலா யுதா! எங்கே அப் பார்ப்பனப் பெண்?" என்றாள். உடன், வேலாயுதன் "அதோ காண்கின்ற புதுக் குடிசையிலிரு க்கிறார்கள் அம்மா" என்றான்.

என்றதும் அப்பெண்மணி, ஆசை முகத்தில் துல ங்க, முன்சென்று குறிப்பிட்ட குடிசைக்குள் பார்த்தாள். பார்த்ததும் "தமயந்தி நீயா!" என்று ஆச்சரிய ஆர வாரம் செய்து விடைந்து நின்றாள். உடன் தமயந்தி குதித் தெழுந்து "ஸ்ரீமதி! என்தோழி" என்று கூறி ஆரப் பரித்து ஆலிங்கனம் செய்து கண்கள் நீர் வார்க்க நின் றாள். அப்போது அவள் அழுத அழுகை தானென்னே? தாயைக்கண்ட சேய்போல தான் பிராயமான ஒரு பெண்

என்பதனையும் நினையாது, விம்மி விம்மி அழுதாள். அந்தோ, எவ்வளவு பரிதாபக் காட்சி! பல நாட்களுக்கு முன்னால் சந்தித்த தோழிகள் இருவரும், மனதைக் கலக்குகின்ற எத்தனையோ ஆச்சரிய செய்திகள் நடைபெற்ற பின்னர் செம்படவர் சேரியில் சந்திக்கின்றனர்.

இந்த சந்திப்பு எவ்வாறு நிகழ்ந்தது, கடலில் குதித்த தமயந்தி எப்படி உயிர்த்தெழுந்தாள் என்று வாசகர்கள் வினவலாம். தமயந்தி கடலில் குதிக்க யத்தனிக்கும் முன்பு, அவ்வழியே கட்டுமரத்துச் சென்றுகொண்டிருந்த இரு செம்படவர்கள் தனியாக ஒரு பெண் பாறை மீது நிற்பதைக் கண்டு, வியப்பும் திகைப்பும் கொண்டு, அவள் சமீபத்திற்கு ஓடினார்கள். ஆனால் அந்தோ! அதற்குள் தமயந்தி கடலில் குதித்து விட்டாள். உடன் வந்தவர்கள்—செம்படவர்களல்லவா?—கடலுக்குள் குதித்து சீக்கிரத்தில் அவளை வெளியே கொணர்ந்தனர். அப்போது தமயந்திக்கு உயிர் இருக்கவில்லை; பிணம் போல் கிடந்தாள். எனினும் அச் செம்படவர்கள் அவளை சுமந்து கொண்டு பக்கத்துத் தோட்டில் நின்று கொண்டிருந்த படகில் வைத்து மேலே சென்றார்கள். வழியில் ஒருவன் படகை யுகைக்க, இன்னொருவன் அவளுக்கு சிகிச்சை செய்து கொண்டேயிருந்தான். கொஞ்ச நேரத்துக்குள் உயிர் வரத்தொடங்கியது. அப்பால் கரைப்புறம் சேர்ந்ததும், தமயந்தி பூரண சுவாதீன மடைந்தாள். பின்பு தான் கடலில் குதித்தும் இறவாமலிருப்பதற்காக வருந்தி விட்டு தன்னை ரட்சித்த செம்படவர்களிடம் தன் வரலாறொன்றையும் கூறாமல் தான் அவர்கள் குடிசையில் வாசிப்பதாக எவருக்கும் சொல்லக் கூடாதென்று கேட்டுக் கொண்டாள். இவ்வாறு கேட்டுக்

கொண்டபோது தன் விஷயம் பிறருக்குத் தெரியலாகா தென்ற ஒன்றை மட்டிலும் நினைத்தாளே யல்லாது எதிர் காலத்தில் என்னென்ன செய்ய வேண்டும், வாழ வேண்டுமா ஆழ வேண்டுமா வென்பதை அறவே நினைத்தாளல்லள்.

* * *

தமயந்தி மேற் குறித்தவாறு "சூத்திரர்"களாகிய செம்படவர்களோடு தானுமொரு உறுப்பினளாய் சில மாதங்கள் வாழ்ந்து வரவும், கரைப்புறத்தின் சமீபத்தி லுள்ள ஒரு கிராமத்தில் வந்து குடியேறிய ஸ்ரீமதி (பக்கத்திலெங்கும் பார்ப்பனரில்லாததால்) தனக்குத் துணையாகவோர் பார்ப்பனப் பெண்—வேலைக்காரியாக வெனினும்—வேண்டுமென்று தம் வேலைக்காரர்களிடம் கூறலானாள். அதனைக்கேட்டு வேலைக்காரர்கள் சுற்றுப் பக்கங்களிலெங்கும் தேடிக் கொண்டிருக்க நமது செம் படவர்கள் அச்செய்தியைக் கேள்விப்பட்டார்கள். கேள் விப்பட்டதும், வீண் பொழுது போக்கி "தனக்குத் தகாத வாழ்க்கை" வாழ்ந்து வரும் தமயந்தியை ஒரு பார்ப்பன வீட்டிலேயே சேர்த்து வைத்து விடலாமே என்ற நல் லெண்ணத்தோடு ஸ்ரீமதியிடம் விஷயத்தைத் தெரிவித்தார்கள்.—அவள் செம்படவர் வீட்டில் ஒரு பார்ப்பனப்பெண் தங்கி வரும் விசேஷத்தைக் கேட்க ஆச்சரியப்பட்டு கரைப்புறத்துக்கு வந்தாள். அவ்வாறு வந்த விடத்திலே தான், ஸ்ரீமதி தான் நாடிவந்த பார்ப் பனப்பெண் தமயந்தியாயிருக்கக் கண்டாள். அவள் எற் கெனவே மலையாளப் பத்திரிகைகளில் ஆநந்த கிருஷ் ணனின் அழிவையும், போலீசாரின் பொல்லாதன்மை யையும், கஜபதியின் கடுங்கோபத்தையும், தமயந்தி

காணமற் போனதையும் படித்ததுண்டு. அந்த நிலையை யில் தமயந்தியைக் கண்டதும் எவ்வளவு ஆச்சரியப் பட்டிருக்கக் கூடுமென்று சொல்லவா வேண்டும்?

ஒரு சில மணி நேரம் இருவரும் தத்தம் கதைகளை யெல்லாம் கூறியிருந்து விட்டு பிறகு செம்படவர்கட்கு ஸ்ரீமதி யோர் நல்ல பரிசையளித்தாள். (அதற்கு முன் னரே தமயந்தி தன் நகைகளனைத்தையும் அவர்களுக் குக்கொடுத்து விட்டாள்) பின் தோழிகளும் வேலைக் காரரும் காயல் வழி ஸ்ரீமதியி னில்லம் சேர்ந்தனர்.

* * *

இவ்வாறு பெற்ற கூட்டுறவின் பின்னர் ஸ்ரீமதியும் தமயந்தியும் பண்டைய இளம் தோழிகள் போல் பழக ஆரம்பித்தார்கள். இஞ்சினீயரும் (ஸ்ரீமதியின் கணவர்) அவர்களுறவைப் பெரிதும் மதித்து மகிழ்ந்து வந்தார். அப்படிப்பட்ட நாளிலே ஒரு நாள் ஒரு மலையாளத் தினசரிப் பத்திரிகையில்—அடியில் வரும் விஷயம் காணப்பட்டது.

கலி பிடித்த நளன்

தமயந்தியைத் தேடிப் பிரலாடம்

எப்பொருளுக்கு மிச்சையில்லை

(நமது நிருபர்)

தென்காசி,

இவ்வூர் கொல்லர் சேரியில் கடந்த சில தினங்க ளாக ஓர் பைத்தியக்காரன் காணப்படுகின்றான். அவன் யார், எவ்வூரினன், எவ்வாறு அங்கு வந்தானென்ப தொன்றும் எவருக்கும் தெரிந்தபாடில்லை. தோற்றத்

தில் வெறி பிடித்த பயித்தியக்காரனாயிருந்தாலும் உற்று நோக்குமிடத்து நன்னிலையிலிருந்து புத்திமயங்கிப் போய்விட்டதாகத் தெரிகிறது ஒரு காலத்தில் அவன் அழகான வடிவைப் பெற்றிருக்க வேண்டும். அழுக்கடைந்த வேட்டித் துண்டும், புழுதியும் அவன் உடம்மை மூடியிருக்கின்றன. அவன் எதிலும் நாட்ட முடையவனாகக் காணப்படவில்லை. எந்தப் பொருளையும் உட்கொள்ளுவதாகவும் தோற்றவில்லை ஓயாது "தமயந்தி" என்றாவது "நீயா பிராது போட்டாய்" என்றாவது கூறுகிறதைத் தவிர வேறு வார்த்தைகளை வெளியிடுவதாகக் காணோம் பொதுவாக அவனைப் பார்த்தால் கலி பிடித்த நளனென்றே கூற வேண்டும். அவன் சாயலைப் பார்த்தால் வாடி வதங்கிய பூப் போல் காணப்படுகின்றான்.

இச் செய்தியை வாசித்ததும் தமயந்திக்குப்பெரிய சந்தேகம் உதித்தது. அவள் பன்முறை அச் செய்தியைப் படித்தாள். படிக்கப்படிக்க செய்தியால் தலை "கறங்கிற்று." கலியுக நளனைத் தோற்றுபவன் தன் காதலனாகவே இருக்கலாமோ என்ற ஆசங்கை யெழுந்தது. உடன் மீண்டும் பத்திரிகையைப் படித்தாள். அப்பால் "ஆம். ஒவ்வொரு செய்தியையும் பார்க்கும்போது பயித்தியக்காரனின் செய்கைகள் என் கதையையே பொருந்தி இருக்கின்றன" என்று தேர்ந்தாள். உடன் ஸ்ரீமதியிடம் சென்று "தோழி! இதில் குறிப்பிடப் பட்டிருப்பவர் அநந்த கிருஷ்ணனென்பதற்கு என்ன தடை" என்றாள். இதனைக் கேட்ட ஸ்ரீமதி—என்ன? அநந்த கிருஷ்ணனது உடம்பு திருவனந்தபுரத்தில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றதன்றோ?

தமயந்தி:—அவ்வுடம்பு ஆநந்த கிருஷ்ணனுடைய தென்பது யூகம்தானே?

ஸ்ரீமதி யோசித்தாள். அப்பால் அடுத்த நாள் இருவரும் இரகசியமாக தென்காசி சென்றார்கள். அங்கு கொஞ்சம் தேடிய பின்னர் பைத்தியக்காரன் எதிர்ப்பட்டான் அவனைப் பார்த்தாள் தமயந்தி. அவளுடைய இருதயம் "தமயந்தி உன் காதலன் காட்சியா இது? அவன் பைத்தியத்தாலுழல்வதைப் பார்" என்றடித்தது. உடனே டிரைவர் மூலம் அவனைப் பிடித்து அங்குள்ள சத்திரத்திற்குக் கொண்டு சென்று சேர்த்தாள். பின்பு அவனை நீராட்டினார்கள்; அப்பால் நல்லாடை புனைவித்தார்கள். பின் தமயந்தியின் நாமம் பன் முறை அவன் முன்னால் உச்சரிக்கப்பட்டது. அதற்கு அவனும் பல முறை பதில் கூறினான் அப்பால் வெங்கோபாசாரியின் நாமம் சொல்லப்பட்டது. பைத்தியக்காரன் அப்போதெல்லாம் பரக்கப்பரக்க விழித்தான் உண்மையில் பயித்தியமில்லாத ஒருவன் பெருங் கலக்க மடைந்தால் எவ்வாறு விழிப்பானோ அவ்விழிப்பையே யொத்திருந்தது அவனது பார்வை. பயித்தியக்காரன் விழித்ததோடமையாமல் "தமயந்தி" "நீயா பிராது போட்டாய்"- ஆகிய இரண்டையும் தவிர வேறு சில வார்த்தைகளையுங்கூறலுற்றான். அவை தமயந்திக்கும் அவனுக்கும் இரகசியமாக நடந்த சிலநிகழ்ச்சிகளை குறித்தனவாகும். ஆகவே பைத்தியக்காரன் ஆநந்த கிருஷ்ணனேயென்பதற்கு சந்தேக முண்டா?

ஸ்ரீமதியும் தமயந்தியும் அன்றிரவு தென்காசியில் தங்கி ஒரு சுதேசி வைத்தியரிடம் அந்தப் பைத்தியக்காரனை சிகிச்சிக்கச் சொன்னார்கள். வைத்தியர்

சில ரசாயனப் பொருட்களைக் கொடுத்தார்; பைத்தியக் காரன் நன்றாகத் தூங்கினான். தூக்கம் கும்பகர்ண சேவை யாகவே இருந்தது. சுகமாகத்தூங்கி எழுந்ததும் அவனு டைய பைத்திய நிலைமை சற்றுக் குறைவுற்றது. இங்கு, ஒருவன் சில நாட்கள் தொடர்ந்து தூங்காமலும் கவலை மிகுதியால் கலங்கியு மிருப்பானென்றால் அவனுக்குப் பைத்திய மேற்பட்டுவிடு மென்பதனை வாசகர்கள் அறி தல் வேண்டும். ஆநந்த கிருஷ்ணனின் மனதை, தமயந்தி யால் தள்ளப்பட்டதும் கஜபதியால் ஏசப்பட்டதும் வெங்கோபாசாரியால் அவமதிக்கப்பட்டதும் இடி விழுந் தாற் போல தாக்கியிருக்க வேண்டும்; அதல் பற்றியே அவன் பித்தனாக ஓடியிருக்கின்றான். நிற்க.

தென்காசியில் ஆநந்த கிருஷ்ணன் சில நாட்கள் சிகிச்சிக்கப்பட்டதும் நூற்றுக்கு ஏன்பது புத்திதெளி ந்து விட்டான். அப்போது தமயந்தி அவன் முன்னால் சென்று கவலை குளித்துக் கொண்டிருக்கும் முகத்தோடு 'ஐயா"வென்றாள். என்றது தான்! ஐயோ! என்னென் போம்! ஆநந்த கிருஷ்ணன் கூர்ந்து ஒரு பார்வை பார்த் தான் தமயந்தியை. ஆ! யார் சித்தம் தான் கலங்காது? யார்தான் கவலை கொள்ளார்கள்? பன்னூறு வருடம் கொலைத் தொழிலே பழகியிருந்தாலும்: காட்டில் காணும் கொடும் வேங்கையாகவே வாழ்ந்து வந்தாலும் அக்காட் சியால் மனம் இளகாதிருப்பானோ? ஆநந்த கிருஷ்ணன் ஒரு பார்வை பார்த்துத் தன் முன் நிற்பவள் தமயந்தியே என்று உணர்ந்ததும் பச்சைப் பசலை அழுவது போல் வாய் விட்டுக் கோவென்றழுது விம்மி விம்மி எல்லோர் மனதையும் கரைத்து விட்டான். சற்றேறக்குறைய முக் கால் மணி நேரம் அவன் அழுததையல்லாது வேறொன்

றும் செய்யவில்லை. அவன் வாய் நெடுநேரமாக என்னென்னமோ உளறிற்று. அப்பால் சோர்ந்து விழுந்தான்; மூச்சில்லை. எல்லோரும் திகைத்தனர். தமயந்தி "ஐயோ மீண்டுமா என் வயிற்றிலிடி" என்று கத்தினுள்.

(முந்தி தமயந்தி ஆநந்தகிருஷ்ணனை அணுகுவதற்கே நாணத்தைக் காண்பித்தாள். இப்போது எவர் முன்பும் அவனுக்காக அழத்தொடங்கி விட்டாள். இத்தனை துணிச்சலை யுண்டுபண்ணியவர் கஜபதி யல்லவா?)

அத்தியாயம் 10

"தமயந்தி நீயா"

கஜபதியை முன்னொரு அத்தியாயத்தில் விட்ட பின்னர் கதியென்னவாயிற்றென்பதை நாம் கவனிக்க வேயில்லை. "ஆநந்த கிருஷ்ணன்" இறந்ததும் தன் சனியொழிந்தது என்று (வீட்டுக்குப் போகும் வேளை நெருங்கி விட்ட மாணவர்களைப் போல்) சந்தோஷங் கொண்டிருந்தார் கஜபதி தாத்தா. வெங்கோபாசாரியாரும் தம்மால் சீர்திருத்த வேகம் திருவனந்தபுரத்தை விட்டு ஒழிந்து போய் விட்டதாக இறுமாப்புக் கொண்டார். ஆனல் தமயந்தியும் காணமற் போய் விட்டாளென்ற செய்தி செவியில் நுழைந்ததும் கஜபதியும் துணைவர் இன்ஸ்பெக்டரும் எய்திய கவலைக்கு எல்லையே இல்லை. இருவரும் தமயந்தியை ஊர் பூராவாகத் தேடினுர்கள். குளம், கிணறு, கால்வாய்கள் ஆறு முதலியவற்றிலெல்லாம் கண்ணையோட்டினுர்கள். பக்கத்துக் கிராமங்களில்

எங்கேனு மிருக்கின்றுளா வென்றும் பார்த்தார்கள். பல மரக் கிளைகளிலும் கண்கள் போயின. ஆனால் எந்தப் பிரயாசையும் பயனளிக்க வில்லை. ஆதலால் இருவரும் என்ன செய்வதென்று அறியாது திகைத்து அவர் முகத்தை இவர் பார்த்தவண்ணம் இருந்தனர்.

* * *

அந்தோ! கஜபதி இப்போது ஏகாங்கியாய்விட்டார். எப்படி யெப்படியோ, யார்யாரை வஞ்சித்தோ பணந்திரட்டிப் பெரிய தனவந்தரானார்; சாஸ்திரிப்பட்டமும் பெற்றார். குடும்பத்தையும் பெரிது படுத்தினார். ஆனால் கடைசியில் மனைவி போனாள்; மருமகள் போனாள்; மகன் போனான்; பேரன் போனான்; இறுதியாக எஞ்சியிருந்த பேத்தியும் போய் விட்டாள். அவருக்கு இல்லறத்தை விட்டு நீங்க மனமில்லாமற் போயினும் துறவியாக வேண்டிய அவசியம் வந்து விட்டது. இந்த நிலைமையில் ஏங்கியேங்கிக் கலங்கிக்கலங்கி நெஞ்சம் புண்ணானார் கஜபதி. ஐயோ! நல்ல நிலைமையில் வாழ்ந்திருந்த ஒருவர் தினந்தினம் கெட்டழிந்து போவதோடு துன்பத்தின் மேல் துன்பமாக அடைந்து கொண்டிருப்பதானால் ஏனோ கலங்கமாட்டார்? இந்த நிலைமை ஒரு பைத்தியக்காரனுக்கு வந்தால் கூடவும் மனம் பொறுக்க மாட்டானே!

பாவம்! கஜபதி எல்லையில்லாது தளர்ச்சியெய்திச் சோர்ந்தார். தான் தமயந்தியை ஆநந்த கிருஷ்ணனுக்கே கொடுத்து அவர்களுடன் இன்ப வாழ்வு வாழ்ந்திருந்தால் எவ்வளவு நலம் பெருகியிருக்குமென்று எண்ணி யெண்ணிக்கழிவிரக்கம் கொண்டார். ஆநந்த கிருஷ்ணனின் அழகிய முகமும், ஆற்றல் சார்ந்த பேச்சும், அமைதி

யான குணமும், ஆழ்ந்த புத்தியும். அரிய கல்வித் திறனும் அவர் கண்களில் பிரகாசித்தன. தமயந்தியின் தனிக்காதலும் தளர்ச்சியறத் தவழ்ந்தது அவரிருதயத் தளிரில். மூக்கு பெரு மூச்செறிக்க மார்பு விம்மியெழப் பெரிதும் கவலை கொண்டார். நாளடைவில் வெளியிலிறங்குவதே பெரிய அவமானமாய்த் தோன்றியது. கண்டோரெல்லாம் "சாஸ்திரிகளே? பாவம்! தனியாகத்தானிருக்கின்றீர்களோ? இந்தத் தள்ளாத காலத்தில் என்னென்ன தொல்லைகள்?" என்றபோது அவர் மனம் கொதித்த கொதிப்பை சொல்ல முடியுமா?

இங்ஙனம் கவலையிலேயே சில மாதங்கள் வாழ்ந்திருந்தும் கஜபதி திருவனந்தபுரத்தை விட்டுத்தன் ஜாகையை கொட்டாரைக்கரை என்ற விடத்திற்கு மாற்றினர். அவ்வாறு செய்ததின் நோக்கம் அமைதியான வாழ்க்கை நடத்துவதும் பிறர் பழிப்புக்காளாகாமலிருப்பதுமாகும்.

கொட்டாரக்கரையில் ஒன்றிரண்டு வாரம் தங்கிய போது அங்கு சென்னையிலிருந்து புதிதாய் வந்திருந்த ஒரு பிரம்மஞான சங்க பிரசாரகர்க்கும் அவருக்கும் நட்பு ஏற்பட்டது. அந் நட்பு வளர்ந்து சில நாட்களுக்குள் கஜபதியை பிரம்மஞான சங்கத்திற்கிழுத்து விட்டது. ஒன்றிரண்டு வாரங்களில் கஜபதி பிரம்மஞானி யென்று விளம்பரம் செய்யப்பட்டார். எக்காரணம் பற்றியோ கஜபதிக்கு அந்த சங்கத்தில் அதிகமான பற்று ஏற்பட்டது. ஒரு கால் கடைசிநாளை ஆன்மீக விஷயத்தில்— அதிலும் தற்காலத்துக்குத் தகுந்தபடி ஆங்கில முறையில் சீர்த்திருத்த மென்று கருதப்படுகின்ற வழியில்—

கழிக்கலாமென்று நினைத்தாரோ என்னமோ? கஜபதி பெரிய பிரம்மஞானி ஆனார். மேற் குறித்த பிரசாரகர் போன பிறகு சில கூட்டங்களையே நடத்தினர். வெளியூர் களிலிருந்து அவ்வியக்கத் தொண்டர்களையும் தருவித்தார்.

* * *

கொட்டாரக் கரையில் இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கவும், ஸ்ரீமதியின் வீட்டில் தமயந்தியும் ஆநந்த கிருஷ்ணனும் சீர்பெருக்கிக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீமதியின் வீட்டிற்கு சமீபம் பார்ப்பனர் எவருமில்லையாகையாலும், அவ்வூர் வாசிகள் வெளியுலகத்தை யறியாதவர்க ளாகையாலும் காதலர்களின் கதைகளை அவர்களாலறிந்து கொள்ள முடிய வில்லை. எல்லோரும் யாரோவிருவர் எஞ்ஜினீயருடைய வீட்டில் தங்கிவருகிறார்களென்றும் அதனையொரு சாதாரண சம்பவமென்றுமே நினைத்தார்கள். அந்த நிலைமையில் ஆநந்த கிருஷ்ணன் இரகசியமாகத் தானும் தமயந்தியும் மீண்டும் சந்தித்து விட்டதாக நந்தன் கோட்டு தாமோதரனுக்கு (5-ம் அத்தியாயம் பார்க்க) ஓர் கடிதம் எழுதினான். தாமோதரன் அக் கடிதத்தைக் கண்டதும் மூழ்கிய போச்சரியப் பெருவெள்ளத்திற்கு ஓர் அளவில்லை. "என்ன! இறந்த —பாணியத்தில் புதைக்கப்பட்ட—ஆநந்த கிருஷ்ணனும், மறைந்துபோன எட்டாத தமயந்தியும் ஒன்றாகக் கூடவா" வென்று ஆச்சரியப்பட்டான். அப்பால் ஒரு கணமாவது தாமதியாது ஒரேயடியாய் ஸ்ரீமதி வாழ்ந்த கிராமத்தையண்மினன். அங்கு காதலரிருவரும் வாழ்வது தெரிந்தது. உடனே அவன் கஜபதியின் வரலாற்றை அறிவானுகையினுல் காதலர்களிடமும் ஸ்ரீமதியிடமும் சில வார்த்தைகளைக் கூறி விட்டு கொட்டாரக்

கரைக்குச் சென்றான். அங்கு ஒரு நண்பரைப் பிடித்து அவரிடம் சில இரகசியங்களைச் சொல்ல, அவர் அவ்வண்ணமே நடப்பதாக ஒப்புக் கொண்டார்.

அந் நண்பர் (குணசேகரர் என்பது அவருடைய பெயர்) கஜபதியிடம் சென்று குமரபுரத்தில் சீர்திருத்த முறையில் ஒரு கல்யாணம் நடைபெறப் போவதாகவும் குமரபுரத்தில் அதுவே முதல் கல்யாணமாகையினாலே அவர் தலைமை வகித்து நடாத்த இசைய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். கஜபதி கூட்டங்களில் பேசிப் பழக்க முடையவரல்ல; ஆகையினால் தான் கல்யாணத்திற்குச் செல்வதில் ஆட்சேபணையில்லை யென்றும் ஆனால் தலைமை வகிக்க முடியாதென்றும் கூறினார். குணசேகரர் அதற்கேற்ற பதில்களைக் கூறி அவருடைய சம்மதத்தைப் பெற்றுவிட்டார்.

அவ்வண்ணமே கல்யாணத்திற்கான எல்லாவேற்பாடுகளும் செய்யப்பட்டு குமரபுரத்தில் ஏராளமான மக்கள் கூடினர். சீர்திருத்த முறையில் கல்யாணமென்ற அளவிலே வந்து குழுமிய ஜனங்கட்குக் கணக்கில்லை. விசேஷமாக அமைக்கப்பட்டிருந்த கொட்டகை முழுவதிலும் வெளியிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து கூடினர். கூட்டத்தில் ஸ்ரீ ம தி யு ம் விஜயம் செய்திருந்தாள். கஜபதி நல்ல ஆடைகளணிந்து நாகரிகமாகக் கூட்டத்தின் நடுவிலமர்ந்தார். ஒருவருக்காவது திட்டமாக மணமகன் இறந்ததாக யெண்ணப்பட்ட ஆநந்தகிருஷ்ணன்தா னென்பது தெரியாது.

* * *

மணமகன் கூட்டத்தின் நடுவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்தான். அவன் உடம்பு

நன்ருக இளைத்துப் போயிருந்ததினுலும், இறந்துபோய் விட்டதாக நினைக்கப்பட்டுவிட்டதாலும், தாமோதரனுல் இயன்ற அளவு ஆளடையாளம் தெரியாமல் "ஜோடிக்கப்"பட்டிருந்ததினுலும் ஒருவராவது அவனை சரியாக உணர்ந்துகொள்ளவில்லை. அவன் வந்து சிறிது நேரத்துக் கப்பால் மணமகள் தோன்றினுள். அவள் முகத்தைக் குனித்துகொண்டிருந்ததோடு முக மூடியு மணிந்திருந்ததனுல் கூடியிருப்பவர் கண்ணில் விழவில்லை.

இவ்வாறு எல்லோரும் பிரசன்னமானவுடன் கஜபதி யெழுந்திருந்து மணமக்களை உறுதிமொழி வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார். மணமக்கள் வெளியில் விளங்காத முறையில் ஆங்கிலத்தில் வாசித்தனர். அப்பால் கஜபதி அடியில் வருமாறு பேசினர்:—

சகோதரிகளே! சகோதரர்களே!!

"சீர்திருத்தமுறையில் கல்யாணம் நடைபெறுகின்ற இந்தத் தருணத்தில் தலைமை வகிக்கப்பெரிதும் மகிழ்ச்சி யெய்துகின்றேன். என்போன்ற ஒருவருக்கு இத்தகைய சந்தர்ப்பம் கிடைத்திருக்கலாகாது. ஆதியில் என்னை சில நண்பர்கள் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டபோது ஆக்ஷேபித்தேன். ஆனுல் அப்பால் அவர்கள் வற்புறுத்தியதால் பிரம்மஞான சங்கப்பற்றுடைய சீர்திருத்த வாதியென்ற அளவில் இசைந்தேன். எனக்கு நன்ருகப் பேசிப் பழக்கமில்லை; ஆதலால் நீங்கள் பெரிய பேச்சை யென்னிடமிருந்து எதிர்பார்க்கவேண்டாம். சுருக்கமாகக் கூறினுல் கல்யாணங்கள் இது போன்ற சிக்கனமுறையில் நிகழவேண்டும் என்கின்றேன். இன்று இந்து சமூகத்தில் கல்யாணமென்ற வீண் செலவில் அழிகிறபணம் ஏராளம். பல ஐரோப்

பியர்கள் கல்யாணம் செய்வதால் அழியும் இந்துக் குடும்பங்கள் பல என்கின்றனர். நம் அனுபவத்திலும் கல்யாணத்துக்குப் பிறகு பல குடும்பங்கள் அவதிப்படுவவைக் காண்கின்றோம். இந்த நிலைமையில் நாம் நம் செலவை சுருக்கி இதுபோன்ற சிக்கன முறையைக் கையாண்டாலென்ன? இந்தக் கல்யாணத்தில் முதலாவது நான் காண்கின்ற விஷயம் இதுதான். இரண்டாவதாக மணமக்கள் சங்கோசமின்றி தத்தம் ஒப்பந்தங்களை வாசித்து நம்முன் தங்கள் உறவைக் காண்பித்துக்கொள்கிறார்கள். அதுவும் பாராட்ட வேண்டியதே. வீணாக ஒரு பார்ப்பானை அழைத்து வீடுமுழுதும் புகையைப் போட்டு வந்திருப்பவரைக் கண்ணாலும் நாசியாலும் தண்ணீர் வடிக்க செய்து, வீணான சொற்களை சொல்லி நேரத்தைப் பாழாக்கிக் குழப்புவதைப் பார்க்கிலும், நல்ல காற்று வீசுகின்றதும் தெளித்த பன்னீர் நெற்றெனக் கமழ்வதுமாகிய இதுபோன்ற கொட்டகைகளில் இவ்வாறு மணம் செய்துகொள்வதில் என்ன ஆக்ஷேபனை? ஆகவே நான் மிகுந்த மகிழ்ச்சியோடு—திருகரண சுத்தியோடு—இக் கல்யாணத்தை நடத்திவைக்கிறேன். தம்பதிகளிருவரும் நல்வாழ்வு பெற்று இனிது வாழ ஆசைப்படுகிறேன்.

"தம்பதிகளே! நீங்கள் இந்த குமரபுரத்தில் முதன் முதலில் இப்படிப் பட்ட சீர்திருத்தத்தைப் பிரகடனம் செய்வதற்காகவும், என்னை அந்த சமயத்தில் தலைமை வகிக்கும்படி அழைத்ததற்கும் நன்றி கூறுகிறேன். உங்கள் சீர்திருத்த முறை போற்றத்தகுந்ததாகும். எனக்குத் தங்களிருவரின் வரலாறும் நன்கு தெரியாதாயினும் என்னால் புகழாமலிருக்க முடியவில்லை.

"இந்த விடத்தில் மணமகட்கு ஒரு தனியான வார்த்தை கூறுகிறேன்—அவர் தம் முகமூடியை எடுத்து விட்டுக் கூட்டத்தில் தைரியமாக உட்கார்ந்திருக்கவேண்டு மென்பதே யது. சீர்திருத்த மென்ற ஊன்று கோலைப் பலமாய் பிடித்துக்கொள்ளுகிற ஒருவருக்கு முகமூடி யணிவது தருமா" வென்று கேட்கின்றேன்.

இந்த பேச்சு முடிவதற்குள் கூட்டத்திலிருந்த பலர் "சபாஷ் சபாஷ்" என்று கூறத் தொடங்கினர். உடனே மணமகளின் பக்கத்திலிருந்த ஒருவருடையகை முகமூடியை இழுத்தது. உடன் எல்லோரும் அவளை நோக்கினர். கஜபதியும் பார்த்தார். ஆ! என்ன மாற்றம்! கஜபதி ஒரு நிமிஷம் பார்த்ததும் மணமகளாய் வந்திருப்பவள் தன் தமயந்தி யென்று தெரிந்தது. தெரிந்ததும் கண்ணைத் திறந்து வாயைத் திறந்து கல்போல் நின்றுகொண்டு "தமயந்தி நீயா" என்று கூவினர். உடன் கூட்டத்திலிருந்த பலர் "கொல்" என்று நகைத்தார்கள் பலருக்கு அப்போது தான் மணமக்கள் நீண்ட நாளாகப் பத்திரிகையி லடிப்பட்ட ஆனந்தகிருஷ்ணன், தமயந்தி என்பது தெரிந்தது. எல்லோரும் இறந்துபோன மணமகன் உயிர்த்து வந்ததற்காக வியந்தனர்; கூட்டம் முழுதும் எழுந்திருந்து பிரசங்கமேடையை நோக்கி நகர்ந்தது. கஜபதி ஒன்றும் பேசயேலாது நாற்காலியிலேயே உட்கார்ந்திருந்தார். கொட்டகை முழுதும் சிரிப்பும் பரபரப்பும் வியப்பும் சத்தமும் நிறைந்தது.

* * *

பத்திரிகைகாரர்கள் ஒரு விசேஷத்தையாவது விட மாட்டார்களல்லவா? அப்படியிருக்க இறந்த ஒருவன்

மீண்டு வந்ததும், இழந்த காதல் உயிர்பெற்றெழுந்ததும், காதலர் கூட்டுறவுக்குக்கோடாரியாயிருந்த கஜபதி தாமே விஜயம் செய்து கல்யாணம் செய்து முடித்ததும் எவ்வளவு முக்கியமாய்த் தோன்றுது? தமயந்திக்குத் திருமணம் நடந்த அன்றைக்கே திருவாங்கூர் பத்திரிகைகள் பத்தி பத்தியாகப் பற்பல தலைப்புகளின் கீழ் கதை முழுவதையும் வெளியிட்டு விட்டன. ஊருக்குள்ளும் வெளியிடங்களிலும் எல்லோரும் அக்கதையைப் பேசிக் கொள்ளலானார்கள். ஸ்ரீமதியின் வீட்டுக்கு வரத்தொடங்கிய ஜனக்கும்பலுக்கு அளவில்லை. கஜபதியைத் திட்டிய பார்ப்பனர்களுக்கும் வைதீகர்கட்கும் எல்லை சொல்லமுடியாது. ஆனால் சீர்திருத்தவாதிகள், அறிவியல் வாதிகள், நாகரிகம் படைத்த அறிஞர் எல்லாம் புதுத் தம்பதிகளைப் புகழ்ந்த புகழ்ச்சி வைதீகர்களின் ஏச்சைப் பன்மடங்கு கடந்து விட்டது. தமிழ் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் மலையாள நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தும் எண்ணிறந்த பாராட்டுக் கடிதங்கள் பிரவகிக்கத் தொடங்கின. பத்திரிகைகள் பல, தம்பதிகளின் புகைப்படங்களைக் கேட்டுக் கடிதங்கள் எழுதின. பல போட்டோக்காரர்கள் தமயந்தி—ஆநந்த கிருஷ்ணர்களின் படங்களைப் பிடித்துச் சென்றார்கள். பல பொதுக் கூட்டங்களில் இத்தம்பதிகள் பாராட்டப்பட்டார்கள். நந்தன் கோட்டு பெண்கள் சங்கமும், புத்தன் சந்தை வைதிக மொழிப்புக் கழகமும், தைக்காட்டுக் கலப்புமணப் பிரசாரக் கோஷ்டியாரும் பெரும் பெரும் கூட்டங்களைக் கூட்டித் தம்பதிகட்கு மலர் மாலை சூட்டி ஆமோதித்தார்கள்; அதோடு பல உவகைப் பத்திரங்களையும் வழங்கினார்கள்.

இந்தப் பாராட்டுகளிலெல்லாம் கஜபதிக்குப் ஒரு பங்கு கிடைத்த தென்பதைக் கூறவா வேண்டும்? தள்ளாத காலத்துக் கிழவர் கஜபதி இந்தப் புகழ்ச்சிகளை யெல்லாம் பார்க்கப்பார்க்க சந்தோஷக்கடலுள் ஆழ்ந்தார். சில நாட்களுக்குள் வைதீகர்கள் ஜாதி பேதம், தீண்டாமையென்று கூறுவதெல்லாம் வீண் பைத்தியமே யென்றும், கலப்பு மணம், விதவாவிவாகம் ஆகியவற்றைச் செய்வதில் எந்த விதமான அபாயமும் வந்து விடப்போவதில்லை யென்றும் அத்தகைய சீர்திருத்த முறையை ஆதரிப்பார் உலகில் கோடி கோடியிருக்கின்றன ரென்றும் தெரிந்துகொண்டார். அதோடு சில நாட்கள் பொறுத்திருந்து தமயந்தி ஆநந்த கிருஷ்ணனாகிய இருவரையும் பார்த்தபோது இருவரும் அவர்களுடைய கூட்டுறவால் அழகும் பூரிப்பும் சந்தோஷமும் அறிவும் பெருக்குவதாகக் கண்டாரேயல்லாது எத்தகைய கெடுதியையு மடைந்து விட்டதாகக் காணவில்லை; ஆகவே தமயந்தி கல்யாணத்தில் எத்தகைய மனவருத்தமும் கொள்ளாது அவளோடு இன்ப வாழ்க்கை வாழலானார் கஜபதித் தாத்தா.